பக்கங்கள் : 16+VI=22

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 24 ஞாயிற்றுக்கிழமை (08-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:257

# குடாநாட்டில் 56 பேருக்கு 3A சித்தி
# யாழ். இந்து-11, வேம்படி மகளிர்-10

யாழ்ப்பாணம்,ஓக.8

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.

நேற்று மாலை முதல் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாகவும் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

நேற்று முற்கொண்டு கிடைத்த பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 56 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி ('ஏ' சித்தி) பெற்றிருக்கின்றனர். அண்மைக்காலப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் இது மிக முன்னேற்றகரமானது என்று கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் 11 பேர் அதிவிசேட சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் முன்னணியில் திகழ்கின்றனர். அடுத்த நிலையில் வேம்படி மகளிர் கல்லூரி உள்ளது. அங்கு பத்து மாணவிகள் மூன்று பாடங்களிலும் அதி விசேட சித்திகளைப் பெற்றிருக்கின்றனர்.

**பிரத்தியேகச் செய்தி**

யாழ். இந்துக் கல்லூரி மாணவனான சதாணந்தசர்மா ரமணன் கணிதப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தையும் தேசிய மட்டத்தில் 7ஆவது இடத்தையும் பெற்றிருக்கின்றார்.

உயிரியல் பிரிவில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் சிவகுமாரன் சயந்த் மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 37 ஆவது இடத்தையும் பெற்றிருக்கிறார்.

கலைப்பிரிவில் யாழ். இந்துமாணவன் குமாரவடிவேல் குருபரன் (2ஏபி) மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பெற்றார். இவர் ஆங்கிலமொழியில் பி சித்தி பெற்றுள்ளார்.

பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்டத்தில் மூன்றாவது இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெற்றிருக்கிறது. அங்கிருந்து ஆறு மாணவர்கள் 3 'ஏ' சித்தி பெற்றிருக்கின்றனர்.

முற்கொண்டு கிடைத்த பெறுபேறுகளின்படி 3 'ஏ' சித்தி பெற்ற மாணவர்களின் பெயர்கள் வருமாறு:-

**யாழ். இந்துக் கல்லூரி**

தங்கராஜா ஜனகராஜ் - கணிதம் (2.5489), சச்சிதானந்தம் மயூரன் - கணிதம் (2.4370), கோபாலகிருஷ்ணன் நிஷாந்தன் - கணிதம் (2.6526), சதானந்தசர்மா ரமணன் - கணிதம் (3.0554) (மாவட்டம் - முதலாவது, தேசியம் - 7ஆவது), கனகநாயகம் சயந்தன் - கணிதம் (2.7655), இராமநாதன் தனேஷன் - கணிதம் (2.6488), துரைசிங்கம் கேசவன் - உயிரியல்

(16ஆம் பக்கம் பார்க்க)

# பாலங்களைத் திருத்த வசதியாக
# படைநிலைகள் பின் நகர்த்தப்படும்

## செயலக அதிகாரிகளுடனான சந்திப்பில் யாழ். தளபதி இணக்கம்

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்8

**யாழ். மாவட்டத்தில், பிரதான வீதிகளில் நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படும் பாலங்களைப் புனரமைப்பதற்கு வசதியாக அவ்விடங்களில் அமைந்திருக்கின்ற காவல் நிலையங்களைப் பின் நகர்த்துவதற்கு படைத்தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.**

**பாலங்களில் காணப்படும் காவலரண்களை சுமார் 30 மீற்றர் தொலைவுக்கு நகர்த்தி திருத்தவேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இணங்கியுள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் போரினாலும் அனர்த்தங்களினாலும் சேதமடைந்துள்ள பெரிய பாலங்களைப் புனரமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவும் கலந்துகொண்டார்.

செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளையும், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி, புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் சிரேஷ்ட பொறியியலாளர் செல்வி நல்லதம்பி ஆகியோரும் கூட்டத்தில் பங்குகொண்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# தன்னாட்சி அதிகார சபைக்குப் பதிலாக மாற்றுத் திட்டம்; அரசு பரிசீலிக்கிறது

யாழ்ப்பாணம்,ஓக.8

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபை யோசனைக்கு மாற்று யோசனைத் திட்டம் ஒன்றை அரசு ஆராய்ந்து வருகின்றது என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாற்று யோசனைகளை ஜனாதிபதியின் வழிகாட்டலில் சட்டநிபுணர் குழு ஒன்று தயாரித்து வருவதாகவும் -

இப்புதியதிட்டம் நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்குச் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் -

அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் -

சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வேயை ஜனாதிபதி மீண்டும் அழைத்துள்ளார் என்றும் -

நோர்வேத் தூதர் ஊடாக இத்தகவல் நோர்வேத் தரப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும்-

செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.(ஐ-3)

# முற்றவெளியைத் தூய்மைப்படுத்தி பொழுதுபோக்கிடமாக மாற்ற முடிவு

யாழ்ப்பாணம்,ஓக.8

பற்றையும், புதரும், குப்பைகளும் மண்டிக் கிடக்கும் யாழ். முற்றவெளிப் பிரதேசத்தைத் தூய்மைப்படுத்தி நகர மக்களின் பொழுது போக்கிடமாக மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது.

முற்றவெளியைச் சுத்திகரிக்கும் வேலைகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாகக் குப்பைகள், பற்றைக்காடுகள் நிறைந்து இந்தப் பிரதேசம் காணப்படுவதால், அதனைப் பொதுமக்கள் பாவனைக்கு உட்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர்ந்து தமிழ் வளர்க்கும் நாகலிங்கத்துக்கு தலைவர் விருது

கிளிநொச்சி,ஓக.8

ஜேர்மனியில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிவரும் இரா.நாகலிங்கத்துக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் விருது வழங்கிக் கௌரவித்திருக்கின்றார்.

ஜேர்மனியில் புலம்பெயர்ந்துவாழும் ஈழத் தமிழர்கள் மத்தியில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், தமிழ்ப்பற்றை வளர்ப்பதற்காகவும் அவர் ஆற்றிவரும் பணிகளுக்காக இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டிருக்கின்றது என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் வன்னியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வைபவத்தில் நாகலிங்கத்துக்கு புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட தங்க விருதை தலைவர் பிரபாகரன் வழங்கினார்.

இந்த வைபவத்தில் தமிழீழக் கல்விக் கழ

(16ஆம் பக்கம் பார்க்க)



ஆசிரியர் நாகலிங்கத்துக்கு தலைவர் பிரபாகரன் விருது வழங்கும் காட்சி.

**வெலிக்கடைக்கு மாற்றக் கோரி**

# யாழ். சிறையில் ராஜபக்ஷ உண்ணாவிரதப் போர்!

யாழ்ப்பாணம்,ஓக.8

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குத் தம்மை உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்யும்படி கோரி கிருஷாந்தி கொலை வழக்கு மரணதண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ யாழ். சிறைச்சாலையில் நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கில் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பான ஆள்கொணாவு வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணத்துக்கு கடந்த மாதம் 28ஆம் திகதி அழைத்து வரப்பட்ட ராஜபக்ஷ, யாழ். மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த 4ஆம் திகதி மீண்டும் அவர் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம், அவரை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அதன்படி யாழ்ப்பாணத்தில் இருந்து அவரைக் கொழும்புக்கு விமானப்படையின் விமானத்தில்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பண்பாட்டுப் பேரணியுடன் சிறப்புற நடந்த முல்லை. வலய தமிழ்த்தின விழா

முல்லைத்தீவு,ஓக.8

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் இவ்வாண்டுக்கான தமிழ்த்தின விழா பண்பாட்டுப் பேரணியுடன் கடந்த புதன்கிழமை சிறப்புற நடைபெற்றது.

மாலை 4 மணியளவில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முன்றிலில் இருந்து ஆரம்பமான பண்பாட்டுப் பேரணியில் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படம் தாங்கிய ஊர்தி முன்னே செல்ல தமிழர் தம் பண்பாடு, வரலாற்றைச் சித்திரிக்கும் ஈழத்துப் புலவர்கள், தமிழ்ப் பெரியார்கள், தமிழ் மன்னர்கள், ஆனையை அடக்கிய அரியாத்தை போன்றவர்களின் காட்சிப் புனைவுகளும், முல்லை மாவட்டப் பாடசாலை மாணவர்களின் காவடி, கோலாட்டம் போன்ற பாரம்பரிய நடன நிகழ்வுகளும் பின் தொடர்ந்து சென்றன.

பேரணி நிறைவிடத்தைச் சென்றடைந்ததும் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் பொதுச் சுடரையும் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தமிழீழத் தேசியக் கொடியினையும் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் கோட்ட, வலய மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் கல்விப்பணிப்பாளர் செ.சுப்பிரமணியம், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோர் விருதுகளை வழங்கினர்.

முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் 'பொதிகை' மலர் வெளியீடும் இடம்பெற்றது. (எ-201)





முல்லைத்தீவு கல்வி வலயத்தின் தமிழ்த்தின விழா பண்பாட்டுப் பேரணியின் சில காட்சிகள்.

# அமெரிக்கத் தளபதியின் வருகையோடு தமிழ் மக்கள் மனங்களில் போர்ப்பீதி

யாழ்ப்பாணம்,ஓக.8

அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதியின் யாழ்ப்பாண விஜயம் மக்கள் மத்தியில் மீண்டும் கொடிய போரின் நினைவுகளை உருவாக்கி உள்ளது. யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்ஜெனரல் வெலஸ் சீ.கிரிக்ஸன் அவர்களது யாழ்ப்பாண விஜயம் சமாதானத்தின்பால் நம்பிக்கை கொண்ட மக்களை மீளவும் யுத்தத்தின் கோர நினைவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது. தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட கொடிய யுத்தத்திற்கு முடிவு கட்டி நல்லெண்ண சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டும் நோக்குடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கேலிக் கூத்தாக்கும் வகையில் அரசு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் போருக்கான தனது வளத்தைப் பலப்படுத்தும் முன்னோடித் தயார்ப்படுத்தலாகவே இதனை நாம் கருதுகிறோம்; கண்டிக்கிறோம்.

இந்நடவடிக்கையானது அரசின் கையாலாகாத தன்மையையும் வரலாற்று ரீதியாக சிங்களத் தேசம் தமிழ் மக்கள் மீது காட்டி வருகின்ற பாகுபாடான பச்சைத் துரோகத் தன்மையையுமே கோடிட்டுக் காட்டுகிறது. இதைக்கூட சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளாததையிட்டு நாம் மிகுந்த வேதனையடைகிறோம். சீரழிந்த ஸ்ரீலங்கா தனது பொருளாதாரத்தை வளம்படுத்தவே புலிகளுடன் பேசுவோம், பேசுவோம் என உலக அரங்கில் பாசாங்கு செய்கிறது. தமிழர் வாழ்வில் நிரந்தர சமாதானம், நிம்மதியான வாழ்வு கிட்டாத வரையில் சிங்கள தேசத்தின் தலைவிதியை எவராலும் தீர்மானிக்கமுடியாது இதை சிங்களதேசமும் சர்வதேசமும் புரிந்து கொள்ளவேண்டுமென இவ்வறிக்கைமூலம் தெளிவுபடுத்துகின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-17)

## கூட்டமைப்பினருடன் பட்டதாரிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஓக.8

பட்டதாரிகள் நியமனத்தில் தம்மை உள்வாங்காமை தொடர்பாக யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத்தினர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்று முற்பகல் 10 மணிக்கு சந்திக்கவிருக்கின்றனர்.

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் இடம்பெறும் இச்சந்திப்பில் தமது பிரச்சினைகளை அவர்கள் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் எடுத்துக்கூறவிருக்கின்றனர்.

இதேவேளை -

சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 7 மணி முதல் யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டமும் இடம்பெறவுள்ளது. (ஜ-3-5)

## யாழ். சிறையில் கைதி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ். சிறைச்சாலையில் கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

குறிப்பிட்ட நபர் திருட்டுக் குற்றச்சாட்டு ஒன்றின சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த 30 மாதங்களாக தன்மீது எந்த விசாரணையும் இடம்பெறவில்லை என ஆட்சேபித்தே குறிப்பிட்ட நபர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

# நகரில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடுப்பதற்குத் திட்டம்

## புதிய மாநகர ஆணையாளரின் முதல் முயற்சி இது

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ். நகரின் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்ய விசேட திட்டம் ஒன்று யாழ். மாநகர சபையால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. புதிய திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்று மாநகர ஆணையாளர் கலாநிதி க. குணராசா தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி -

வீதிகளில் குப்பைகளை பொலித்தீன் பைகளில் சேகரித்து வைப்பது தடைசெய்யப்படும்.

சாப்பாட்டுக் கடைகளில் 'லஞ் சீற்' எனப்படும் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்படும். வாழை இலை அல்லது சுத்திகரிக்கப்பட்ட கோப்பை ஆகியவற்றை உணவு பரிமாறப் பாவிக்கவேண்டும் என்று உணவக உரிமையாளர்கள் அறிவுறுத்தப்படவிருக்கின்றனர்.

'லஞ் சீற்' பாவிப்பவர்களாக இருந்தால் சாதாரண கழிவுகளுடன் அவற்றை அகற்றாமல் தனியாக வேறுபடுத்தி அவற்றைத் தீயிட்டு அழிக்கவேண்டும் எனக் கோரப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

வீடுகள் மற்றும் விற்பனை நிலையங்களில் சேரும் கழிவுகளை உரப்பைகளில் இட்டு வீதியில் வைக்கவேண்டும். அவ்வாறு வைக்கப்படும் கழிவுகள் மாத்திரமே அகற்றப்படும். எனவே பொதுமக்கள் இது விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கி சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.

- என்றார் ஆணையாளர். (ஜ-3)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.8

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மீணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (3-5)

★ ★ ★

கொழும்பு,ஓக.8

காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மணற்காடு சைவ மகாசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துப் பிரதேச, ஊரக உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-30)

## நல்லூரில் இளங்கலைஞர் மன்ற இசை நிகழ்ச்சி

அரியாலை,ஓக.8

பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவ காலங்களில் இம்முறையும் தெய்வீக இசை நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நல்லூர் இளங்கலைஞர் மன்றம் மேற்கொண்டுள்ளது.

இந்த தெய்வீக இசை நிகழ்வுகள் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் திருவிழா காலங்களில் தினமும் மாலை வேளைகளில் இடம்பெறும் என்று மன்றப் பொருளாளர் எஸ். பாலசண்முகநாதன் தெரிவித்தார்.

இம்முறை இடம்பெறும் தெய்வீக நிகழ்வுகளில் உள்ளூர் மற்றும் வெளியூர்களைச் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-17)

# கல்வியியல் கல்லூரி மாணவரின் நியமனம் குறித்து ஆராயக் கூட்டம்

யாழப்பாணம்,ஓக.8

வடக்கு - கிழக்கில் உள்ள கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய பயிலுநர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் திட்டம் குறித்து ஆராய்வதற்கான விசேட கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்துக்கு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் விஞ்ஞான, கணித பாடங்களுக்கு வெற்றிடங்கள் இல்லாத காரணத்தால் அப்பிரிவுகளில் சித்தியடைந்தோர் வன்னி மாவட்டத்தில் நியமிக்கப்படுவர் என்றும் -

யாழ்ப்பாணம், வவுனியா கல்விக் கல்லூரி மாணவர்களுக்கு வன்னி மற்றும் தீவகத்தில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் -

கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-3)

# கோப்பாய்ப் பிரதேசத்தில் மாடுகளுக்குத் தடுப்பூசி ஏற்றல்

அச்சுவேலி,ஓக.8

கோப்பாய் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான நோய்த் தடுப்பூசி மருந்து நாளை முதல் 19ஆம் திகதி வரை பத்து நிலையங்களில் வைத்து ஏற்றப்படவுள்ளன.

தொண்டை அடைப்பான் நோய் தீவிரமாகப் பரவுவதால் 4 மாதத்துக்குக் குறைந்த வயதுடைய கன்றுகளுக்கும் சினைப்படுத்தப்பட்ட பசு மாடுகள் தவிர்ந்த ஏனைய மாடுகளுக்கும் தடை மருந்து ஏற்றப்படுகின்றது.

தடைமருந்து ஏற்றப்படும் இடங்களின் விவரம் வருமாறு:-

நாளை அச்சுவேலி விக்கினேஸ்வரா சன சமூக நிலையம், வாதரவத்தை அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு.

10 ஆம் திகதி, பத்தமேனிப் பிள்ளையார் கோயிலடி.

11ஆம் திகதி - நவக்கிரி எல்லாளன் சன சமூக நிலையம்

12ஆம் திகதி - ஆவரங்கால் மத்திய சன சமூகநிலையம்.

13ஆம் திகதி - சிறுப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் அலுவலகம்.

16ஆம் திகதி - உரும்பிராய் திருக்குமரன் சனசமூக நிலையம்.

17ஆம் திகதி - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்திற்கு அருகில்.

18ஆம் திகதி - கலைமாணி அம்மன் கோயில்.

19ஆம் திகதி - கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சனசமூக நிலையம். (3-11)

## விளையாட்டு நிகழ்வுகள்

காரைநகர்,ஓக.8

காரைநகர் வியாவில் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வியாவில் ஐயனார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

க.சோமசேகரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (3-73)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.8

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 49ஆவது அகவையை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் தடகள விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

விளையாட்டுக்கழகத் தலைவர் வேராகுலன தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்குமார் கலந்துகொள்வார். (3-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.8

நல்லூர் முருகன் சனசமூக நிலைய நவீன முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறும்.

நிலையத் தலைவர் க.குமாரசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி அ.சண்முகநாதன் கலந்துகொள்வார். (3-5)

## சமாசப் பணிமனை திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தின் பணிமனைத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகத்தில் இடம்பெறவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைப் பேணும் நோக்குடன் ஆரம்பிக்கப்படும் இந்த அலுவலகத் திறப்பு விழாவில் பல பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.(ஜ-3)

உதயன்

# சிங்களத்துக்கு இப்போது புரியத் தொடங்கும் உண்மை

'வேலியில் போன ஓணானை மடியில் தூக்கிக் கட்டிய' கதையாகிவிட்டது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைமை.

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தது போல, தன்னுடைய பாட்டில் அமைதி முயற்சியில் ஈடுபட்டிருந்த ஐ.தே. கட்சி அரசை, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வீட்டுக்கு அனுப்பினார் அவர்.

பொதுத் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக வேலியில் கிடந்த ஓணானை - ஜே.வி.பியை - தூக்கி மடியில் செருகிக்கொண்டார்.

அணி சேர்ந்தவர்களை இப்போது 'துப்பவும் முடியாமல் மெல்லவும் இயலாமல்' அந்தரிக்கிறார் அவர்.

கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இழுத்த இழுப்புக்கெல்லாம் விட்டுக்கொடுத்து, ஆட்சியைக் கொண்டிழுக்கலாம், காலத்தைக் கடத்தலாம் என்று பார்த்தால் அதற்கு நாட்டின் பொருளாதார நிலைமை ஜனாதிபதிக்கு இடங்கொடுப்பதாக இல்லை.

சமாதானப் பேச்சுக்களை ஆக்கபூர்வமான வழியில் முன்னெடுத்தாலன்றி நிதி உதவிகள் அளிக்கப்படமாட்டா என்று கைவிரித்து விட்டது சர்வதேச சமூகம்.

அரச ஊழியர்களின் அடுத்தமாதச் சம்பளத்துக்கே அல்லாடும் கட்டத்தில் இருக்கும் பொருளாதார நிலையை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார் அரசுத் தலைவியான ஜனாதிபதி.

சர்வதேசச் சந்தையில் எரிபொருள் போன்றவற்றுக்கு அதிகரித்து வரும் விலை, உள்நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள ஏற்றுமதி போன்றவையும் சேர்ந்து நாட்டின் நலிவடைந்துள்ள பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கி நசுக்கியிருக்கின்றன.

இந்தச் சமாதான வேளையில் ஒருபுறம் நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டுப் போயிருக்கிறது என்றால், மறுபுறம் எதிர்த்தரப்பில் பல தசாப்த காலம் யுத்தத்தில் கிடந்து உழன்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிக் கட்டமைப்பு இந்த யுத்தநிறுத்த காலத்தில் வளங்கொழித்துச் சிறப்பாக அரச புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பது ஜனாதிபதியையும் அவரது அரசுத் தரப்பையும் எரிச்சலில் ஆழ்த்தியிருக்கின்றது.

யுத்தநிறுத்தம் நீடிப்பதால், சமாதானப் பேச்சுகளை - அமைதிமுயற்சிகளை - சாவகாசமாக ஆரம்பிக்கலாம், தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை கனிந்து வரும்வரைக் காத்திருக்கலாம், ஆட்சியைத் தக்கவைத்துக்கொண்டு காலத்தை இழுத்தடித்துப் புலிகளைப் பலவீனப்படுத்தலாம் - என்றெல்லாம் தனக்குள் எண்ணி, மெத்தனமாகச் செயற்பட்ட ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு புலனாய்வுத் தகவல்கள் இப்போது எச்சரிக்கை மணி அடித்திருப்பதாகத் தெரிகின்றது.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்படாதவரை சர்வதேச உதவிகள் நாட்டுக்குத் தாராளமாகக் கிடைக்கப்போவதில்லை. அதனால், ஏற்கனவே சீர்கெட்ட பொருளாதாரம் மேலும் மேலும் மோசமடைவது தவிர்க்கமுடியாததாகி வருகின்றது. அதேசமயம், அமைதிப்பேச்சுகளை ஆரம்பிக்க அரசுத் தரப்பு ஆர்வம் காட்டாமல் சமாதானச் சூழலைக் குழப்பிவருவதைக் கண்டிக்கும் புலிகள், அதற்காக அரசுத் தரப்போடு கோபித்துக்கொண்டு யுத்தத்துக்குச் செல்லாமல் ஆச்சரியப்படத்தக்க வகையில் தொடர்ந்து பொறுமை காக்கின்றனர். இந்த அசாதாரணமான நிதானத்தின் பின்புலத்தில் பலமான காரணகாரியம் உண்டு என்பது அரசுத் தலைமைக்கு இப்போது புரியத் தொடங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

"யுத்த நிறுத்தத்தை முறித்துக்கொண்டு போருக்குப் போனால் சர்வதேச சமூகம் புலிகளுக்கு எதிராகத் திரும்பிவிடும். அதனால்தான் புலிகள் பொறுமை காக்கின்றார்கள். சர்வதேச சமூகத்துக்குப் புலிகள் போடும் சமாதான வேடமே அவர்களின் இந்த 'அடக்கி வாசிக்கும' போக்கு" - என்றெல்லாம் கற்பனை பண்ணிக்கொண்டிருந்தது ஸ்ரீலங்கா அரசுத தலைமை.

சாவதேச சமூகத்தின் நியாயமான எதிர்பார்ப்பை நிறைவு செய்வது புலிகளின் எண்ணமாக இருந்தாலும், புலிகள் அமைதி பேணுவதற்கு அதற்கு அப்பாலும் பல காரணங்கள் உள்ளன.

சமாதான காலம் புலிகளின் பொருளாதார வளத்தை மட்டுமல்ல, அவர்களின் முழுக்கட்டமைப்பையே மேலும் மேலும ஸ்திரப்படுத்துகின்றது என்ற உண்மை - யதார்த்தம் - இப்போது காலம் பிந்தித்தான் அரசுக்கு உறைக்கத் தொடங்கியிருக்கின்றது.

சமாதான முயற்சிகளிலும் ஈடுபடாமல் - யுத்தமும் புரியாமல் - காலத்தை இழுத்தடிப்பது கருணா போன்ற தனிமனிதப் பிறழ்வுகளுக்கு இடமளித்து, புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் என்று கற்பனை பண்ணிக்கொண்டிருந்த சிங்களத் தலைமைக்கு நிசமான நிலைமை என்னவென்பது இப்போதுதான் புரியத்தொடங்கியிருக்கின்றது.

யுத்தம் இல்லை. போர்த் தளபாட, யுத்தச் செலவுகள் புலிகளுக்கு இல்லை. ஆனால், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர்களது வரவுகள் ஸ்திரமாகவும் கணிசமாகவும் அதிகரித்து வருகின்றன. இதனால், புலிகள் இயக்கம் மேலும வலுவடைகிறது; கட்டுக்கோப்பாகின்றது; உயிரோட்டமாகின்றது; உயர்கின்றது.

பிந்திய புலனாய்வுத் தகவல்கள் இப்படியான மெய்மை நிலைமையை அம்பலப்படுத்தியதால்தான் போரோ, சமாதானமோ ஏதாவது ஒன்றை எப்படியாவது முடிவு கட்டிவிட வேண்டும் என்ற தீர்க்கமான நிலைக்கு ஜனாதிபதி வந்திருக்கிறார்.

புலிகளோடு போர் ஒன்றை எதிர்கொள்ளும் நிலையில் நாடும் அரசும் அதன் படைகளும் இல்லை. எனவே, மாற்றுவழி சமாதானப்பாதை ஒன்றே.

பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியை உதறிவிட்டாவது சமாதான முயற்சிகளை ஆரம்பித்து, அதன்மூலம் சர்வதேச உதவிகளைபெற்று, சிங்களத்தைக் காப்பாற்றிக் கொள்ள அவரைத் தூண்டியிருப்பது இந்தக் கள நிலைமைதான்.

# கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கும் வேலை வழங்கலில் உரிய நியமனம்

## வழங்கவேண்டுமென்கிறார் சங்கச் செயலாளர்

யாழ்ப்பாணம்,ஓக.8

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கும் உரிய நியமனம் - வேதனம் வழங்கப்படவேண்டும்.

இது விடயத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உரிய கவனம் எடுத்துச் செயற்படவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். மாவட்ட கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் குபற்குணராசா.

இதுவிடயமாக அவர் மேலும் கூறியதாவது:-

கீழுழைப்புப் பட்டதாரிகளான எமக்குத் தராதரத்துக்குரிய பதவிகள் வழங்கப்படாததுடன் உரிய வேதனமும் வழங்கப்படாமையால் நாம் பெரும் மனச்சஞ்சலத்துக்கும் வேதனைக்கும் உள்ளாகியுள்ளோம். குறிப்பாக, பட்டதாரித் தராதரத்துக்குரிய பதவிகள் வழங்கப்படாததால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனத்திலேயே நாம் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றோம்.

கீழுழைப்புப் பட்டதாரிகளாக உள்ள 5 ஆயிரத்து 661 பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படாது உளளதாக நிதி அமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார். ஆனால், இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/93 இன் பிரகாரம் -

இலங்கை நிர்வாகசேவை, கடல்கடந்த சேவை, தொழில் அலுவலர் சேவை, சுங்கச்சேவை, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சேவை, ஆகியவற்றுக்கு ஆள் சேர்க்கும்போது அரசசேவையில் பதவி நிலை அல்லாத தரங்களையுடைய பதவிகளை வகிக்கும் பட்டதாரிகளாக உள்ள அலுவலர்களது வயதெல்லை அகற்றப்படவேண்டும்.

ஆள்சேர்ப்புத் தரத்தில் அத்தகைய தேர்வுகளுக்குத் தோற்றுவதற்கு விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் எவ்வித வரையறையுமின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இந்த அலுவலர்கள் அனுமதிக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, கீழுழைப்புப் பட்டதாரிகளான எமக்கும் பட்டதாரிகளுக்கான வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் உரிய நியமனமும், வேதனமும் வழங்கப்படவேண்டும். இதன்மூலம் நாமும் அதிக வேதனததைப் பெறுவதுடன் தகுதிக்கேற்ற பதவிகளை வகிக்கவும் முடியும்.

யாழ். மாவட்ட கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு விரைவில் தகுதிக்கேற்ற நியமனங்கள் வழங்கப்படவேண்டும் -என்றார். (எ-10)

# முன்பள்ளிச் சிறாருக்குப் பரிசிலுடன் வங்கிக் கணக்குப் புத்தகங்களும்

## மயிலணி சனசமூக நிலையம் முன்மாதிரி

வலி.வடக்கு,ஓக.8

முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் சிறார்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும்வகையில் வங்கியில் பணம் வைப்புச்செய்யப்பட்ட கணக்குப்புத்தகங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் மயிலணி வடக்கு வளர்பிறை விளையாட்டுக் கழகமும், வளர்பிறை சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய வளர்பிறை முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப்போட்டி அண்மையில் மா.இராசரத்தினம் தலைமையில் சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தே விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மற்றும் முன்பள்ளியில் கல்விகற்கும் மாணவர்களுககு மா.இராசரத்தினத்தால் இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளையில் வைப்புச்செய்யப்பட்ட சிறுவர் சேமிப்புத் திட்ட கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இளையவி துரைராசா வங்கியில் பணத்தை வைப்புச்செய்து அதற்கான கணக்குப் புத்தகங்களை நிகழ்விலவைத்து உரியவர்களிடம் கையளித்தார்.

41 மாணவர்களுக்கும், இரண்டு ஆசிரியைகளுக்கும் இவ்வாறு வங்கியில் வைபபுச்செய்யப்பட்ட வங்கிக்கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. (எ-86)



மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான செல்லப்பா நடராசா பத்திரிகையாளராக ஐம்பது வருடங்களைப் பூர்த்திசெய்தமையைக் கௌரவிக்கும் முகமாக கோண்டாவில் - இணுவில் காரைக்கால் சிவன்கோயிலில் பாராட்டுவிழா கடந்த வாரம் நடைபெற்றது. பாராட்டுவிழாவுக்குத் தலைமைவகித்த செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் விழா நாயகருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து ஆசிபெறுவதைப் படத்தில் காணலாம். 'உதயன் - சஞ்சீவி' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனும் படத்தில் காணப்படுகிறார். (10)

# மாவையில் இன்று கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம்,ஓக.8

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் உற்சவத்தில் இன்று காலை 9 மணி முதல் திருக்கார்த்திகை வைபவம் இடம்பெறவுள்ளது.

பூசை, ஆராதனைகளுடன் ஆரம்பமாகும் வைபவத்தில் முற்பகல் 10 மணிக்கு "மந்தாகினி தந்த வரோதயன்" என்னும் தலைப்பில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சொற்பொழிவு நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து 11 மணியளவில் திருமதி கேசவத்வினி விஜயராகவன் தலைமையில் கொழும்பு பிருந்தகானலய நிறுவனம் வழங்கும் பிருந்த கானாமிர்தங்கள் இடம்பெறும்.

நண்பகல் 12 மணிக்கு பிருந்த கானலய நிறுவனத்தின் திருப்புகழ் அஞ்சலியோடு ஷண்முகார்ச்சனை நடைபெற்றுத் தொடர்ந்து கார்த்திகைக்குமரன் மயூரத்தில் வீதியுலா வருவார்.

ஆலய உற்சவத்தில் பங்குபற்றும் பக்தர்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் நேரடியாக ஆலயத்திற்கு வர ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். (3)

# அவசர நோயாளரை ஏற்றிச்செல்ல வட்டு. வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்

## வசதி குறைந்தவருக்கு பேருதவியாக அமையும்

யாழ்ப்பாணம்,ஓக.8

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தினதும் அதனையண்டிய அராலி, சங்கரத்தை, துணவி, மூளாய் கிராமங்களையும் சோநத அவசர நோயாளர்களின் பாவனைக்கு உதவும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை வைத்திய அதிகாரியினதும் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் வேண்டுகோளுக்கு இணங்கி, மாவட்ட வைத்திய பணிப்பாளரின் சிபார்சுக்கு இணங்க இந்த அம்புலன்ஸ் வழங்கப்பட்டது. இந்த அம்புலன்ஸ் வாகனத்தைக் கையேற்கும் நிகழ்வு வைபவ ரீதியாகக் கடந்த திங்கட்கிழமை வட்டுக்கோட்டை வைத்தியசாலையில் இடம்பெற்றது.

மேற்படி அம்புலன்ஸுக்கான தரிப்பிடமும் சாரதி தங்குமிடமும் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த உள்ளூர் மக்களும் வெளிநாடுகளில் வாழும் இந்த ஊர்களைச் சேர்ந்தவர்களும் வழங்கிய நிதியுதவியின் மூலம் அமைக்கப்பட்டன.

தனியார் வாகனங்களுக்கு வாடகைப் பணம் செலுத்தமுடியாததால் அவசர நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லமுடியாதிருந்தவர்களுக்கும் புதிய அம்புலன்ஸ் வாகனம் பேருதவியாக அமையும் என்று -

வட்டுக்கோட்டை வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கத்தலைவர் நா.குகராசா உதயனுக்குத் தெரிவித்தார். (எ-201)

# நிவாரணம்பெறுவோரின் மாதவருமானம் சமுர்த்தி அலுவலரால் வலி.மேற்கில் மீளாய்வு

வலி.மேற்கு,ஓக.8

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் இலவச உலர் உணவு நிவாரணம் பெறும் சுமார் 11 ஆயிரம் குடும்பங்களின் மாதாந்த வருமானம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இந்தப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம அலுவலர் பிரிவிலும் மேற்கொள்ளப்பட்ட இந்த மீளாய்வு நடவடிக்கையின்போது அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள், கிராமிய புனரமைப்புக் குழுவினர் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

இந்த வருமான மீளாய்வின்போது 40 வீதமான குடும்பங்கள் தொடர்ந்தும் இலவச உலர் உணவு நிவாரணம் பெறத் தகுதியானவை என மதிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள், வலுவிழந்தோர், விதவைகள், இடம்பெயர்வின்போது தமது உடைமைகளை இழந்தோர் தொடாந்தும் இலவச உலர் உணவு நிவாரணத்தைப் பெறுவதற்குக் தகுதியானவர்கள் என்று - மீளாய்வுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் தெரிவித்தனர். (எ-175)

## நாளை

ஆடி 25
திங்கட்கிழமை
(09.08.2004)
திதி : நவமி
முன்னிரவு 9.23 வரை.
நட்சத்திரம் : கார்த்திகை
முன்னிரவு 7.17 வரை.
சுபநேரம்: 12.04 - 1.34
ராகுகாலம்: 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வாழ்வைப் புரிந்துகொள்வதற்கு முன்னர் பாதி வாழ்க்கை கழிந்துவிடுகிறது.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்

## பொதுக்கூட்டம்

காலம் : 22.08.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
இடம் : கல்லூரி மண்டபம்

மன்ற விதிகளின் நிகழ்ச்சி நிரலுடன் கூட்டம் நடைபெறும். பிரேரணைகள் இருப்பின் அனுப்பிவையுங்கள். உறுப்பினர் தவறாது வருக.

பழைய மாணவர் மன்றம்,
ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை (C/36474) இணைச் செயலர்.

# மரண அறிவித்தல்கள்

### நடராஜா கந்தசாமி

கொக்குவில் கிழக்கு, மாத்தனை முருகன் கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கை வங்கியின் ஒய்வு பெற்ற முன்னாள் முகாமையாளருமான வை.ந.கந்தசாமி அவர்கள் 04.08.2004 புதன்கிழமையன்று சென்னையில் காலமானார்.

அன்னார் நடராஜா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் சிவசோதியின் அன்புக் கணவரும் இராஜலோகநாதன், இராஜபத்மநாதன், ஜெயன் மனோகரன் (லண்டன்), செல்வயோகேந்திரா, மங்கள வரலட்சுமி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராதிகாவின் அருமை மாமனாரும் லஷ்சுமியின் அருமைப் பேரனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், சோமசுந்தரம், சரஸ்வதி, இராஜநாயகம் (இலங்கை), சிவபாக்கியம் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சென்னையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
*இராஜலோகநாதன் (லண்டன்)*
*01908232214*
*திருமதி கந்தசாமி (இந்தியா) 00914422473755*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகள். (35024)

### வீரசிங்கம் உலகநாதன்

யாழ்ப்பாணம், 118/4, பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் உலகநாதன் 06.08.2004 கனடாவில் காலமானார்.

அன்னார் வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் (முன்னாள் புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற பொலீஸ் சார்ஜன்ட் மார்க்கண்டு மற்றும் திருமதி மார்க்கண்டு தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் பாசமிகு கணவரும் திருமதி பகீரதி விஜய், விஷ்ணுவர்த்தன், விமலநாதன், பிருந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விவேக்கின் அன்புத் தாத்தாவும் பத்மாசனி, யோகநாதன், இராஜேஸ்வரி, பரமநாதன், தருமநாதன், கேதாரநாதன், தேவமலர், புவனேஸ்வரி, பரமகுருநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.08.2004 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், அயலவர் ஆகியோருக்கு அன்புடன் அறியத்தருகின்றேன்.

*118/4, பிறவுண் வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.* (35025)

தகவல்:
திருமதி பத்மாசனி
சிவபாதசுந்தரம் (சகோதரி).

### விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.8

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத் தினம் எதிர்வரும் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (10-201)

### ஆலயச் சுற்றாடலில் துப்புரவுப்பணி

யாழ்ப்பாணம்,ஓக.8

எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவையொட்டி ஆலயச்சுற்றாடலைத் துப்புரவாக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

அத்துடன், பந்தல்களை அமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகளும் இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (10-15)

### பணிப்பெண் உடன்தேவை

தங்கியிருந்து சமையல் வேலை செய்வதற்குப் பெண்கள் உடன்தேவை. வயதெல்லை கிடையாது. நல்ல சம்பளம் வழங்கப்படும். உடன்நேரில் வரவும்.

சி.ஜெயரத்தினம்
சின்னப்பா வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (சி-36475)

# மரண அறிவித்தல்

### திருமதி மரியாம்பிள்ளை அன்னம்மா

இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை அன்னம்மா நேற்று (07.08.2004) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மரியநாயகம், றீற்றபெல், றோசபெல், தேவநாயகம் மற்றும் கிறிஸ்ரபெல், மேரின்திரேசபெல் (பேபி), ஜெயீபெல் (ஜெயா), றாஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிறிஸ்ரி மகேந்திரன், காலஞ்சென்ற யோகம் மற்றும் பொன்ராசா, யோசப்நாயகம் (ஆசிரியர், புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை), சின்னத்தம்பி, விஜய தெய்வேந்திரம் (குணம்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு (புதிய நேரம்) நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66, கொழும்புத்துறை வீதி,*
*பாண்டியந்தாழ்வு,*
*யாழ்ப்பாணம். T.P 0776 199479* (35026)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த
அமரர்
**பொன்னையா சுந்தரலிங்கம்**
(S.P.S.)

அவர்களின் திடீர் மறைவையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது
ஆத்மசாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*108, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/36473)

அருள் விநாயகர்
மோட்டோர்ஸ் ஸ்தாபனத்தினர்.

# வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம்

# பொன் விழா இறுதி நாள் நிகழ்ச்சி






காலம் : இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி

இடம் : கழக விளையாட்டு மைதானம்

தலைவர் : சூ.சே. குலநாயகம் (கழகத் தலைவர்)

பிரதம விருந்தினர் : பேராசிரியர் சு.மோகனதாஸ் (உப வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள் : கௌரவ M.K.சிவாஜிலிங்கம் (யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)
திரு. அன்பழகன் (கடற்புலிகளின் அரசியல்துறை – வல்வெட்டித்துறைப் பிரதேசம்)

நிகழ்ச்சிகள் : ★ விளையாட்டுக்களின் இறுதி ஆட்டங்கள்
★ பரிசளிப்பு வைபவம்

பிரமாண்டமான 'ஒலி, ஒளி அமைப்புடன் கூடிய மேடையில் இலங்கையின் முதற்தர இசைக்குழுவான திருமலை 'சப்தம்' இசைக்குழுவினர் வழங்கும் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி - இலங்கையின் தரமான பாடகர்கள் பலர், வாத்தியக் கலைஞர்கள் பலர் கலந்து சிறப்பிக்கும் திருமலை 'சப்தம்' இசைக்குழுவினரின் 'ஆனந்த இரவு'

வட இலங்கையின் புகழ்பெற்ற வல்வை கணபதி மின்னமைப்பாளர்களின் விநோத நிகழ்வுகள்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**






(35021)

வல்வை நெடியகாடு, இளைஞர்
வி.க. வல்வெட்டித்துறை.

| | | | |
|---|---|---|---|
| | ராகு சந். | | வெ. சனி |
| | இராசிச் சக்கரம் | | சூ. ▼ புதன் |
| | | | செவ். வியா. |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 08.08.2004 – 14.08.2004

**மாற்றம்:**
**பரணி நட்சத்திரம் மேட இராசியில் சந்திரன் நிற்கும்.**

அரசு புதிய திட்டங்களைத் தீட்டும். அதில் ஒரு அங்கமாக எதிர்கட்சிகளின் அனுசரணையை இரகசியமாகப் பெற்று நிலைப படுத்த முயற்சி எடுக்கும். இதற்கு இந்திய அரசியல்வாதிகள் ஆலோசனை வழங்குவர். சமாதானப் பேச்சுக்களின் போக்கு திசைமாறலாம். மனமாற்ற நம்பிக்கையீனம் தொடரும். இந்தியாவின் வடபகுதி, மத்திய பகுதிகளில் தீவிரவாதிகள் திட்டமிட்டு அழிவுகள் செய்வார்கள். மத்திய கிழக்கில் அழிவுகள் தொடரும். தீவிரவாத வன்முறைகள் வெடித்து அழிவுகள் தொடரும். இந்து, அரேபியக் கடற்பரப்பில், பசுப்பிக் கடற்பரப்பில் காற்றழுத்தத்தால் மழை வீழ்ச்சி சீதோஷ்ண நிலையில் மாற்றங்கள் தொடர வழியுண்டு எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கவனக்குறைவான செயற்பாடுகள், பகீரத முயற்சிக்குத் திட்டமிடுவீர்கள். பணவரவு ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். நன்மைகள் நடக்கும். இடமாற்றங்களை யோசித்துச் செயற்படவும். ஆலய தரிசனம், கால் உளைவு, சளித்தொல்லை கொடுக்கும். சட்டத்துறை, காவல்துறையினர் அதிக நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், சனி.*

### இடபம்

எந்த அலுவல்களையும் உதவியுடன் செய்வீர்கள். பணவரவு குறையும். மாமன் வழியினர் தொல்லை தருவர். புதிய தொழில் முயற்சிகளை நாடுவீர்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும். வாய்வுத் தொல்லை கொடுக்கும். உறவினர்கள் உதவி செய்வார்கள். குருத்தொழில, சங்கீதத்துறையினர், நிர்வாகத் தொழிலினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், சனி.*

### மிதுனம்

விதியின் பிரகாரம் வாழ்க்கை அமையும். வாக்குத்திறனால் பல காரியனுகூலம் நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். வீடு, வாகன யோகம் சிறப்புக் கொடுக்கும். பிரயாண வாய்ப்புக்கள் வரும். வாய்வு, பித்தம் கூடும். வைத்தியம் செய்யவும். அன்னியர் உதவி கிடைக்கும். ஆசிரியத்துறையினர், சந்தை வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், சனி.*

### கடகம்

ஊழல் மலிந்தவர்கள் அதிகாரத்தில் அமர்ந்தால் நல்லவர்களுக்கு ஆபத்து வரும். எனவே, பொறுமையாகத் தொழில் ஸ்தானத்தில் செயற்படவும். கொடுக்கல், வாங்கலில் நிதானமாக இருக்கவும். வாகன சுகம். வீடு மனைச் சிறப்பு என்பன கொடுக்கும். நண்பர்கள் உதவி செய்வர். பிரயாண முயற்சிகள் வெற்றி கொடுக்கும். அரச அதிகாரிகளால் நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், சனி.*

### சிங்கம்

இந்த உலகத்தில் நீங்களும வாழவேண்டும். மற்றவர்களும் வாழவேண்டும். உங்கள் நிலையை உயர்த்த முயற்சி எடுத்துச்செயற படுங்கள். விதியின் செயற்பாடு அலைமோதும். இருப்பதைக் கொண்டு செயற்பட்டபடி இருப்பீர்கள. வீடுமனைச் சிறப்புக் கொடுக்கும். வாகன சுகம் உண்டு. உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். தூரப்பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், சனி.*

### கன்னி

வாழ்க்கை என்பது நாம் நினைப்பது போன்று அமைவதில்லை. திட்டமிட்டுச் செயற்படமுடியாது. எனவே, இருப்பதைக் கொண்டு செயற்பட்டபடி இருப்பீர்கள். அடிக்கடி இடமாற்றம் ஏற்படும். எனவே, போக்குவரத்தில் நிதானமாக இருக்கவும். இதன்போது பொருள் தவற இடமுண்டு. வாகன சுகம், நண்பர்களின் உதவிகள், ஆலய தரிசனம் என்பன நடக்கும். குடும்பத்தவர்களின் அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். அவற்றுக்கு வெற்றியும் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், சனி.*

### துலாம்

உங்களுக்குப் புதிய பொறுப்புகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். பணவரவு கிடைக்கும். அதிகாரிகள் உதவி செய்வார்கள். பிரயாண மிகுதி - பலன் சொற்பம் என்பதை உணர்வீர்கள். அளவறிந்து செயற்படவும் நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். சிறு மாற்றங்கள், குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். தூரத்துப் பிரயாணங்களைக் குறைத்துக்கொள்ளவும். சட்டத்துறையினர், ஆசிரியர்களுக்கு முன்னேற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், சனி.*

### விருச்சிகம்

அதிக முயற்சி - பணவரவு - திட்டமிட்ட செயல் அதிகாரத்தொனி -வாக்குப் பலிதம் - - தொழில்ஸ்தானத்தில் எதிர்ப்புக்கள் ஏற்படும். கொடுத்தது வராது. பிரச்சினை கொடுக்கும். எதிர்ப்பாளர் வழியிலிருந்து கடும் வசனங்கள் மனதை உறுத்தும். மேலதிகாரிகள் உதவி கிடைக்காது. வாகன சுகம் கொடுக்கும். பாதுகாப்புத்துறையினர்கள், இரும்பு வாகன வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், சனி.*

### தனுசு

நண்பர்கள் உதவுவர், குடும்பத்தில் கலகலப்புக்கொடுக்கும். மேலதிகாரிகள் உதவுவார்கள், புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தவர் - நண்பர்களுக்கு உதவிகள் செய்து குறை கேட்பீர்கள். இடமாற்றங்கள் நன்மை கொடுக்கும். வாகன சுகம் கொடுக்கும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும், கால்உளைவு கொடுக்கும், ஆசிரியர்கள் - வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன்.*

### மகரம்

நாம் நினைப்பதெல்லாம் நடக்கமுடியாது. விதிப்படி மெல்ல எமது செயற்பாடு ஓட்டம் கொடுக்கும். மனதில் வைராக்கியம், தொழிலில் ஊக்கம், பணவரவு, அடிக்கடி பயம் அலைச்சல் என்பன கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். உங்கள் தொழில்ஸ்தானத்தில் சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். படிப்படியான நன்மைகள் கொடுக்கும். கால் வருத்தம், சளித்தொல்லை கொடுக்கும். வியாபாரிகள், தொழில்நுட்பத் துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், சனி.*

### கும்பம்

மட்டுப்படுத்தப்பட்ட திட்டச் செயலாக்கம் கொடுக்கும். குறுக்கு வழிகளில் எவரும் இறைவனிடம் அருளைப்பெறமுடியாது. தெய்வ வழிபாடு தொடரவும். தொழில் ஸ்தானத்தில் அதிகாரிகள் உதவுவார்கள். சக ஊழியர்கள் குறை சொல்லுவார்கள். செவ்வாய் பார்வையால் அடிக்கடி கோபம் கொந்தளிக்கும். குடும்பத்தவர்களின் உதவிகளால் நன்மைகள் கொடுக்கும். ஆசிரியர்கள், சட்டத்துறையினர்கள் நன்மை பெறுவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், சனி.*

### மீனம்

திட்டமிட்டபடி தொழில் சிறப்பு அடையும். புத்திரர்கள் நன்மை பெறுவர். நண்பர்களுக்கு நன்மை கிடைக்கும். ஊக்கத்தால் உயர்வுகள் கிடைக்கும். நண்பர்கள் உதவிசெய்வர். பொருள் தவறலாம். இடமாற்றங்களால் நன்மைகள் கிடைக்கும். சலவருத்தம், கால்வருத்தம், கொடுக்கும். வியாபாரிகள் கடற்றொழில் செய்பவர்கள், குருமார்கள், சட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# கோடி அற்புத வரத்தார் புனித அந்தோனியார்



**போர்**த்துக்கல்லில் உள்ள லிஸ்பன் நகரில் பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்த மார்டின் யூஸ்யோன் தெரசா த திவேரா தம்பதிகளின் புதல்வராக 1195ஆம் ஆண்டு ஆவணி 15ஆம் நாள் புனித அந்தோனியார் பிறந்தார். அவரது பெற்றோர் அவருக்கிட்ட பெயர் பெர்டினன்ட் என்பதாகும். சிறுவயதிலே இறை அன்பினால் உந்தப்பட்டுச் சிறுதுறவிகள் சபையில் சேர்ந்த புனிதர் தனது 15ஆவது வயதில் அகுஸ்தீன் துறவற சபையில் இணைந்து மத போதகரானார். சகல கல்வி, கேள்விகளிலும் வேதாகம அறிவிலும் விற்பன்னராக விளங்கிய புனிதர் தமது பெயரை அந்தோனி என மாற்றிக்கொண்டார்.

## ஞாயிறு நற்பிரசாதம்

கடின தவத்தாலும், செபத்தாலும் உபவாசத்தாலும் இறைவனின் அன்பிற்குப் பாத்திரமான புனிதரின் அறிவுத் திறமையையும் விசுவாசத்தின் மேன்மையும் அறிந்துகொண்ட புனிதர் பிரான்சிஸ்கு அவர்கள் தமது சபைக்குப் புனித அந்தோனியாரை முக்கிய போதகராக நியமித்தார். புனிதர் அந்தோனியார் இப்பொறுப்பை ஏற்றபின் பிரான்ஸ" தேசத்தில் ஆர்ன்ஸ், மொத்தமொலியா, பூர்ஜெசி, இத்தாலியில் வேர்செல்வி, இறிமினி, பதுவை ஆகிய பட்டணங்களில் இறைபணியை மிகச் சிறப்பாக ஆற்றினார். புனிதர் சென்ற இடமெல்லாம் மக்கள் அவரது பேச்சைக் கேட்கத் திரண்டனர். பாவிகள் மனம் திருந்தினர். அப்பொழுது சிலர் திருமறைகளின் போதனைகளைத் தவறாக விளக்கியும் விமர்சித்தும் வந்தனர். அத்தவறான போதனையில் மயங்கிய எத்தனையோ பேர்களை இறைவனின் மந்தைக்கு மீட்டெடுத்தார் இறைவன்.

தன்மீது அளவு கடந்த அன்பையும் விசுவாசத்தையும் வைத்திருந்த புனிதர் அந்தோனியார் மூலமாகப் பற்பல அற்புதங்களை நிகழ்த்தி முத்திரையிட்டார் இறைவன். அவைகளில் ஒரே நேரத்தில் பன்மொழி பேசும் ஆற்றல், ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் காணப்படும் ஆற்றல் போன்றவற்றை அருளினார் இறைவன்.

புனிதர் அந்தோனியார் நிகழ்த்திய அற்புதங்களில் மிகப் பிரபல்யமானவை மூன்று உள்ளன. அவை நற்கருணையில் ஆண்டவர் உண்மையாகவே பிரசன்னமாக இருக்கின்றார் என்பதை எடுத்துக்காட்டிக் கழுதைகள் நற்கருணைக்கு முன்பாக மண்டியிட்டமையும் கடற்கரையில் இறைவார்த்தைகளைப் போதித்த போது மீன்கள் தமது தலைகளைத் தண்ணீருக்கு வெளிப்புறமாக உயர்த்தி அவ்வார்த்தைகளைக் கேட்டதையும் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை ஏற்றவிருந்த ஒருவனைக் காப்பாற்ற அவனது இறந்த மகனை உயிர்பெறச் செய்து நீதிமன்றத்தின் முன்தோன்றச் செய்தது போன்ற சம்பவங்களே ஆகும்.

ஒரு சமயம் புனிதரை முற்றாக வெறுத்த சிலர் விசம் கலந்த உணவைக் கொடுத்தனர். எனினும், உணவின்மேல் புனிதர் சிலுவை அடையாளமிட்டு உண்டதனால் அவருக்குத் தீங்கேதும் ஏற்படவில்லை. இப்படி எண்ணிலடங்கா பல அற்புதங்களை இறைவன் தாம் தேர்ந்துகொண்ட புனிதர் அந்தோனியார் மூலமாக நிகழ்த்தி வந்ததனால் மக்கள் புனிதரை 'கோடி அற்புத வரத்தார்' என்று போற்றி மகிமைப் படுத்துகின்றனர்.

இப்படிச் சிறப்பும் மேன்மையும் கொண்ட புனிதர் அந்தோனியாரை ஆண்டவன் மிக விரைவில் தமதண்டையில் அழைத்துக்கொண்டார். 1231ஆம் ஆண்டு ஆனி மாதம் 13ஆம் திகதி தமது 36ஆவது வயதில் ஆர்செல்வா நகரில் தேவதாயின் பாடலைப் பாடியவாறு இறைபரம் அடைந்தார் புனிதர். இவர் இறந்த மறுவருடமே புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். அன்றிலிருந்து உலகிலுள்ள கிறிஸ்தவர்கள் புனிதர் மறைந்த ஆனி 13ஆம் நாளைப் புனிதரை மகிமைப்படுத்தும் தினமாகக் கருதி ஆண்டாண்டு காலமாகப் புனிதரை நினைவுகூர்ந்து வருகின்றார்கள்.

வாழும்போது பல அற்புதங்களை இறைவன் மூலமாகச் செய்த புனிதர் அந்தோனியார் தம் மரணத்தின் பின்பும் அற்புதங்களை நிகழ்த்தியமையைக் கண்டு வியந்து அவரது நண்பர்கள் புனிதர் மறைந்து முப்பத்தொரு ஆண்டுகளின் பின்பு புனிதரது கல்லறையைத் திறந்து பார்த்தபொழுது அவரது நாக்கு அழியாமல் காணப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள். *

**க.அருள்நேசன்**

# தலையில் தேங்காய் உடைத்து வழிபடுவதற்கு தடைவேண்டும்!

## மதுரை ஆதீனம் கோரிக்கை

தலையில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்வதைத் தமிழக அரசு தடைசெய்யவேண்டும் என்று மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

தமிழ் நாட்டின் கரூர் பிரதேசத்தில் மகாலட்சுமி அம்மன் கோயிலில் பக்தர்கள், தங்கள் தலையில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்ததில் பலரது மண்டைகள் உடைந்து இரத்தம் வழிந்தோடியது என்ற செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

மனித உடலில் முக்கிய பகுதியாகிய தலையில் முழுத்தேங்காயை உடைத்து மனித மூளைக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதைச் சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?

இறைவனைப் பிரார்த்தனை செய்வதில் எவ்வளவோ எளிய வழிகள் இருக்கின்றன. 'எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்பார்கள். எனவே, தலையில் தேங்காயை உடைத்து வழிபாடு செய்யுங்கள் என எந்த ஒரு ஞானியும் கூறவில்லை. வேதங்களிலும் அப்படியான கருதது இல்லை. மூளையைப் பாதிக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் தலைமுடியையும் மிகக்கடினமான மண்டை ஓட்டையும் இறைவன் படைத்துக் காத்துக்கொண்டு இருக்கின்றான்.

இந்த மூடநம்பிக்கைச் செயலைத் தமிழக அரசு தடைசெய்து ஆணை பிறப்பிக்கவேண்டும் என மனிதாபிமான அடிப்படையில் கேட்டுக்கொள்கின்றோம் - இவ்வாறு அந்த அறிக்கையில் உள்ளது. (9)

## கொழும்புத்துறை ஆலயத்தில் புதனிரவு திருடர் கைவரிசை

அரியாலை,ஓக.8

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆலயத்தின் விக்கிரகங்களைப் புரட்டி அவற்றுள் இருந்த இயந்திரத் தகடுகளைத் திருடுவதற்கு திருடர்கள் முயன்றுள்ளனர். எனினும், இயந்திரத் தகடுகள் எவையும் திருட்டுப்போகவில்லை.

அத்துடன், ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த ஒரு தொகைப் பணம் திருடப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுப் பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-17)



கொடிகாமம் அஞ்சலகத்தில் அஞ்சலராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற சமாகான நீதிவான் வே. இரத்தினசிங்கத்தின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அஞ்சலகத்தில் நடைபெற்றது. புதிய அஞ்சலதிபர் பொ.தெய்வேந்திரன் ஓய்வுபெற்ற அஞ்சலதிபர் வே. இரத்தினசிங்கத்துக்கு மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். உதவி அஞ்சல் அதிபர் எஸ்.சந்திரலிங்கமும் படத்தில் உள்ளார்.
*(படம்: வரணிச் செய்தியாளர்)*

இந்திய அணியில்

# சகீர்கான், பார்த்திவ் பட்டேல் நீக்கம்: அகார்கர், தினேஸ் கார்த்திக் சேர்ப்பு

கல்கத்தா,ஓக.8

இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் ஆகிய மூனறு நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் 28ஆம் திகதி வரை ஹொலண்டில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்குப் பிறகு இந்திய அணி செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்து சென்று 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. ஒரு நாள் போட்டிகள் செம்ரெம்பர் முதலாம் திகதி மூன்றாம் திகதி மற்றும் ஐந்தாம் திகதிகளில் நடக்கிறது. அதன் பிறகு செப்ரெம்பர் 10 - 25ஆம் திகதி வரை அங்கு நடைபெறும் மினி உலகக் கிண்ணப் போட்டி யில் விளையாடுகிறது.

இந்த 3 போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசியக் கிண்ணப் போட்டியில் இடம்பெற்ற பார்த்தீவ்பட்டேல், வேகப் பந்து வீச்சாளர் சகீர்கான் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பதிலாகச் சென்னையைச் சேர்ந்த இளம் விக்கெட் காப்பாளரான தினேஷ கார்த்தி, அகார்கர் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

றொகான் கவாஸ்கர் அணியில் மீண்டும் சேர்கப்பட்டுள்ளார். இவர் ஹொலண்டில் நடைபெறும் 3 நாடுகள் போட்டி மற்றும் இங்கிலாந்துத் தொடர் ஆகியவற்றுக்கு மட்டுமே இடம் பெற்று உள்ளார். மினி உலகக் கிண்ணப் போட்டிக்கு அவருக்குப் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்தப் போட்டிகளுக்கான இந்திய அணி எதிர்வரும் 17ஆம் திகதி ஹொலண்டிற்குச் செல்லவுள்ளது.

செல்லும் இந்திய அணி வீரர்கள் விவரம் வருமாறு:-

கங்குலி, ட்ராவிட், ஷேவாக், டெண்டுல்கர், லக்ஸ்மன் யுவராஜ்சிங், முகமட்கைப், இர்பான்பதான், றொகான் கவாஸ்கர், நெஹ்றா, எல்.பாலாஜி, அகார்கர், தினேஷ்கார்த்திக், ஹர்பஜன்சிங், கும்ப்ளே.

(10)

## தேசியக் கொடியை ஏந்திச் செல்லும் வாய்ப்பை நிராகரித்தேன் - மல்லேஸ்வரி

புதுடில்லி,ஓக.8

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை கிறீஸ் தலைநகர் ஏதென்ஸில் நடக்கிறது. இதில் இந்தியா சார்பில் 75வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். 14 விளையாட்டுக்களில் இந்தியா கலந்து கொள்கிறது.

ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் தடகள வீராங்கனை அசுஜார்ஜ் தேசியக் கொடியை ஏந்திச் செல்வார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் பெற்ற பளுதூக்கும் வீராங்கனை மல்லேஸ்வரி, ஹொக்கி வீர் தன்ராஜ்பிள்ளை, டென்னிஸ வர் லியாண்டர் பயஸ், துப்பாக்கி சுடும் வீராங்கனை அஞ்சலி பகவத் ஆகியோர் போட்டியில் இருந்தாலும் அஞ்சுவுக்கே வாய்ப்புக்கிடைத்துள்ளது.

இந்நிலையில், தொடக்க விழாவில் தேசியக கொடியை ஏந்திச்செல்லும் வாய்ப்பைத்தான் நிராகரித்ததாக மல்லேஸ்வரி கூறியுள்ளார்.

ஒலிம்பிக் தொடக்கவிழாவில் தேசியக் கொடியை ஏந்திச் செல்லுமாறு என்னிடம் கேட்கப்பட்டது. நான் அதனை நிராகரித்து விட்டேன். தொடக்க விழாவில் தேசியக் கொடியை ஏந்திச்செல்பவர்கள் முன்னதாக மைதானத்துக்கு வரவேண்டும். நீண்டநேரம் நிற்க வேண்டியிருக்கும். இதனால் எனது கால்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகவே இந்த வாய்ப்பை நிராகரித்தேன்.

தேசியக் கொடியை ஏந்திச் செல்வதைவிடப் பதக்க மேடையில் நிற்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.

- இவ்வாறு மல்லேஸ்வரி கூறியுள்ளார்.

(10)

## இயன்பொத்தம் வீட்டில் நவரத்தினங்கள் திருட்டு

லண்டன்,ஓக.8

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள தலைவரும் ஜாம்பவானுமாகிய இயன் பொத்தம் வீட்டிலிருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான நவரத்தினங்கள் திருடப்போயுள்ளன.

அவரது பண்ணை வீட்டில் கடந்தமாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற விருந்துபசாரத்தின் போது இத்திருட்டு நடைபெற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக 2 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

(10)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.8

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் ரஞ்சன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை கொக்குவில இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இ.சிவசங்கர் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் யாழ். துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் ப.முருகவேள் பிரதம விருந்தினராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சுடர் இ.மகேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (10-201)

★ ★ ★

வலி.வடக்கு,ஓக.8

வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மானிப்பாய் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகமும் இணுவில் கண்ணா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(10-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஓக.8

அமரர் தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஏழாலை கண்ணகி வி.க. எதிர் இளவாலை யஸ்கென்றீசியன்ஸ் வி.க.

இன்னும் ஓர் அரையிறுதி ஆட்டமும் இடம்பெறவுள்ளது.

(10-86)




## ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லும் இந்திய வீரருக்கு ரூ. 15லட்சம்

புதுடில்லி,ஓக.8

ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்லும் இந்திய வீருக்கு 15லட்சம் ரூபா பரிசாக வழங்கப் படும் என சாம்சங் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் சார்பில் 14பிரிவுகளில் 75வர, வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர்.

இதில் பதக்கம் வெல்பவர்களுக்கு ரொக்கப பரிசு வழங்கப்படும் என சாம்சங் நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

இதன்படி, தங்கம் வென்றால் 15லட்சம் ரூபாவும் வெள்ளிக்கு 10லட்சம் ரூபாவும் வெண்கலம் வெல்பவருக்கு 5லட்சம் ரூபாவும் பரிசாக வழங்கப்படும் என அறிவித்துள் ளது.

(10)

## யூனியன் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்க அணி வெற்றி

வலி.வடக்கு,ஓக.8

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் லண டன் பழைய மாணவர் சங்க உதைபந்தாட்ட அணிக்கும் யூனியன் கல்லூரி உதைபந்தாட்ட அணிக்கும் இடையே இடம்பெற்ற உதைபந் தாட்டப் போட்டியில் லண்டன் பழைய மாணவர் சங்க அணி வெற்றிபெற்றுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துளள யூனியன் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடமபெற்றது.

போட்டி ஆரம்பமான நேரம்முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடிக்கொண்டிருந்தபோதிலும், பழைய மாணவர் சங்க அணியினர் தமக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்று முன்னணி பெற்றனர்.

முதல்பாதி ஆட்டம் முடிவடையும்போது 1:0 என்ற கோல் கணக்கில் பழைய மாணவர் சங்க அணி முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் யூனியன் கல்லூரி அணியினர் கோலகளைப் பெறுவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட போதிலும் கோல்களைப் பெறமுடியவில்லை. கோல் கம்பத்தை நோக்கி அடிக்கப் பட்ட பந்துகள் யாவும் கோல்கம்பத்தில் பட்டுத் திரும்பின.

ஆட்டமுடிவில் லண்டன் பழைய மாணவர் சங்க அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரி அணியை வெற்றிகொண்டனர்.

(10-86)

உள்ளூராட்சி வார கிரிக்கெட்

## வேலணைப் பிரதேசசபை அணியிடம் மாநகர சபை அணி தோல்வி

யாழ்ப்பாணம்,ஓக.8

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே ஏற்பாடுசெய்யப்பட்ட 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் தொடர் நிகழ்வல் முதலாம்நாள் நிகழ்வு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

முதலாம்நாள் நிகழ்வில் வேலணைப் பிரதேசசபை அணியும் யாழ். மாநகரசபை அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாநகர சபை அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 93 ஓட்டங்களை எடுத்தது. எதிர்த்துக் களமிறங்கிய வேலணை பிரதேசசபை அணி 4விக்கெட்டுகள் இழப்பிற்கு 94 ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது. யாழ். மாநகரசபை அணிக்கு பொதுசனத் தொடர்பு அதிகாரி இ.இரத்தினசிங்கமும், வேலணை பிரதேச சபையின் அணிக்கு தலைமை தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.சுரேந்திரனும் தலைவர்களாக இருந்தனர்.

(ஐ)

## இங்கிலாந்து அணி அறிவிப்பு

லண்டன்,ஓக.8

மினி உலகக் கிண்ணப் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணி வீரர்கள் விவரம் வருமாறு:-

மைக்கல் வோகன், டிரெஸ்கோதிக், கபீர் அலி, பேட்டா, கொலிங்வூட், பிளிண்டொப், ஆஸ்லி கில்ஸ், டெரன்கௌவ், ஹார்மிஷன், அண்டர்சன், ஜோன்ஸ், அன்ரனிமெக்ராத், ஸ்டாஸ், விக்ரம் சோலங்கி.

(10)

## இலங்கை – தென்னாபிரிக்க முதல் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவுறும் நிலையில்

காலி,ஓக.8

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 376 ஓட்டங்களை எடுத்துள்ளது.

அணியின் சார்பில் றுடொல்ப் 102 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் 59 ஓட்டங்களையும் டிப்பென்னர் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் சார்பில் பந்துவீச்சில் முரளிதரன் 4 விக்கெட்டுகளையும் சமிந்த வாஸ், ஜயசூரிய ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

கடந்த புதன்கிழமை தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 486 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் மஹேல ஜயவர்த்தன 237 ஓட்டங்களையும் சமிந்த வாஸ் 69 ஓட்டங்களையும் சங்ககார 58 ஓட்டங்களையும் எடுத்தனர்.

தென்னாபிரிக்க அணியின் சார்பில் ஷேன் பொலக் 4 விக்கெட்டுகளையும் ஹைவாட் 3விக்கெட்டுகளையும் நிக்கிபோஜே 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்படி, 110 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ள இலங்கை அணி நேற்றுமதியம் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. இன்று போட்டியின் இறுதிநாளாகும். இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் மஹேல



ஜயவர்த்தன பெற்ற 237 ஓட்டங்களில் 25 பவுண்டரிகளும் 3 சிக்ஸர்களும் அடங்கும் இது இவரின் இரண்டாவது இரட்டைச் சதமாகும்.

முரளிதரன் 4 விக்கெட்டுகளைக் கைப் பற்றியதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 531 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். ஏற்கனவே, 527 விக்கெட்டுகளுடன் இவரும் ஷேன வோனும் சமநிலையில் இருந்தமை குறிப் பிடத்தக்கது.

(10)

## விக்கெட் காப்பாளராக ட்ராவிட் நீடிப்பார்; சௌரவ் கங்குலி உறுதிபடத் தெரிவிப்பு

புதுடில்லி,ஓக.8

இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளராக ட்ராவிட் தொடர்ந்து நீடிப்பார் என்று அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள ளார்.

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான எல்.ஜி.கோப்பை அறிமுகநிகழ்வு புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட கங்குலி, இந்திய அணி அதிக இறுதி ஆட்டங்களில் தோல்வி கண்டு இருப்பதை ஏற்றுக்கொள்கிறேன். சில இறுதி ஆட்டங்களில் வென்றும் இருக்கிறோம். இறுதி ஆட்டங்களில் எங்களது அணுகுமுறை பற்றி மறுபரிசீலனை செய்துவருகிறோம் - என்றார்.

இறுதிஆட்டத்தில் தோற்றதற்காக 'கோமாளிகள்' என்று வர்ணிப்பது முறையற்றதாகும். ஆஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக உலகின் எல்லா இடங்களிலும் நடந்த போட்டிகளில் இந்தியா வென்றுள்ளது. இலங்கை அணி சொந்த



மண்ணில்தான் வெற்றிபெற்றுள்ளது.

தினேஷ்கார்த்திக் அணியில் சேர்க்கப்பட்டாலும் ட்ராவிட்டே ஒருநாள் போட்டிகளில் விக்கெட் காப்பாளராக நீடிப்பார். ட்ராவிட் காயமடைந்தால் மட்டுமே தினேஷ் கார்த்திக்குக்கு வாயப்புக்கிடைக்கும் எனவும் கங்குலி தெரிவித துள்ளார்.

(10)

யுத்தத்தால் சேதமடைந்த

# கெருடாவில் சரஸ்வதி வித்தியாலயத்தை மீளமைக்குமாறு பிரதேச செயலருக்கு மகஜர்

தென்மராட்சி,ஓக.8

கடந்த பத்து வருடங்களாக இயங்காமல் முழுமையாகச் சேதமடைந்து காணப்படும் கெருடாவில் சரஸ்வதி வித்தியாலயத்தை மீள அமைத்து இப்பகுதி மாணவர்களின் சிரமங்களைத் தவிர்க்குமாறு கெருடாவில் திருக்குமரன் சனசமூக நிலையத்தினர் தென்மராட்சிப் பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

ஆரம்பப்பிரிவைக் கொண்டு இயங்கிவந்த இப்பாடசாலையில் இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்று வந்தனர்.

கடந்த பத்து வருடங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் பாடசாலையின் அத்திபாரம் மட்டுமே காணப்படுகிறது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டால் இப்பகுதியில் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வியைக் கற்க முடியும். இப்பாடசாலை இயங்காததால் மாணவர்கள் தமது கல்விக்காக மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால உள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது.




முழுமையாகச் சேதமடைந்துள்ள இப்பாடசாலையினை மீள அமைத்து இப்பகுதி ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி நிலையை அபிவிருத்தி செய்ய வேண்டும் - என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி - கெருடாவில் திருக்குமரன் சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகியவற்றின் திறப்பு விழாவில் இந்த மகஜர் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

'நிக்கொட்' நிறுவனத்தினரால் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட திருக்குமரன் சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகிய கட்டடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (8-117-31)

## உலக வங்கி உதவியுடன் வீடமைப்புக் கொடுப்பனவு

தென்மராட்சி,ஓக.8

உலக வங்கியினால் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி பிரிவில் வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 23 பயனாளிகளுக்கான முதல் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவென யாழ்.செயலக திட்டமிடல் பிரிவினர் உரிய காசோலையினை தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

பயனாளிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் தமது கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (8-117)

## வெடிபொருள்களுடன் கைதானோர் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.8

மீன்பிடிப் படகில் வெடிபொருள்களை வைதிருந்ததாகக் கூறி குருநகர்-சீநோர் இறங்குதுறையில் வைத்து கடந்த ஜுலை 15ஆம் திகதி பொலீஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்றுமுன்தினம் யாழ். மேலதிக நீதிமன்றினால் நிபந்தனையுடனான பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைககப்பட்டிருந்த சந்தேக நபர்களான குருநகரைச சேர்ந்த வின்சன் சுமன், டொனால்ட் நீகன், கிறேசியன் ஜெகன் மற்றும் மொஸ்கோ டால்கன் ஆகிய நால்வரும் நேற்று யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, குறிப்பிட்ட வழக்கு தாக்குதல் ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் தாக்குதல் ஆயுதங்கள் எவையும் கைப்பற்றப்படவில்லை; அங்கு சாதாரண வெடிபொருள்களே மீட்கப்பட்டன என நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அதற்குப் பதிலளித்த பொலீஸார், இந்த வழக்கு தாக்குதல் ஆயுதச் சட்டத்தின் கீழா அல்லது சாதாரண வெடிபொருள் சட்டத்தின் கீழா தொடரப்படவேண்டும் என்பது குறித்து தமக்கு எதுவும் தெரியாது.

இது தொடர்பாக தாம் சட்டமா அதிபரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெறவேண்டியுள்ளது - என்று கூறினர்.

இதனையடுத்துச் சம்பந்தப்பட்ட நால்வரையும் கிராம சேவகரால் உறுதிசெய்யப்பட்ட - 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் தலா இருவரது ஆள்பிணையில் செல்லவும் - வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் பொலீஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் - மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (8-9)

உலக உணவுத் திட்டத்தின் கீழ்

## 21 விவசாய வீதிகளின் புனரமைப்புப் பணி ஆரம்பம்

கொடிகாமம்,ஓக.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழ் 21 விவசாய வீதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபைச் செயலர் ந.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டை விட இவ்வாண்டு கூடுதலான வீதிகள் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பொதுமக்களின் ஒத்துழைப்பு சரியாகக் கிடைக்குமானால் திட்டமிட்ட வீதிகள் அனைத்தும் விரைவில் புனரமைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புனரமைப்புப் பணிகளுக்குச் செலவிடப்படும் மனித வளத்திற்கான பொருள்களை உடனடியாக வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (8-74)

## டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்கு மந்திகை வைத்தியசாலையில் சிரமதானம்

வடமராட்சி,ஓக.8

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் நோய் பரவாமல் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக மந்திகை அரசின் ஆதார வைத்தியசாலை வளவு சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

இத்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முக்கிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் வடமராட்சியில் உள்ள திணைக்களங்கள் மேற்கொள்ளும் தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வளவைச் சுத்தம் செய்யும் சிரமதானப் பணி ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்று வருகிறது.

வைத்தியசாலைகளில் பணியாற்றும் ஆண், பெண் தொழிலாளர்கள் பரிசாரகர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் தினமும் முற்பகல் 10.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரை தமது அன்றாடக் கடமைகளை விடுத்துச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பணியின்போது வைத்தியசாலை வளவில் உள்ள கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டு புல் பூண்டுகள் யாவும் வெட்டப்பட்டு வைத்தியசாலை வள்வு முழுவதும் துப்புரவாக்கப்பட்டு வருகின்றன. (8-173)

### பருத்தித்துறை பிரதேச செயலக ஊனமுற்றோருக்கான கூட்டம்

வடமராட்சி,ஓக.8

பருத்தித்துறை பிரதேச செயலக ஊனமுற்றோர்களுக்கான கிராமிய மட்ட நிறுவனத்தின் கூட்டம் நாளை திங்கட்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும். (8-173)

### உள்ளூராட்சிவாரக் கண்காட்சி

வட்டுக்கோட்டை,ஓக.8

வலிகாமம் மேற்கு பிரதேசசபை நடத்தும் உள்ளூராட்சி வாரக் கண்காட்சி இன்று காலை 9.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆரம்பமாகும்.

பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவ்லிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் பிரதமவிருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்வார். (8-161)

### பம்பாய் வெங்காயம் அறுவடை

வட்டுக்கோட்டை,ஓக.8

அராலிப் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட பம்பாய் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருகின்றது. இவ்வருடம் பம்பாய் வெங்காயத்தின் விளைச்சல் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

கடந்த வருடங்களைப் போல் அன்றி இவ்வருடம் பம்பாய் வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-161)



தேசிய சேமிப்பு வங்கியில் (கொழும்பு தலைமை அலுவலகம், கண்டி, யாழ்ப்பாணம், சுன்னாகம்) 32 வருட காலம் சேவையாற்றி ஓய்வுபெற்ற சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் முகாமையாளர் திருமதி ரதி தியாகராஜாவின் சேவைநலன் பாராட்டு வைபவத்தில் திருமதி ரதி தியாகராஜா மங்கள விளக்கேற்றுவதையும், அவரது கணவர் சட்டத்தரணி தியாகராஜா, முகாமையாளர் வி.அருளானந்தம், உதவி முகாமையாளர் திருமதி ஆர்.பாலேந்திரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம். *(படம்:தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

## யாழ்.கல்வியியல் கல்லூரியில் பயின்றோருக்கு தென்னிலங்கைப் பாடசாலைகளில் நியமனம்

அச்சுவேலி,ஓக.8

யாழ்தேசிய கல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு தென்னிலங்கையில் உள்ள தேசியப் பாடசாலைகளில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாயில் இயங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் பயிற்சிபெற்று வெளியேறிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 15 ஆசிரியர்களுக்குக் கடந்த வாரம் கொழும்பு இசுறுபாயாவில் உள்ள கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

நேர்முகப் பரீட்சையின் போது ஆசிரியர் நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

அதில் உடனடியாகச் செயற்படும்படியாக மாத்தறை உட்பட தென்னிலங்கை மாவட்டங்களில் உள்ள தேசியப்பாடசாலைகளில் கடமையேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்குள் நியமனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

இல்லையேல் நியமனம் இரத்துச் செய்யப்படும் என்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நேர்முகப் பரீட்சைக்குச் சென்றவர்களில் அநேகர் பெண்கள். இவர்கள் தாம் வசிக்கும் சொந்த மாவட்டங்களில் நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் கொழும்புக்குச் சென்றிருந்தனர் என்றும் -

நியமனக் கடிதத்தில் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதை அடுத்து அவர்கள் கவலையுடன் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில ஆயிரக்கணக்கில் ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ள போது தமக்கு தென்னிலங்கைப் பாடசாலைகளில் நியமனம் வழங்கப்பட்டமை குறித்து மேற்படி ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-11)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் கிருபானந்தவாரியாரின் சிலை

வடமராட்சி,ஓக.8

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஐம்பொன்னாலான திருமுருக கிருபானந்தவாரியாரின் உருவச்சிலை ஒன்று அண்மையில் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டது.

இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட 21 கிலோ நிறையுள்ள இச்சிலை லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டது.

லண்டனில் வசித்துவரும் ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த நா.சிவானந்தஜோதி இச்சிலைக்கான நிதியினை வழங்கியுள்ளார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் ஆசியுரையுடன் இச்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட நிகழ்வில் பல சமயப்பெரியார்கள் கலந்துகொண்டனர். (8-173)

நியாப் திட்டத்தின் கீழ்

## தென்மராட்சியில் 6 குளங்கள் இவ்வாண்டில் புனரமைப்பு

தென்மராட்சி,ஓக.8

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்ட (நியாப்) நிறுவனத்தினர் இவ்வருடம் (2004) தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஆறு குளங்களை 58 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கவுள்ளனர்.

மட்டுவில் சப்பட்டியான் குளம் 9 லட்சம் ரூபா செலவிலும், கைதடி தெற்கு கோப்பையன் குளம் 18 லட்சம் ரூபா செலவிலும், கைதடி நுணாவிற்குளம் 7 லட்சம் ரூபா செலவிலும், மட்டுவில் தெற்கு ஆவரமபிட்டிக்குளம் 8 லட்சம் ரூபா செலவிலும், சரசாலை மாதுளா வாய்க்கால் 10 லட்சம் ரூபா செலவிலும், நுணாவில் மேற்கு கொல்லங்கிராய்குளம் 6 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

இதேவேளை -

இந் நிறுவனத்தினரால் வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் 6 லட்சத்து 45 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது மண்டப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-117)

# WANTED

An International Organization requires the services of a Medical Doctor RMP/AMP/MBBS.
To operate a free mobile Medical Clinic on part time or full time basis in North/East.
Terms Negotiable. Contact:011 2502383 or 011 365055.

**Humanitarial Rehabilitation Services of N.E.Lanka(Pvt) LTD.**
(34972)(34-16-19) 50, Hampden Lane, Colombo-06.



# வேலை வாய்ப்பு

உலகத் தரம் வாய்ந்த ஆயுள் காப்புறுதி நிறுவனம் தன்சேவையை யாழ். நகரில் விஸ்தரிக்கும் நோக்குடன் ஆரம்பித்துள்ளது.

தொழில் வாய்ப்பின்றியுள்ள ஆண்/பெண் இருபாலார்களும் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு எதிர்வரும் 14.08.2004 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

G.C.E. (O/L) **கணிதம் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.**

**மே/பா உதயன்**
No:2340
(34924)(34-19-16)


## திராய்க்கேணி நினைவுதினம் அனுஷ்டிப்பு

அம்பாறை மாவட்டத்தின் திராய்க்கேணி கிராமம் 1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6 ஆம் திகதி இராணுவத்தினராலும் ஊர்காவல் படையினராலும் சுற்றிவளைக்கப்பட்டு 52 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களது 14ஆம்ஆண்டு நினைவுநாள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

## எழுதுவினைஞர்கள் இடமாற்றம்

வேலணை பிரதேச சபையில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றி 01.08.2004 முதல் யாழ். மாநகரசபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற கார்த்திகேசு சண்முகதாசனின் இடத்துக்குப் பதிலாக சபையின் கணக்குப்பகுதி சிரேஷ்ட எழுதுவினைஞர் ஐயம்பிள்ளை குருச்சந்திரநாதன் 01.08.2004 முதல் சபையின் பிரதம எழுதுவினைஞராகப் பொறுப்பேற்றுள்ளார்.

(ஐ)


# தேவை

வைத்திய உத்தியோகத்தர், RMO தற்காலிக, முழுநேர வேலைக்கு விண்ணப்பிக்கவும்.

வைத்திய அதிகாரி
**சென்றல் நேசிங் ஹோம்**
350, பலாலி வீதி, திருநெல்வேலி.
(34974)



# விற்பனையாளர் தேவை

பாடசாலைப் புத்தகம், உபகரணம், பேப்பர் வகைகள் விற்பனையில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(சி-36438)



இதோ யாழ். மக்களுக்கோர் புத்துணர்வூட்டும் புதுப்பொலிவுடன் திகழும்

# பவர் செலூலர் ரேடிங் கம்பனி

நிறுவனத்தினர்

இப்பொழுது வடமராட்சி மக்களுக்காகத் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பெற்று, மிகத்துல்லியமான முறையில் உங்கள் அன்புச் செல்வங்களுடன் பேசி மகிழ இன்றே விரையுங்கள்

**பவர் செலூலர் ரேடிங் கம்பனி**

மேசைத் தொலைபேசி விற்பனையில் முன்னோடியாகத் திகழும்
*பவர் செலூலர் ரேடிங் கம்பனி* நிறுவனத்தினர்

குறிப்பு: இம்மேசைத் தொலைபேசிகள் யாவும் அன்ரனா இணைப்புகள் மூலமும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு இணைப்புகள் யாவும் 24 மணி நேரத்தில் பெற்றுத்தரப்படும்.

எமது சேவை ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் துணை நிறுவனமாகிய மொபிட்டல்

**பவர் செலூலர் ரேடிங் கம்பனி**
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்: 205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (ராஜா தியேட்டர் அருகில்).
அலுவலக T.P.: 021-222 -7070, 0712-399220, Hot Line: 0777 281521.
(சி-36458) (24-34-19-18)



# பதவி வெற்றிடம்

**ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**
இப்பிரபல காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு

**காப்புறுதி முகவர்கள் தேவை**

கல்வித் தகைமைகள்: க.பொ.த.சாதாரணதரம் (கணிதம் முக்கியம்)
க.பொ.த.உயர்தரம்

வயதெல்லை: 18-55 வரை

வேறு காப்புறுதி நிறுவனங்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங்களில் வேலைசெய்வோரும் பகுதி நேரமாக இணைந்துகொள்ளலாம்.

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் 09-08-2004 இல் இருந்து ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் கீழ் உள்ள முகவரிக்கு நேர்காணலுக்காகச் சமுகந்தரலாம்.

**ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**
55, R.G. கட்டடம், கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 6325, 6326.
(34975)(26-34-18-19)



# BE ELIGIBLE TO WORK IN USA, UK AND AUSTRALIA!

After studying 1 year in Singapore

**Hospitality + Hotel Management Program**




American Hotel & Lodging Association

**Continental Educators (CE)** in Singapore is committed to bring you the best of world training and Hospitality Train & Earn Schemes. Conducted by dedicated team of professional lecturers to guide you toward worldwide-recognized awards. With **CE** you will receive the following:

* Intensive English course for Beginners / Intermediate / Advance conducted in Singapore
* Simple Overseas Admission Procedures
* 12-Months Full Time Diploma Modules
* Using 100 % U.S. Study Materials
* Affordable Way to get Quality



Don't miss this Great Opportunity which offers Allowances in **US Dollars** after the first year...

To learn more, visit our Sri Lankan representative's office

DECISION MAKERS
T M M P

**TOTAL MARKETING MANAGEMENT PROGRAMME**

Head Office
3rd Floor, Confidence Building, No 05,
St Anthony's Mawatha, Colombo 03, Sri Lanka

Jaffna Branch:
C/o Spectrum Institute of Science & Technology
No. 711, K.K.S Road, Jaffna. T.P : 94-21-2226188

Tel: 94-11-2564149, 94-11-2564008 Fax: 94-11-2370980 E-Mail: tmmp@sltnet.lk
OFFICES IN SINGAPORE, MALAYSIA, MALDIVES & INDIA

Optimum


விண்ணகவாழ்வில்

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 24 - 11 - 1952



இறைவன் அடியில் 01 - 08 - 2002

**அமரர் சின்னப்பு நாகேந்திரன்** (நடராசா)

திதி: 08-08-2004

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை
இரண்டாண்டும் கடந்ததப்பா
மாறாத நினைவுதனை மனதிலே
வரைந்து கொண்டு
தவறாமல் உம்மையே தினம் தினம்
எண்ணுகிறோம் அப்பா!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு
ஆனால் அப்பா என்று அழைக்க யாரும் இல்லையே!

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
(சி-36451)(26-34-18-19)

பாசமிகு மகன்:
றஞ்சித்குமார்.


Dialog GSM
kit
எந்நேரமும் உன்னுடன்..

**டயலொக்**
கையடக்கத் தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**WESTERN UNION** வெஸ்டன் யூனியன் | **MONEY TRANSFER** பணப் பரிமாற்றம்
மூலம்
ஒரு சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைத்திட எம்மை நாடுங்கள்:

பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற சகல விதமான
**SILVER SHIELD SOCKS**
•மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட

**ஸ்ரீ முருகன் SRI MURUGAN** 303,K.K.S.Road Jaffna. ☎ 021 222 5392
தொலைத் தொடர்பகமும் முகவர் தபாலகமும் Tele Communication & Agency Post Office. E.mail del-smskr@eureka.lk Fax : 222 3435

# நல்லொழுக்கமும் நற்சிந்தனையுமே உடலையும் மனதையும் வளமாக்கும்

நல்லூர்க்கந்தன் ஆலயத்துக்கு மாலை வேளைப் பூசைக்குச் செல்லும்போதெல்லாம் இந்த மூத்தவரைக் காணலாம். முன்னர் நாளாந்தம் மூன்று வேளைப் பூசை காண்பதைக் கட்டாயமாக்கிக் கொண்டிருந்த தாம், இப்போது ஒரு வேளைப் பூசைக்கு வருவதே வழக்கம் என்றும், அதன் பின்னர் நடைபெறும் தேரடிச் சந்திப்பும் தவிர்க்க முடியாததாகிவிட்டது என்றும் கூறுவார்.

தமக்குத் தெரிந்தவரோ இல்லையோ, தம்மை நெருங்கிப் பேச்சுக் கொடுக்கும் எவரிடமும் இனிமையாகவும் அன்பாகவும் கனிவாகவும் பதிலுக்கு உரையாடும் சுபாவம் இந்த ஐயாவுக்கு.

இந்த மூத்தவரின் சுறுசுறுப்பும் எப்போதும் சிரித்துக்கொண்டே பேசும் பழக்கமும் எவரையும் அவருடன் பேசுவதற்குத் தூண்டுபவையாக அமைந்துள்ளன.

## அனுபவங்களைப் பகிர்கிறார் மூத்தவர் சி.கார்த்திகேயன்

அடிக்கடி நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சென்றபோது அவருடன் கலந்துரையாட வேண்டும் என்ற தூண்டுதல் உண்டானது.

அந்த மூத்தவரை அணுகி விசாரித்தோம். அந்த நல்லடியார் ஆன்மீகவாதி மட்டுமல்லர், நல்ல இசைஞன், கவிஞன், தமிழை இலக்கிய, இலக்கண மரபுகளுடன் கற்றுத் தேறிய தமிழ் ஆசான் என்பதையும் தெரிந்துகொண்டோம்.

உதயனின் ஞாயிறு இதழில் ஆரம்பிக்கத் திட்டமிட்ட முத்தான மூத்தவர்கள் பகுதிக்கு முதலாமவராக இவரையே அறிமுகப்படுத்த விழைந்தோம். அவரது வயதைக் கேட்டு அறிந்ததும் (அவருக்கு 88 வயது பூர்த்தியாகி இப்போது 89ஆவது வயதில்) அவரே முதலாமவர் என்று மனம் முடிவு செய்தது.

எல்லாம் முருகன் செயல். நான் என்ன வகையில் பெரியவன் என்று கருதி இப்படி ஒரு பெரிய விடயத்தில் என்னை கலந்துகொள்ளச் சிந்தித்தீர்கள் என்றார் வழமையான சிரிப்புடன். நீங்கள் வயதில் மிக மூத்தவர். ஏதோ ஒரு வகையிலேனும் எங்களுக்கும் எமது இளம் சந்ததிக்கும் பல முதுசொம்களை இதுவரை தேடி வைத்திருப்பீர்கள். அவற்றை வெளிப்படுத்த வேண்டும் என்பது எமது ஆவல். எனக்காக அல்ல; உங்களுக்காக அல்ல; உதயன் வாசகர்களுக்காகவே என்று பதிலளித்தோம். இதுவும் முருகன் செயல் என்றோம்.

"ஓம், ஓம் எல்லாம் அவன் செயலன்றி வேறென்ன?" என்றவர் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் தன்னை வசதியாகச் சந்திக்கலாம் என்று புன்னகை தவழக் கூறினார்.

அவரது வீடு சென்று சந்தித்தார் உதயனின் பிரதிநிதி. மூத்த முத்தான பெரியார் பண்டிதர் சி.கார்த்திகேயன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

1940களில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் பயின்று வெளியேறி ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். 1960 ஆம் ஆண்டில் பண்டிதர் பட்டம் பெற்ற இவர் இலக்கியம் மற்றும் ஆன்மீகத் துறைகளில் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக "சேந்தன்" என்ற புனைபெயரில் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இன்றைய தமது முதுமைப் பருவத்திலும் தம்மை நாடிவரும் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தில் ஏற்படும் சந்தேகங்களைப் போக்கி உதவி வருகிறார்.

கடந்த 40 ஆண்டு காலமாகத் தொடர்ச்சியாக நல்லூர்க் கந்தனின் மாலை நேரப் பூசை வழிபாட்டில் தவறாது கலந்துகொள்ளுகிறார். மாலை வேளைகளில் ஆலயத்தில் அருகில் இடம்பெறும் தேரடிச் சந்திப்பில் கலந்துகொண்டு தமது பொழுதை ஆன்மீக வழியில் கழித்து வருகிறார்.

அவரிடம் நாம் தொடுத்த வினாக்களையும் பதில்களையும் தொகுத்துத் தருகின்றோம்.



பண்டிதர் சி.கார்த்தியேன்
(கவிஞர் சேந்தன்)

## முத்தான மூத்தவர்கள் - 1

*கேள்வி:* தங்களது வாழ்க்கை குறித்து....?

*பதில்:* நான் தென்மராட்சியிலுள்ள மறவன் புலவு என்ற கிராமத்தில் பிறந்தேன். எனது தகப்பனாரின் பெயர் சின்னப்பா, தாயார் அன்னம்மா. அவர்களது இரு பிள்ளைகளில் நான் மூத்தவன். 1916ஆம் ஆண்டில் பிறந்த நான், எனது ஆரம்பக் கல்வியைக் கிராமத்திலிருந்த பாடசாலையில் கற்றேன். எனது 12ஆவது வயதில் தாயாரை இழந்த நான், தொடர்ந்து நான்கு ஆண்டுகள் கழித்து எனது தந்தையாரையும் இழக்க நேர்ந்தது. அதனால் எனது கல்வி தடைப்பட்டது.



மூத்தவர் இன்றும் துடிப்புடன்

அதைத் தொடர்ந்து எனது தந்தையாரின் நெருங்கிய நண்பரொருவரின் விருப்பத்தின் பேரில் திருநெல்வேலிக்குச் சென்று அவருடைய வீட்டிலேயே தங்கினேன். அவருடைய வழிகாட்டலின்பேரில் இரண்டு ஆண்டுகளின் பின் மீண்டும் திருநெல்வேலி சின்னமுத்துத்தம்பி வித்தியாசாலையில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்த நான், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப பரீட்சையில் சித்தியடைந்தேன்.

1940ஆம் ஆண்டில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் இணைந்து ஆசிரிய பயிற்சியை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் கிட்டியது. மூன்றாண்டுகள் பயிற்சியை முடித்து 1943இல் வெளியேறினேன்.

### ஆசிரியர் வேலை தேடிப் பிடிக்கவேண்டும்

அக்காலத்தில் நாட்டின் பாடசாலைகள் அரசினால் தேசிய மயமாக்கப்பட்டிருக்கவில்லை. ஆசிரியபயிற்சி பெற்றவர்கள் தாமாகவே வேலை தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. 1944இல் மலைநாட்டில் தோட்டப் பாடசாலை யொன்றில் ஆசிரியர் தொழிலை ஆரம்பித்து, 1951ஆம் ஆண்டில் அப்போது யாழ். மாவட்டத்தில் இயங்கிய 'இந்துப்போர்ட்'டில் ஆசிரிய நியமனம் பெற்றேன். யாழ். குடாநாட்டின் பல பாடசாலைகளில் பணிபுரிந்த நான், 1963ஆம் ஆண்டில் யாழ். வண்ணை நாவலர் பாடசாலையில் தொடர்ந்து எட்டு ஆண்டுகள் ஆசிரியப் பணி புரிந்து 1971ஆம் ஆண்டில் சேவையிலிருந்து ஓய்வுபெற்றேன். அன்றிலிருந்து இன்று வரை ஆத்மீகத்துறை ஈடுபாட்டுடன் அமைதி யாக வாழ்ந்துவருகிறேன்.

*கேள்வி:* தங்களுக்கு தேவாரப் 'பண்ணிசை மணி' என்ற பட்டமும் உண்டெனக் கேள்விப் பட்டோம். அதுகுறித்துச் சிறிது கூறமுடியுமா?

*பதில்:* இயற்கையாகவே எனது சிறுவயது முதல் என்னிடம் காணப்பட்டு வந்த இசையார்வத்தின் உந்துதலால் அச்சமயம் இந்தியாவிலிருந்து இங்குவந்து பயிற்சிநெறிகளை நடத்திய இந்துமத அமைப்பொன்றில் இணைந்து பயிற்சியை மேற்கொள்ள விரும்பினேன். இவ்வாறு 1956ஆம் ஆண்டுமுதல் அந்த அமைப்பில் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டது மன்றி, அவ்வமைப்பினால் 1961ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியும் எய்தினேன். அதன்மூலம் "தேவாரப் பண்ணிசை மணி" என்ற பட்டம் எனக்குக் கிடைத்தது. தேவாரப் பாடல்களை அவற்றுக்குரிய பண்ணுக்கேற்ப இசைப்பதற்கான பயிற்சிநெறிமூலம் கிடைத்த அனுபவங்களே இன்றும் ஏனையோர் பாராட்டும் வண்ணம் தேவார திருவாசகங்களை ஓதும் திறனை எனக்குப் பெற்றுத்தந்துள்ளன.

*கேள்வி:* நீங்கள் தமிழ் இலக்கியத்துறைக்கும் ஆத்மீகத்துறைக்கும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளதாகக் கேள்விப்படுகிறோம். அது பற்றிக் கூறமுடியுமா?

### பண்டிதமணியின் மாணவன்

*பதில்:* தமிழ்மொழி, இலக்கியத்துறைகளுக்குப் பெரிய அளவில் பங்களிப்பெதனையும் செய்ததாகக் கூறமுடியாது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் ஆசிரியப் பணி செய்த காலத்தில் மாணவனாக நான் இருந்தேன். பண்டிதமணி ஐயாவிடம் கல்வி கற்றவர்களில் நானும் ஒருவன் என்பதில் எனக்குப் பெருமையுண்டு. பண்டிதமணியின் மாணாக்கர்களில் பலர் தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளனர்; இன்றும் ஆற்றி வருகின்றனர். இயற்கையாகவே என்னிடம் மிகுந்திருந்த மொழியார்வம் காரணமாக நான் பாலபண்டிதர் பரீட்சைக்கு என்னைத் தயார்ப்படுத்தி வந்ததுடன், 1960ஆம் ஆண்டில் பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியும அடைந்திருந்தேன். அந்தவகையில்,

வேண்டுமானால் தமிழ்மொழி, இலக்கிய ஆர்வலன் என என்னைக் குறிப்பிடலாம். இயற்கையாகவே எனக்கு நல்ல குரல் வளமுண்டு. அதனாலேயோ என்னவோ சிறுவயது முதல் எனக்கு இசையில் நாட்டம் இருந்து வந்தது. இவையெல்லாவற்றையும்விட எனது மனதும் எண்ணமும் ஆத்மீகத் துறையிலேயே அதிக ஈடுபாடு கொண்டிருந்தன.

இலக்கியப் பங்களிப்பு என்றவகையில் 1963 ஆம் ஆண்டில் நான் தொகுத்து வெளியிட்ட 'சொக்கனும் சேந்தனும்' என்ற நூலைக் குறிப்பிடமுடியும். சிறுவர்களுக்கான இசைப்பாடல்கள் கொண்ட தொகுப்பு அது. கலாநிதி சொக்கனதும் என்னுடையவையுமான பாடல்கள் அடங்கிய அத்தொகுப்பு நூல் அந்தவேளையில், பாடசாலைச் சிறுவர்களுக்குப் பயனளிப்பதாக அமைந்திருந்தது. அந்நூல் மூலம் 'சேந்தன்' என்பதை எனது புனைபெயராக்கிக் கொண்டேன். அதனைத் தொடர்ந்து பல ஆண்டுகால இடைவெளியின் பின் 1989இல் வெளியிடப்பட்ட நூல் "சேந்தனின் பிள்ளைப்பாடல்" சிறுவர்களுக்கான இசையுடன் பாடத்தக்க நூல்கள் அதிகம் வெளிவந்திருக்காத அந்தக் காலத்தில் அந்தப் பிள்ளைப் பாடல் நூலுக்கும் நல்ல வரவேற்பிருந்தது.

ஆத்மீகத் துறைக்கான எனது பங்களிப்பு என்றவகையில் 1994இல் வெளியிடப்பட்ட "நல்லை நாற்பது", 1999இல் வெளியிடப்பட்ட "திருநல்லைப் பதிற்றுப்பத்து" மற்றும் 2001 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "திருநல்லைப் பிள்ளைத்தமிழ்" ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். இவை மூன்றும் நல்லூர் முருகனின் புகழ் குறித்துப் பாடப்பட்டவை. இவை யாவும் அக்காலத்திய இலக்கண மரபுக்கமைந்த கவிதை நூல்கள். இந்நூல்களின் வெளியீடு மூலம் பெறப்பட்ட இலாபத்தொகை முழுவதையும் நல்லூர் முருகனுக்கே அர்ப்பணித்துவிட்டேன்.

இவை தவிர, 1971ஆம் ஆண்டில் நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்துக்கும், 1995 இல் இடம்பெயர்ந்து மல்லாவியில் வாழ்ந்த சமயம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கோயில்களின் நிர்வாகத்தினரின் வேண்டுகோளின் பேரில் அந்தந்த ஆலய எழுந்தருளித் தெய்வங்களின் பேரிலும் திருவூஞ்சல் பாடல்களை யாத்துக்கொடுத்துள்ளேன். இன்றும் நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத் திருவூஞ்சல் விழாவின்போது நான் யாத்து வழங்கிய பாடல்களே பாடப்பட்டு வருகின்றன.

**நேர்காணல்: பொன்வேலன்**

*கேள்வி:* ஆத்மீகத்துறையில் தங்களது இவ்வித ஈடுபாட்டுக்கான பின்னணி ஏதாவதுண்டா?

*பதில்:* நான் பிறந்து வளர்ந்து, சிறுவயதில் வாழ்ந்த சூழ்நிலையும் அதற்குக் காரணமாயிருக்கலாம். எனது குடும்பம் விவசாயக் குடும்பம். வயலும் வயல்சார்ந்த சூழலிலும் சூழவுள்ள கோயில்களின் வழிபாடு, திரு உலாக்கள் மற்றும் புராணப்படிப்பு என்பனவும், அமைதியான சூழலும், ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிக்க சமூகச் சுற்றாடலும் இதற்குத் தூண்டுகோல்களாக அமைந்திருக்கலாம்.

நாங்கள் புராணபௌராணிகர்கள். இதன் விளக்கத்தை இங்கு தெரிவித்தாக வேண்டும்.

பௌராணிகர்களான எமது குடும்பத்தைச் சேர்ந்த எவரும் மாமிசம் ஒருபோதும் புசிப்பதில்லை. ஆலயங்களில் ஓதுவார் எனப்படுவோரைப் போன்றே நாமும் சுவாமி எழுந்தருளும் வேளையில் பஞ்சபுராணம் ஓதும் வழக்கத்தைக் கொண்டுள்ளோம். அந்தவகையில், இன்றும் நான் சில கோயில்களில் அப்பணியை மேற்கொண்டு வருகிறேன்.

இவை யாவற்றுக்கும் மேலாகக் கடந்த பல ஆண்டுகளாக நல்லூர் தேரடிச் சந்திப்பில் கலந்துகொள்ளும் நான், ஏனைய முருகபக்தர்களுடன் இணைந்து புராண வாசிப்புப் பயன் சொல்லும் பணியையும் மேற்கொள்வதால் மனநிறைவும், புத்துணர்வும் அடைகிறேன்.

அந்தக் காலத்தில் கோயில்களில் உற்சவ காலங்களில் புராணப் படிப்பு என்றொரு நிகழ்வு நடைபெறுவதுண்டு. இன்று அந்த வழக்கம் அருகிப்போய்க் காணப்பட்டாலும் முற்றாக அற்றுப்போய்விடவில்லை என்பது மனதுக்கு ஆறுதலளிக்கும் ஒரு விடயமாகும்.

முருகன் கோயில்களில் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் மற்றும் திருச்செந்தூர் புராணம் என்பவற்றை ஒவ்வொரு பாடலாக வாசித்து அவற்றுக்கு மற்றொருவர் பயன் சொல்லும் வழக்கமே புராணப்படிப்பு. இது நாவலர் காலத்திலிருந்து பண்டிதமணி காலம்வரை பிரபல்யம் பெற்றிருந்த நடைமுறையாகும். அந்த வகையில், சிறுவயதில் எமது ஊர்க் கோயில்களில் இடம்பெறும் இப்புராணப் படிப்புக்களில் எமது தந்தையார் ஈடுபட்டதுண்டு. அதன் மீதான ஈர்ப்பும் நான் இந்நடைமுறையைப் பின்பற்றக் காரணமாயிருக்கக்கூடும்.

அதுமட்டுமன்றி, நான் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்றதில்லை. நாம் கல்வி கற்ற வேளையில், எமது மதச்சூழலில் ஆங்கில

(10 பக்கம் பார்க்க)

---

*எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி*
*இருந்ததும் இந்நாடே - அதன்*
*முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து*
*முடிந்ததும் இந்நாடே - அவர்*
*சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து*
*சிறந்ததும் இந்நாடே..........*

..............................

- மகாகவி பாரதியார் -

முந்தையர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து அவற்றை அவர்கள் செயலாக் கியதன் விளைவாக எமக்குக் கிடைத்த முதுசொம்கள் பலவகை, பலதிறம், பல ரகம்.

எங்கள் மத்தியில் இப்போது வாழ்ந்துவரும் மூத்தவர்கள் எமக்குப் பல முதுசொம் களை உருவாக்கியிருப்பர்.

அவர்களின் அந்தநாள் வாழ்க்கைமுறையும் அவர்தம் சாதனைகளும், சேவைகளும் பலப்பல சங்கதிகளைச் சொல்லும். அந்தச் சங்கதிகளில் எமது இன்றைய இளம் சந்ததியினருக்கு மட்டுமன்றி, இனிவரும் சந்ததியினருக்கும் பல புதிய விடயங்கள், பலவகைப் படிப்பினைகள் என்று பலதும் வெளிச்சமாகும். வெவ்வேறு வாழ்க்கைத் துறைகளைச் சேர்ந்த மூத்தவர்கள் தரும் அனுபவங்களும் அவர்தம் திறமைகள், சேவைகளைப் பதிவுசெய்யும் இந்த **முத்தான மூத்தவர்கள்** சிறப்புப் பகுதி ஞாயிறு தோறும் வெளிவரும்.

**- ஆசிரியர் -**

## வாடகைக்கு

யாழ்ப்பாணம்/காங்கேசன்துறை வீதி, இல.629 இல அமைந்துள்ள 1600 சதுர அடி கொண்ட விசாலமான மேல்மாடிக் கட்டடம் வாடகைக்கு உள்ளது.

தொடர்பு:

**கு.முருகவேள்,**
இல.629, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(34994)(34)



## MEDICINE IN RUSSIA

**SMOLENSK STATE MEDICAL ACADEMY**
**Internationally Recognized, Including**
*Sri lanka Medical Council and W.H.O.*
**DOCTOR OF MEDICINE (MD) IN ENGLISH**

குறைந்த கட்டணத்தில்
கற்பதற்கு அரிய சந்தர்ப்பம்

2004/2005 கல்வியாண்டு
September இல் ஆரம்பம்.
Admission மற்றும்
மேலதிக தகவல்களை சிரேஷ்ட
மருத்துவ மாணவர் மூலம்
நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.


**T.SAYANTHAN**
T.P.: 0777-316273

XB 2/2/4, Edmandon Road,
Kirulapona,
Colombo - 05

672, K.K.S. Road,
Jaffna.
021-222-2536.

(34946) (26-21-19-17)


## முதலாம் ஆண்டு ஞாபகார்த்தம்



### D.M.சோமசுந்தரம்

*(முன்னாள் ஆசிரியர், பரி.யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

**"என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்"** சங்:86:12

அமரர் டட்டன் சோமசுந்தரம் அவர்களின் முதலாம்வருட ஞாபகார்த்த ஜெபக்கூட்டம் அன்னாரது இல்லத்தில் நாளை (09.08.2004) அன்று பி.ப. 4.00 மணிக்கு நடைபெறும்.

உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

67, கச்சேரி - நல்லூர் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(34997)(34-21-19-17)

## நல்லொழுக்கமும்...

(07 பக்கத் தொடர்ச்சி)

மொழிக் கல்விக்கு அதிமுக்கியத்துவம் காட்டப்படவில்லை. தமிழ்மொழி மீதான ஆர்வமும் தமிழ் இலக்கணம் கற்றுப் பண்டிதர் பரீட்சையில் தேர்வானமையும் இயற்கையாகவே என்னிடம் காணப்பட்ட இசை ஆர்வமும், ஆண்டவன அளித்த குரல் வளமும் இத்துறையில் எனது ஈடுபாடு அதிகரித்தமைக்கான காரணமாக இருக்கக்கூடும்.

*கேள்வி:* அந்தவகையில், இலக்கியத்துறையிலும் சரி, ஆத்மீகத் துறையிலும் சரி, தங்களுடன் சமகாலத்தில் ஈடுபட்டு, தங்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டவர்கள் குறித்துக் கூறமுடியுமா?

*பதில்:* இலக்கண, இலக்கிய விடயங்கள், இசைத்துறை குறித்த கருத்துப் பரிமாறல்கள் என்பவற்றில் சொக்கன், மறைந்த வீரமணி ஐயர், சோ.ப. என அழைக்கப்படும் சோ.பத்மநாதன் மற்றும் சிவராசசிங்கம் என்பவர்களைக் குறிப்பிடமுடியும்.

ஆன்மீகம் தொடர்பாக எவருக்கும் எவர் தரத்தில் குறைந்தவரென்றோ, கூடியவரென்றோ எண்ணும், கருதும் மனநிலையில் இயங்குவது தவறு. நாமெல்லோரும் தொண்டருக்குத் தொண்டர் என்ற சிநேகித பாவத்திலும் "அவனன்றி அணுவும் அசையாது" என்ற நம்பிக்கையுடனும் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற தெளிந்த சிந்தனையுடன் இயங்குவதே சாலச் சிறப்பு. அதுவே எனது விருப்பமும் கருத்தும் ஆகும்.

*கேள்வி:* இந்தவகையில் ஆத்மீகத்துறை முன்னேற்றம் நோக்கிய தங்களது அண்மைக் காலப் பணியென எதனைக் கருதுகிறீர்கள்?

கடந்த 40ஆண்டு காலமாக நல்லூரான் தரிசனம் செய்துவரும் நான், 1990ஆம் ஆண்டு முதல் நல்லூர் பழனியாண்டர் கோயில் மண்டபத்தில் கந்தஷஷ்டி உற்சவ காலங்களில் திருச்செந்தூர் புராணப் படிப்பையும் பயன்கூறும பணியையும் மேற்கொண்டு வருகிறேன் இடையில் ஓராண்டு காலம் இப்பணி இடம்பெறாதபோதிலும், முருகபக்தர்கள் பலர் கூடி மேற்கொள்ளும் இப்பணி பல அடியார்களின் ஆத்ம, ஆத்மீக சிந்தனைகளில் தெளிவையும் மனதில் அமைதியையும் உருவாக்குகின்றது.

*கேள்வி:* இந்த வயதிலும் நீங்கள் சுறுசுறுபபாகவும் ஆரோக்கியமாகவும் உலாவ முடிவதற்கான அடிப்படைக் காரணத்தைக் கூறமுடியுமா?

*பதில்:* எல்லாம் ஆண்டவன் செயல். சீரிய ஒழுக்கம் மட்டுமன்றித் தெளிந்த, நற்சிந்தனையும் நமது உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமன்றி மன ஆரோக்கியத்துக்கும் காரணமாய் அமைகின்றன என்பதை நான் திடமாக நம்புகிறேன். எந்தவேளையும் இறைசிந்தனையும் நம் கையில் எதுவுமில்லை; "எல்லாம் அவன் செயல்" என்ற நம்பிக்கையும்கொண்டு இயங்கினால் நாம் நீண்டகாலம் உடல் மன ஆரோககியத்துடன் வாழமுடியுமென இச்சிறியேன் நம்புகிறேன். ★


## வீடு வாடகைக்கு உண்டு

நெல்லியடியில் சந்தியில் இருந்து 300 அடி தூரத்திலும் யாழ். பிரதான வீதியில் இருந்து 100 அடி தூரத்திலும் சகல வசதிகளும் உடைய வீட்டின் ஒரு பகுதி 800 ச.அடியும் வாகனத் தரிப்பிடத்துக்கு 1600 ச.அடி நிலமும் கொண்ட இருவழி வாசல் கொண்ட வீடு உண்டு.

அலுவலகங்கள், கணனி வகுப்புகள், கைத்தொழில் சம்பந்தமானவைக்கு கொடுக்கப்படும்.

(சி36442)(34) தொடர்பு: 226-3243



## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
## Gas Cylinder

அரிய சந்தர்ப்பம் முந்துங்கள் சொற்ப சிலிண்டர்களே கையிருப்பில் இருக்கின்றன. ஒரு சிலிண்டரின் விலை ரூபா 1800/= மட்டுமே. இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். அத்துடன், வாடிக்கையாளர்களின் நலன்கருதி 24 மணிநேர சேவை வழங்கப்படும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

Tel:4590008
Tel:021-222-5595
Tel:021-222-2829
Fax: 021-222-5595

(34983)(34-21-19)



## MATHS CENTER
**M.M.V. Road, Nelliady.**

மூன்றாம் தவணைக்குரிய வகுப்புகள்
Gr.4 - Gr.11 வரை
ஆரம்பம்: 06.08.2004 வெள்ளி
p.m. 3.30 (ப.நே.)

(சி-36441) (34-21-19-17)


## இதய அஞ்சலி



அமரர் **சண்முகம் விஜயரட்ணம்**

*நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு* (குறள் 783)

• இதயம் என்றும் மறக்கமுடியாத பண்பாளரே, அன்பரே, குடும்பத்தின் சகோதரரே!

உங்கள் ஆத்மாவின் சாந்திக்காக சாயி பகவானை வேண்டுகிறோம்.

நல்லூர்.

நந்தி - சாந்தி
குடும்பத்தினர்.

(35002)(34-21-19-17)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் விஜயரட்ணம்



**(ஓய்வுபெற்ற, கமநலசேவைத் திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தரும் யாழ்.சத்தியசாயி சேவா நிலைய முன்னாள் தலைவரும், வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலைய இணைப்புக் குழுவின் முன்னாள் தலைவரும், இவற்றுக்கான தற்போதைய ஆலோசகரும், யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதி, பாணண்குளம், நாச்சி அம்மன் கோயில் பரிபாலன சபைத் தலைவரும் பரமேஸ் கல்லூரி இயக்குநர் சபையின் முன்னாள் நிர்வாகச் செயலாளரும்)**

நல்லூர், குறுக்குத்தெரு 82ஆம் இலக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் விஜயரட்ணம் அவர்கள் (04.08.2004) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - பெண் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அருமைப்புதல்வரும், காலஞ்சென்ற விஜயரட்ணம் கந்தையா - நல்லம்மாவின் ஆசை மருமகனும் காந்திமதி (பெரியக்கா)வின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான ச.வேலாயுதபிள்ளை (மலேசியா), பொ.விஜயலக்சுமி, ம.விஜயாம்பாள் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான க.பொன்னுத்துரை, மகாதேவன் சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் பொ.கனகதுரை (கணக்காளர், லண்டன்), இ.மகாலக்சுமி (அமெரிக்கா), சோ.இவிந்திரன் (கனடா), த.விஜித்தா ஆகியோரின் தாய் மாமனாரும், ந.சற்குணவதி (கனடா), ம.கனகாம்பிகை, இ.சியாமளா (லண்டன்), பு.சந்திரவதனி (கனடா), க.சிவபாதநாதன் (விஜயா, கனடா) ஆகியோரின் மைத்துனரும், க.நவரத்தினம் (முன்னாள் C.T.B. பொறியியலாளர், கனடா), T.S.மகேந்திரன் (உரிமையாளர், பெனிகூலா, குறுப்) க.திருச்செந்தூர்நாதன் (கணக்காளர், லண்டன்), கு.புனிதவேல் (பொறியியலாளர் - கனடா), த.சுகுமார் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), சி.யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகலனும் Dr.இ.இராசநாயகம் (அமெரிக்கா) ர.ஜெயகலா (கனடா), பா.தவபாலன் (சட்டத்தரணி, .ஜே.பி.யு.எம்.) ஆகியோரின் மாமனாரும், இ.லஷ்மி (அமெரிக்கா), க.சிவகணன் (லண்டன்), க.அபிராமி (லண்டன்), க.அருண் (லண்டன்), த.ரஜீவ் (லண்டன்), த.காண்டீபன் (லண்டன்), த.சாஜிசஞ்சீவ், த.தவலக்சுமி ர.ரக்சனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ந.சுகந்தன் (அமெரிக்கா), இ.சுரேக்கா (கனடா), Dr.யோ.ரதிப்பிரியா (அமெரிக்கா), ம.கஜேந்திரன் (கனடா), தி.கேதீஸ் (லண்டன்), தி.குமரேஸ் (லண்டன்), பி.கௌரி (கனடா), பு.செந்தூரன் (கனடா), சு.விக்னேஸ் (ஆஸ்திரேலியா), சு.முருகேஷ் (ஆஸ்திரே லியா) ஆகியோரின் பெரியப்பாவும், சி.சிவலக்சுமி (கனடா), சி.கார்திகா (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.82, நல்லூர் குறுக்கு வீதி, இல்லத்தில் இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் காலை 10 மணியளவில் செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*இல. 82, நல்லூர் குறுக்குத் தெரு,*
*நல்லூர். T.P.: 222-6529* (சி-34462)

தகவல்:
**வீ.காந்திமதி (அன்பு மனைவி).**

## பிறான்சிஸ் சேவியர்

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இல.100, 4ஆம் குறுககுத்தெருவில் வசித்தவரும் தற்பொழுது கனடாவில் வசித்துவந்தவருமான பிறான்சிஸ் சேவியர் கனடாவில் (03.08.2004) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (விதானையார் சுருவில், ஊர்காவற்றுறை) தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜோஜ் அலோசியஸ் தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி ஜடாவின் அன்புக் கணவரும் பசில் துரைராஜா, கிறிஸ்ரி ஜெயரட்ணம், பெனி ஸ்ரனிஸ்லோஸ், நீற்றா கொன்ஸ்ரன், றஞ்சினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் வினோதினி, போஜி, கமிலஸ் அலோசியஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் யூடி, ஜொகான், சூசன், ஸ்ரெலா, பியங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அருட்சகோதரிகள் அம்புறோஸ், அடலெய்ட் (திருக்குடும்ப கன்னியர்), மேரி லூட்ஸ் சவிரிமுத்து, S.A.சிங்கராயர், S.A.ஜோசப், S.A.ஜோன் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கனடாவில் (07.08.2004) சனிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மருமகள்: **செல்வி திரேசா சவரிமுத்து.**

(34995)(34-21-19-17)




# சமாதான விடயத்தில் சகலரும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்

## சு.கூட்டமைப்பின் புதிய தலைவர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.8

சமாதான விடயத்தில் சகல தரப்பினரும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய காலம் வந்து விட்டது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளிடையே ஒரு சில முரண்பாடுகள தோன்றியபோதும், அந்த நிலை தற்போது சுமுகமாகத் தீர்க்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் மிகவும் காத்திரமாகப் பங்காற்றி வருகின்றனர்.

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நோர்வே ஊடாக வெகுவிரைவில் அமைதிப்பேச்சை ஆரம பிக்கமுடியும் என்ற நம்பிக்கையுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்குத் தங்களது சமிக்ஞையை வெளிப்படுத்த வேண்டும் - என்றார் அவர். (ஓ-7)

## 2 சட்ட மூலங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றில் விசாரணை

இரண்டு அவசர சட்ட மூலங்கள் தொடர்பான விசாரணைகளைப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் நடத்தியது. தேர்தலின்போது வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் சட்டமூலம் மற்றும் நிதித் திருத்தச் சட்டமூலம் ஆகியனவே நேற்று விசாரிக கப்பட்டன.

இவற்றை அவசர சட்டமூலமாகக் கருதி விசாரிக்கும்படி அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய ஜனாதிபதி கேட்டுக் கொண்டதையடுத்தே உயர் நீதிமன்றம் அவற்றை நேற்றுமுன்தினம் விசாரித்தது. இச்சட்ட மூலங்கள் அரசமைப்புக்கு முரணானவையா? அவற்றை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றில் நிறை வேற்றலாமா? அல்லது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியமா? அல்லது மேலதிகமாகச் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்படவேண்டுமா?- என்பது குறித்தெல்லாம் உயர்நீதிமன்றம் முடிவு செய்யும். தனது தீர்மானத்தைச் சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் அது விரைவில் அனுப்பி வைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (க-8)

## யாழ். பல்கலைக்கழகத்தில்

# குடித்தொகை அபிவிருத்திக் கற்கைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறிக்கான பட்டப்பின் டிபளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து புவியியல், திட்டமிடல், பொருளியல், சமூகவியல், மானிடவியல், உளவியல், அரசியல் விஞ்ஞானம், கணிதம், புள்ளிவிவரவியல், சமூக சுகாதாரம் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றினைப் பாடமாகப் பயின்று பட்டம் பெற்றவர்களிடமிருந்தும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில், குறிப்பாக குடிக்கணிப்புத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், சமூகநலத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், திட்டமிடல் பிரிவுகளில் குறைந்த பட்சம் 5 வருட அனுபவம் கொண்ட நிர்வாகதரத்திலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில் இக்கற்கைநெறியானது இலங்கையிலும் சர்வதேசங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இக்கற்கைநெறியினைக் கற்பதன் மூலம் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான மேலதிக தகைமைகளை பெற்றுக்கொள்வதுடன், தொழிலில் உள்ளோர் உயர்பதவிகளைப் பெற்றுக கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் எனப் பட்டப்பின் படிப்புகள் பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சபா.ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

இக்கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவங்களைப் பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும். (8)

# இனந்தெரியாத தொற்றுநோய் பரவுகிறது: குருநாகல், அ'புரவில் கால்நடைகள் சாவு!

## வெளிமாவட்டங்களுக்கு மாடுகளைக் கொண்டு செல்லத்தடை

குருநாகல், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து கால்நடைகளை வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் உள்ள கால்நடைகளுக்கு - குறிப்பாக மாடுகளுக்கு - ஒருவகைத் தொற்றுநோய் பீடித்துள்ளது. இது வேறு மாவட்டங்களுக்குப் பரவாமல் தடுக்கும் முன்நடவடிக்கையாகவே இத்தடை நடைமுறைப்படுத்தப்படுகிறது என மிருகச் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் ஏ.அமரசேகர தெரிவித்தார்.

இத்தொற்றுக்குள்ளான மாடுகளின் வாயில் இருந்து உமிழ்நீர் வடிவதோடு, கட்டிகளும் வாயில் ஏற்படுகின்றன. இறுதியாக அவை செத்து மடிகின்றன.

குருநாகல், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வரட்சி தற்போது நிலவுவதாலும் தொற்றின் பரவல் வேகமாக உள்ளது என அமரசேகர மேலும் தெரிவித்தார்.

இந்த நோயின் இயல்பு, தன்மை போன்றவற்றைத் தெரிந்துகொள்ள இந்திய நிபுணர்களின் உதவி நாடப்பட்டுள்ளது எனக் கால்நடை அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த இருமாவட்டங்களில் இருந்தும் மாடுகளைக் கொண்டு செல்வபவர்கள்மீது கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இது சம்பந்தமாக விசேட வர்த்தமானி அறிவித்தலையும் அரசு வெளியிட்டுள்ளது. (க-8)

# சிகிச்சையின்றி டாக்டர் உயிரிழந்த சம்பவம்: 10 கோடி நஷ்டஈடு கோருகிறார் மனைவி

கொழும்பு,ஓக.8

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சையளிக்காமை காரணமாக உயிரிழந்த தனது கணவரின் மரணத்திற்கு 10 கோடி ரூபாவை நஷ்டஈடாகப் பெற்றுத்தருமாறு கோரி உயிரிழந்தவரின் மனைவி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு இழப்பீட்டு மனு ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 6ஆம்திகதி விபத்தொன்றில் சிக்கி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர் டாக்டர் ஏ.என். பொன்ராஜா மருத்துவமனையில் உயிரிழந்தார்.

அந்த இழப்பீட்டு மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பதுளை வைத்தியசாலையில் காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவ நிபுணராகக் கடமையாற்றும் எனது கணவரான அந்தோனி பொன்ராஜா கடந்த மாதம் 6ஆம் திகதி வத்தளையில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் சிக்கிக் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இதனால், இரண்டு மணிநேரம் கடந்தும் அவருக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதனால், அவர் உயிரிழந்தார். எனது கணவருக்கு உரியநேரத்தில் சிகிச்சை அளிக்கப்படாமையே அவர் உயிரிழக்கக் காரணம் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதனை சுகாதார சேவை அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மேற்படி வைத்தியசாலை சுகாதார சேவைகள பணிப்பாளரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்குவதனால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதற்குரிய பதிலை வழங்கவேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - 14 தினங்களுக்குள் தமது கட்சிக்காரருக்கு இழப்பீடு பெற்றுக்கொடுக்காவிடின் இதுதொடர்பாக சட்ட நடிவக்கை எடுக்க வேண்டிவரும் என அவரது சட்டத்தரணி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளார். (எ-6)

# என்றும் தமிழரோடு நல்லுறவைப் பேணிவந்தவர் கே.பி.ரத்நாயக்க

## நாடாளுமன்றில் ரணில் புகழஞ்சலி

கொழும்பு,ஓக.8

இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டை ஏற்படுத்தி ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டவர் மறைந்த சபாநாயர் ஜே.பி.ரத்நாயக்க.

முன்னாள் சபாநாயகர் ஜே.பி.ரத்நாயக்கவின் மறைவு குறித்து நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அனுதாபப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இப்பிரேரணையின் மீது இரங்கல் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் கல்விகற்ற அவர் தமிழர்களுடன் நல்லுறவைப்பேணி வந்தார். தனிப்பட்ட நபர்களின் கருத்துக்களுக்கும் அவர் முக்கியத்துவம் அளித்தார். 1960 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் ஒரு லிகிதராகக் கடமையாற்றிய அவர், பின்னர் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் என்ற நிலைக்கு உயர்ந்தார்.

1971 ஆம் ஆண்டுமுதல் அவரை எனக்கு நன்றாகத் தெரியும். நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த அவர், நாடாளுமன்ற மரபுகளைப் பேணிப் பாதுகாத்து வந்தார்.

இந்த நாடாளுமன்றம் மக்களின் சபை என்பதை அடிக்கடி கூறுவார். அதனை முன்னிறுத்தி நடந்துகொண்டார்.

தான் சார்ந்த மக்களை என்றுமே அவர் கைவிடவில்லை. அவர் பிறந்தஇடமான அனுராதபுரத்து மக்களின் நன்மைகளுக்காக அவர் கடுமையாக உழைத்தார்.

சிறுபான்மையினரோடும் அதிகமான உறவுகளை அவர் பேணினார்.

ஐக்கியம் மூலமாகவே எதையும் சாதிக்க முடியும் என்பதில் உறுதியுடன் இறுதிவரை வாழ்ந்தவர் - என்றார் எதிர்க்கட்சித் தலைவர். (க-8)

# உடலின் சமநிலையைக் கெடுக்கும் மாமிச உணவு வகைகள்...

அநாதி காலம் தொட்டே பாசம் என்ற கவர்ச்சிப் பொருளால் பசு என்ற ஆன்மா கட்டுண்டு கிடக்கிறது. அந்தப் பாசத்திலிருந்து பசுவை நீக்கவே இறைவன் உலகைப் படைக்கிறான். இதுவேபடைப்பின் நோக்கமாகும். இந்த உடல் இயங்க உயிர் அவசியம். உடலில் உயிர் இருககும் வரை உடலின் இயக்கம் நிகழும். இல்லையெனில் உடல் அழியத் தொடங்கும். இந்த உடலின் இயக்கம் குறிப்பிட்ட அளவு உடலில மாறாமல் இருக்கும் வெப்பநிலையைப் பொறுதது. இந்த உடலுக்கு அவ்வப்போது தகுந்த உஷ்ணத்தைத் தரக்கூடியவை நாம் உண்ணும உணவு வகைகளே ஆகும். சூரிய சக்தி சேமிக்கப்பட்ட தாவரங்கள் அளவான உஷ்ணத்தையும், உடல் இயங்கும் சக்தியையும் அளிக்கின்றன. உடலுக்குக் குளிர்ச்சியை உண்டு பண்ணும பொருள்களைத் தொடர்ந்து உண்ணும் போதும் உடலின் இயல்பான உஷ்ணநிலை குறைந்து உடலை நோய்க்கு ஆளாக்குகின்றது. குறிப்பாக இளநீர், எலுமிச்சம்பழம், பழைய தயிர், திராட்சை, வெண்டிக்காய் முதலிய உணவுகள் உடலின் உஷ்ணநிலையை குறைப்பதனால் குளிர் காய்ச்சல், சளி, உடல் சில்லிடுதல் போன்றவை ஏற்படலாம். இதேபோல் சுவைக்காக உப்பு, புளி, காரம் இவை மிகுதியாகச் சேர்க்கப்பட்டுத தயாரிக்கப்படும் மாமிச உணவு வகைகள் உடலுக்கு அதிக அளவு உஷ்ணத்தைத் தந்து உடலின் சமநிலையைக் கெடுத்து நோய்க்கு ஆளாக்குகின்றன.

உணவுக்காக ஆடு, மாடு, கோழி மற்றும் மிருகங்களைக் கொல்லும்போது அம்மிருகங்களின் உடலில் பரவும் ஒருவகைப் பயத்தின் காரணமாக விஷப்பொருள் ஒன்று அதன் தசைகளில பரவுகிறது. இரண்டாவதாக மிருகங்களை வெட்டி நீண்டநேரம் வைத்திருக்கையில் மாமிசத்திலுள்ள நீர்ச்சத்து உலர்ந்து விடுகிறது. மூன்றாவதாக இந்தப் பொருள்களைச் சமைப்பதற்குப் பயன்படுத்தும் உப்பு, புளி, காரம், மசாலா வகைகள் இவை அனைத்தும் மாமிசப் பொருள்களோடு சேர்த்து வேகவைக்கும்போது மாமிசப் பொருள்கள் சமிபாட்டு நொதியங்களையும் (Digestive Enzyemes), சடைமுளைகளையும் (Filaments), குடலுறிஞ்சிகளையும் (Villi) பாதிக்கின்றன.

மாமிசப் பொருள்களை சடைமுளைகள், குடலுறிஞ்சிகள் உறிஞ்சும்போது கரையாத கொழுப்புப் பொருள்களும் உறிஞ்சப்பட்டு இரதத்துடன் சேர்ந்து விடுகின்றன. இத்தகைய பொருள்கள் இரத்த நாளங்களில் அடைப்பை ஏற்படுத்துவதுடன், இரத்தக் குழாய்களில் ஆங்காங்கே தேங்கி விடுகிறன. சிறுநீரகங்கள் இரத்தத்தை சுத்திசெய்யும்போது அதிகளவில் சேரும் மாமிசக் கொழுப்பு வகைகள் கரையாத கொழுப்புப் படிவங்களாக மாறிக் கற்களை உண்டாக்கும். இரத்தத்தில் யூரிக்கமிலம் என்னும் உப்புப் பொருளை அதிகரிக்கிறது. மாமிச உணவு வகைகளைச் செரிக்க வைப்பதில் ஈடுபடும் கல்லீரல் (liver) மிகுதியான வேலைத் திறன் காரணமாக நாளடைவில் பழுதடைகிறது.

பெருங்குடலில் (Large Intestine) மாமிச உணவானது சிறிதும் செரிக்கப்படாமல் மிகுதியான புளிப்புத் தன்மையையும் அழுகல் தன்மையையும் அடைந்து அதன் காரணமாக அசுத்த வாயுக்களை உண்டாக்கி உடல் உறுப்புக்களில் உள்ள இரத்தத்துடன் சேர்ந்து விடுகிறது. மேலும் ஜீரண மண்டலம் முழுவதும புளிப்புத் தன்மையை உண்டாக்குகிறது. மாமிச உணவு உண்பவர்களுக்குக் குடல்வால் அழற்சி நோய் (Appendicitis) ஏற்படும். மாமிச உணவில் நீர்ச்சத்தும் நார்ச்சத்தும் இல்லாத காரணத்தால் குடலில் நகரும் தன்மை (Peristaltic Movement) குறைவதன் காரணமாக உணவுப்பொருள்கள் ஆங்காங்கே தேங்குவதன் மூலம் கடைசியாக மலச்சிக்கல், குடல் புச்சிகள், ஆசனவாயில் பூச்சித் தொந்தரவு தொடர்ச்சியான மலச்சிக்கல் காரணமாக மூலநோயும் (Haemorrhoids) உண்டாகின்றன. மாமிச உணவுக்காகக் கொல்லப்படும் உயிரிணங்களின உடலில் நோய் ஏதாவது இருப்பின் அந்த மாமிச உணவை உண்ணும் மனிதர்களுக்கும் அந்த நோயின் காரணமாக உடலில் பல தொந்தரவுகள் உண்டாகும். மாமிச உணவுகளை அதிகளவில் உண்போருக்கு இரத்தத்தில் கொலஸ்ரோல், இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, புற்றுநோய் முதலிய வியாதிகள் அதிகம் வருகின்றன.

மாமிசத்திலிருந்து கிடைக்கும் புரதங்களைக காட்டிலும் தாவரங்களில் இருந்து கிடைக்கும் புரதங்கள் உடலுக்கு மிகுந்த நன்மை பயக்கின்றன. மாமிச உணவு சாப்பிடும்போது உடலுககுக் கிளர்ச்சியையும் மனதிற்கு அமைதியின்மையையும் ஏற்படுத்துகின்றது. எந்தவகை மாமிசத்தாலும் புதிய இரத்தமோ, இரத்த செல்களோ உற்பத்தியாவதில்லை. தொடர்ந்து மாமிச உணவு சாப்பிடுபவர்களுக்கு நரம்பு மண்டலம் பாதிப்படைகிறது என அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இவை பித்த உப்புக்கள் மட்டுமே கரையும் தன்மை உடையவை. மாமிச உணவினால் உடலில் கொழுப்புச்சத்து மட்டுமே சேருகிறது. இவ்வாறு சேரும் கொழுப்புச்சத்துககள் உடலின் இரத்தக் குழாய்களை இறுக்கமடையச் செய்தல் மற்றும் உடலின் இயற்கை கட்டமைப்பையே மாற்றிவிடுகின்றன.

நி.தர்ஷனோதயன்
சித்த மருத்துவ மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்

பழக்கப்பட்டவைகளைக் கைவிடுவது என்பது எம்மில் பலருக்குக் கடினமாகவே இருக்கும். மாமிச உணவுகளை நீக்கினால் பல வியாதிகளில் இருந்து தப்பலாம் என்பது என்னால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் கிடைத்த உண்மை. உயிர்வதை எம்மைப் பெரும் பாவதிற்கு உள்ளாக்குகிறது என்று அநேக மதங்கள் வலியுறுத்தி நிற்கின்றன. இலை உணவுகளை (மூலிகை உணவுகள்) உட்கொண்டு ஆரோக்கியமான புதிய சந்ததியை உருவாக்க நாம் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுவோமாக. ★

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள மவுக்கினி சோக்கேஸ் மூன்றும், முதிரை சோக்கேஸ் ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தணிஸ் ரெக்ஸ், நவாலி வீதி, மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (34899)

இரண்டு மாதங்கள் நிரம்பிய தூய இன டோமன் பிஞ்சர் ஜேர்மன் லிப்பேட் குறொஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.6, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை பின் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு. நேரம் மாலை 5.00 மணி முதல 6.00 மணி வரை (புதிய நேரம்). (34827)

பெண் உத்தியோகத்தர் ஒருவரின் தனிப் பாவனையுள்ள சிவப்புநிற சாளி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (பழைய லான்சர் இனம்) NPGH இலக்கமுடையது. தொடர்பு: T.P. 222 6286. (34996)

மிகவும் நல்ல நிலையில் உள்ள Hero Honda passion Motor Cycle விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மணியகாரன் வளவு, மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (34977)

## கார் விற்பனைக்கு

13 சிறி 9XXX தொடர் இலக்கமுடைய மிற்சுபிசி லான்சர் கார் விற்பனைக்குண்டு. வெள்ளைநிறம், 5Gier Outo Shoter Full A/C தொடர்பு: 021 222 5680, இல.200, பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம். (34952)

## கோழி எரு விற்பனைக்கு

கோழி எரு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (35011)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

அழகான Great Dane ஆண் நாய்க்குட்டி உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (35012)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொண்வென்ற் வீதியில் 16 பரப்பு 4.125 குழியையும் (V.C) உடைய காணி முழுமையாக விற்பனைக்குண்டு. 150 வருட பழைமையான உறுதியையும் கொண்டது. பகுதியாக விற்பனை செய்யப்படமாட்டாது. தொடர்பு: T.P.: 0112-586350, 0777 301043 (34878)

## வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு, சில்லாலை, Dr.பாக்கியநாதன் MC வீட்டுக்கு முன் 4½ பரப்புக் காணியுடன் கூடிய புதியவீடு (முற்றுப்பெறாத) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 226-3494, மு.செல்வராசா, தும்பளை, பருத்தித்துறை அல்லது யோய்ஸ்பாமஸி, பண்டத்தரிப்பு. (34862)

யாழ்.நகருக்கு உட்பட்ட பகுதியில் OLR சேச் அருகில் 3½ பரப்பளவு கொண்ட வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தரகர் இன்றி தொடர்புகொள்ளவும். தொடர்பு: 680, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 7193, 0776192347. (35003)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1 Kg 180/= விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்தல் இலவசம். I-New R.S.K. Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில. II- New R.S.K. Farm, மானிப்பாய் றோட், மதவடி, உடுவில். (34962)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler (ரூபா40/=), பேட்டுக் குஞ்சுகள் (ரூபா 60/=), 16.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டிப் பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் முருகன், சாவகச்சேரியிலும், சூட்டி பாம், வட்டுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34916)

Prima இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் புறொயிலர் குஞ்சுகளும் 09.08.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867 தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை. ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. றஞ்சித், 517, ஸ்ரான்லி வீதி. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (35008)

## வீடு தேவை

இளைப்பாறிய அரச அதிகாரி குடும்பத்திற்கு மூன்று அல்லது நான்கு அறைகளுடன் வீடு இவ்வருட இறுதிக்குள் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. காங்கேசன்துறை வீதி, பலாலி வீதிகளை அண்மித்த பகுதிகள் விரும்பதக்கவை. தொடர்பு:தி.சணமுகநாதன், மே/பா, இ.சிவராசா 606/1, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (34373)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அமெரிக்காவில் பொறியியலாளராகத் தொழில் புரியும், 44 வயது, 8இல் செவ்வாய், கேட்டை நட்சத்திரம், சகல வசதிகளுடன் வாழும மணமகனுக்கு (தற்போது இலங்கைக்கு விடுமுறையில் வந்துள்ளார்) 35 வயதுக்குட்பட்ட, குறைந்த பட்சம் A/L படித்த, அழகிய மணமகள் தேவை. புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2342, மே/பா உதயன். (35017)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972இல், உத்தராடம், பாவம் குறைந்த தொழில் நுட்பத் தகைமைகளுடன் கூடிய, ஐந்து ஆண்டுகளாக Londonஇல் வேலை செய்யும் மணமகனுக்கு ஐரோப்பிய நாட்டில் PR உள்ள பொருத்தமான மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். (London, Canada விரும்பத்தக்கது) தொடர்பு: மே/பா உதயன், விளம்பர இல. 2341. (34953)

## திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவ சமூகத்திலுள்ள, மணமக்களை வரவேற்கின்றோம் எமது சேவை உலகெங்கும் தொடர்கிறது. பெற்றோர்களே! தங்கள் பிள்ளைகளுக்குத் தகுதியான எதிர்பார்ப்புகளுக்கேற்ப மணமக்கள தேவைக்கு 2 புகைப்படங்களுடன் தொடர்பு கொள்ளவும். S.K. சிவகரன், சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்தா ஆசசிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். T.P. 021-222-7844. (34917)

1970, அச்சுவினி, பாவம் கூடிய, 1இல் செவ்வாய், பட்டதாரி அரச உத்தியோக மணமகளுக்கு உத்தியோக மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும் தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (34913)

## வாடகைக்கு

கொழும்பு - 05, அப்பலோ வைத்தியசாலைக்கு அருகில், குளிரூட்டப்பட்ட அறைகளுடன் தங்குவதற்கு விருந்தினர் விடுதி உள்ளது. தொடர்பு: 0777 - 597225(சி-36468)

யாழ்.வைத்தீஸ்வராச் சந்தியிலுள்ள வீட்டில் அறைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: திருமதி பிறைசூடி. T.P. 077 6155800. யாழ். சிவன் கோயிலடியில் கடை ஒன்று கிட்டங்கி வாடகைக்குண்டு. T.P 026 - 222 4922.(34970)

இலக்கம் 168, K.K.S. வீதியில், சரஸ்வதி ஹோட்டலுக்கு முன்பாக உள்ள கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: கி.புவனேஸ்வரி, 8/1, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். T.P. 0777 238579 (35005)

## தேவை

க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர் ஒருவருக்கு யாழ்.நகரை அண்டிய பகுதியில், அமைதியான சூழலில் அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள.இல. 2323, மே/பா உதயன். (35001)

## தவறிவிட்டது

உரும்பிராயைச் சேர்ந்த கு.இராசநாயகம் என்பவரது மோட்டார் வாகன ஆவணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பன யாழ்.சிவகுரு மெடிக்கல் கிளினிக்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரும்பிராய் சிவசக்தி கொமினிக்கேசனில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (35000)

பொன்னம்பலம் செல்லையா என்பவரது காணி உறுதி மற்றும் முக்கிய ஆவணங்கள் 28-06-2004 அன்று அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருமதி ஐயாத்துரை இராசலட்சுமி, 'உதயபவனம்' நவக்கிரி, புத்தூர் மேற்கு என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P. 077 6146432 தகுந்த சன்மானம் வழங்கப்படும். (34971)


### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.:021-4590907. (34771)

### பதவி வெற்றிடம்
### Manager & Accountant

மேற்படி பதவிக்கு நம்பிக்கையான கொக்குவிலை அண்டிய பகுதிகளில் வதியும், 45 வயதிற்கு மேற்பட்ட அல்லது ஓய்வுபெற்ற ஒருவர் தேவை. ஆங்கில அறிவு, எலக்ரோனிக்ஸ் பொருள்களுடனான அனுபவம் விரும்பத்தக்கது. 08.08.2004 or 09.08.2004 காலை 10 மணிக்கும் மாலை 3 மணிக்கு மிடையில் நேரில்வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**Sats-Tech Engineer's**

M/S National Video Centre

No:182, K.K.S. Road (Near Kulapity church), Kokuvil

Phone: 021-222 [908, 0777 710785

(35009)(34)


## இதய அஞ்சலி



அமரர்

**சண்முகம் விஜயரட்ணம்**

*(இளைப்பாறிய சமநலசேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர்)*

நல்லூர் குறுக்கு வீதியில் வாழ்ந்து தமது பண்பாலும் அன்பாலும் எமது உள்ளங்களை எல்லாம் தம்வசமாக்கியவர் அமரர் **சண்முகம் விஜயரட்ணம்** கச்சேரி, நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவராகக் கடந்த இருபத்திநான்கு வருடங்கள் அளப்பெரும் தொண்டாற்றியவர். ஐயா அவர்களின் திடீர்மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பணமாக்கி அவரின் ஆத்மசாந்திக்கு அம்பாளின் பாதமலர்களைப் பணிந்து வணங்கி நிற்கின்றோம்.

கச்சேரி,
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (35004)(34)

**பாணன்குளம்**
**நாச்சி அம்மன் ஆலயம்,**
**பரிபாலன சபை.**

## கடன் தொல்லையால் இளம் தம்பதியினர் தற்கொலை!

கொழும்பு,ஓக.8

றாகமை, வல்பொல என்ற இடத்தைச் சேர்ந்த ஓர் இளம் தம்பதியினர் கடன் தொல்லை தாங்காமல் கடந்த புதன்கிழமை தற்கொலை செய்து கொண்டனர்.

ஜுட் சம்பத் (வயது 22), தனுஜா தில்ஹானி (வயது 18) என்ற இந்தத் தம்பதியினர் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வாங்குவதற்காக அயலவர் ஒருவரிடம் 12 ஆயிரம் ரூபா கடனாகப் பெற்றிருந்தனர். ஆனால், கடன் கொடுத்தவரோ பணத்தை உடனடியாகத் திருப்பித்தருமாறு அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தார்.

சம்பவ தினத்தன்று கொழும்பிலுள்ள நிறுவனம ஒன்றில் வேலை செய்யும் ஜுட் சம்பத், தனது இரவு வேலையை முடித்துவிட்டு காலையில் வீடு திரும்பிய போது தனது மனைவி தூக்கில தொங்குவதைக் கண்டார்.

இதனையடுத்து இவரும் அதேதினம் கடுகதி ரயில் ஒன்றின் முன்னால் பாய்து தற்கொலை செய்துகொண்டார்.

இவர்கள் இருவரினதும் சடலங்கள் றாகமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன என றாகமைப் பொலீஸார் தெரிவித்தனர். (க-8)

## கார்ச் சாரதி தேவை

உடன் சாரதி தேவை. நேரில் வரவும். தொடர்பு: 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (34980)

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 27 வயற்பரப்புக் கொண்ட தோம்பு உறுதிக் காணி விற்பனைக்கு உள்ளது.

**மேலதிக விவரங்களுக்கு:**
**மாலை 6.00-10.00 வரை**
**தொ.பே.0777-286009**

உடன் தொடர்புகொள்ளவும். (34980)

## மூலிகை வைத்தியராக ஓர் அரிய சந்தர்ப்பம்

செப்ரெம்பர் மாதம் தொடங்கவிருக்கும் பயிற்சிகளுக்கு O/L மாணவர்களிடமிருந்தும், A/L இற்குத் தோற்றிய இருபாலாரிடமிருந்தும் (வயதெல்லை 18-30) இயற்கை மூலிகை வைத்தியப் படிப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காலம் ஒரு வருடம். படிப்பு முடிந்தவுடன் அவரவர் இடங்களில் வைத்தியராகக் கடமையாற்றுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும். தூர இடங்களில் இருப்பவர்களுக்குத் தங்குமிடம், உணவு வசதிகளும் செய்துகொடுக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை 20/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இயற்கை மூலிகை வைத்திய ஸ்தாபனம்,
இலக்கம்:24. பிரப்பங்குளம் வீதி.
யாழ்ப்பாணம். (34998)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**ரோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

PACKED BY :
**ROYAL** Industries Colombo 12.
☎ :0112334603




ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா**
288. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

(C/36310) சத்திரத்துச் சந்திக்கு அருகில் →


## நாலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**அம்பலவாணர் குலசேகரம் J.P.**

*(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)*

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26-08-1937 | 24-07-2000 |

திதி: 08.08.2004

என்றும் உங்கள் நினைவுடன்...

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (34967)(34-19-21-17)

## முக்கிய அறிவித்தல்

Prima ஒருநாள் கோழிக்குஞ்சுகள். யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள் நல்லூர் பாம் சென்ரர் (நல்லூர் வீடியோ சென்ரர்) மட்டுமே.

போலியான பெட்டிகளில் வரும் Prima கோழிக்குஞ்சுகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

*குறிப்பு:*

**இரண்டு தடுப்பூசி போடப்பட்ட கோழிக்குஞ்சுகள் விலை**

**Broiler** ரூபா 40/=,

பேட்டுக்குஞ்சுகள் (சிவப்பு/வெள்ளை) ரூபா 60/=

**CEYLON GRAIN ELEVATORS LTD.**
15, Rock House Lane,
Colombo-15.

**Nallur Farm Centre,**
(Nallur Video Centre)
19, Murugesar Lane,Nallur.

(35013)(34-21-19-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 29 - 06 - 1947 |  | 22 - 07 - 2003 |

**அமரர் ஆனந்தம் சண்முகநாதன்**

*(குஞ்சு)*

திதி: அபரபட்ச அட்டமி (08.08.2004)

பாசத்துடன் பழகி நேசத்துடன் உலாவி
பண்போடு வாழ்ந்த அன்புத் தெய்வமே
இன்றோடு ஓராண்டு மறைந்து போய்விடினும்
உங்கள் நினைவு மட்டும் மறையவே மறையாது!

பத்திரகாளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

**மனைவி,**
**பிள்ளைகள்.**

(35014)(14-17-21)

# பின்லேடனைப் பிடிக்கும் பணியை பாகிஸ்தானிடம் ஒப்படைப்பதா?

## புஷ்ஷைக் கண்டிக்கிறார் முன்னாள் அதிபர் கிளின்ரன்

வான்கூவர்,ஓக.8

அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக விளங்கி வரும் சர்வதேச பயங்கரவாதி பின்லேடனை வேட்டையாடும் பணியை பாகிஸ்தானிடம் ஒப்படைத்துள்ளார் அமெரிக்க அதிபர் புஷ். இது கண்டனத்துக்குரியது என்று முன்னாள் அதிபர் பில் கிளின்ரன் தெரிவித்தார்.

தனது சுயசரிதை நூலான 'மை லைவ்' என்ற புத்தகத்தில் தமது கையெழுத்தை எழுதி வாசகர்களுக்கு அளித்திட கனடா சென்ற அவர், சி.பி.சி. தொலைக்காட்சிக்குப் பேட்டி அளித்தார். அப்பேட்டியில் அவர் கூறியதாவது:-

அமெரிக்காவைப் பாதுகாக்கும் பணிகளில் சிலவற்றைப் பாகிஸ்தானிடம் ஒப்படைத்திருக்கிறார் புஷ். அவற்றில் ஒன்றுதான் பின்லேடனைப் பாகிஸ்தான் வேட்டையாட அனுமதித்திருப்பதாகும். அமெரிக்காவுக்கு முக்கிய அச்சுறுத்தலாக விளங்குபவர் பின்லேடன்தான்.

இது தவிர, ஈராக் போருக்காக அமெரிக்காவின் இராணுவம் திருப்பிவிடப்படுகிறது. தற போதைய நிலையில் ஈராக் பிரச்சினை அமெரிக்காவுக்கு எதிரான 5ஆவது அச்சுறுத்தல் என்றே கருதலாம்.

மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி ஏற்பட நடவடிக்கை எடுக்காதது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான மோதல், தலிபானிடம் அவற்றுக்குள்ள நெருக்கம், வடகொரியா மற்றும் அதன் அணுஆயுதத் திட்டங்கள் ஆகியன ஈராக்கைவிட அமெரிக்காவுக்கு அதிக அச்சுறுத்தலாக விளங்குபவை.

ஈராக் மீது அவசரப்பட்டு புஷ் போரைத் தொடங்கினார். அமெரிக்காவுக்கு முதல் தர அச்சுறுத்தலாக விளங்கும் அல்கெய்டா மற்றும் ஒஸாமா பின்லேடன் மீது கவனம் செலுத்தாமல் அதிலிருந்து விலகி ஈராக் மீது போர் தொடுத்தார். இது ஆட்சேபத்துக்குரியதாகும். புஷ் நடவடிக்கை புத்திசாலித்தனமானதா என்ற கேள்வி எழும்புகிறது - என்றார் கிளின்ரன். (8)

## அமெரிக்க முஸ்லிம்கள் அதிபர் புஷ்ஷுக்கு எதிர்ப்பு

வாஷிங்ரன்,ஓக.8

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடும் புஷ்ஷை தோற்கடிக்க வேண்டும் என்று அமெரிக்க முஸ்லிம்கள் தீர்மானித்து உள்ளனர்.

அமெரிக்காவில் 70 லட்சம் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். அவர்களில் 30 லட்சம் பேர் வாக்குப்போடத் தகுதிபெற்றவர்கள்.

அமெரிக்காவில் உள்ள 'அரபு அமெரிக்கன்' நடத்திய கருத்துக்கணிப்பில் 51சதவீத முஸ்லிம்கள் கூறுகையில், புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடும் ஜோன் ஹெரிக்கு வாக்குப் போடப் போவதாகக் கூறியுள்ளனர். 24 சதவீத முஸ்லிம்கள் புஷ்ஷுக்கும் 17சதவீத முஸ்லிம்கள் சுயேச்சை வேட்பாளர் ரால்ப் காடருக்கும் வாக்குப் போடப்போவதாகக் கூறினார்கள்.(8)

## ஈராக், ஆப்கான் இரா்ணுவ நடவடிக்கைகளுக்கு 25 பில்லியன் டொலரை ஒதுக்கியது அமெரிக்கா

வாஷிங்ரன்,ஓக.8

ஆப்கான், ஈராக் ஆகிய நாடுகளுக்கரன இராணுவ நடவடிக்கைகளுக்காக, மேலதிகமாக 25 பில்லியன் டொலரை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

அவசர நிதியத்திலிருந்து இதனை வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அங்கீகாரமளித்துள்ளார். இது தொடர்பான கைச்சாத்து வைபவம் வெள்ளை மாளிகைக்கருகில் நடைபெற்றது. இதில் புஷ் பேசுகையில், அமெரிக்கத் துருப்புகளுக்கு இன்னும் போதிய வசதிகள் தேவை. இதற்காக அவசர நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அமெரிக்கப் படை வீரர்களுக்கு தமக்குப் பின்னால் தமது நாடு நிற்கின்றது என்பது நன்கு தெரியும். எம் சுதந்திரத்திற்காக அவர்கள் போராடுகிறார்கள் அது மட்டுமல்ல உலக அமைதிக்காகவும் போராடுகிறார்கள் என்றார்.


தொடர்ந்து அவர் பேசுகையில்,

இவர்களின்" இவ்வாண்டு சம்பள உயர்வு 3.5 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த வருடத்தோடு ஒப்பிட்டு நோக்குகையில் இது கிட்டத்தட்ட 21 சதவீத உயர்ச்சியாகும்.

இந்தப் பணம் நல்லமுறையில் சம்பாதிக்கப்பட்டது; நல்லமுறையில் சேமிக்கப்பட்டது. நல்ல முறையில் செலவிடப்படுகிறது என சுட்டிக்காட்டினார். அமெரிக்கர்கள் படைவீரர்களை முடிந்தவரை ஊக்குவிக்க வேண்டும்.

இந்த அமெரிக்கர்கள் விசேட சீருடையில் இருக்கட்டும். அவர்கள் தமது குடும்பங்களை நன்கு பேணுவதற்கும் இதனால் வழியுண்டு என்றும் அவர் கூறினார்.

இராணுவம், விமானப்படை, பொலீஸ்படை ஆகியவற்றைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகளும் பென்ரகன் அதிகாரிகளும் இவ்வைபவத்தில் திரளாகக் கலந்துகொண்டார்கள். (8)



இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் ஹிரோஷிமா நகர்மீது அமெரிக்கா மேற்கொண்ட அணுகுண்டுத் தாக்குதலின் 59 ஆவது வருட நினைவுதினம் ஹிரோஷிமாவிலுள்ள சமாதான ஞாபகார்த்தப் பூங்காவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இந்தநிகழ்வில் உலகப் போரின்போது இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## அல்கெய்டாவின் முக்கிய நபர் சவூதிப் படையினரால் கைது!

ரியாத்,ஓக.8

அல்-கெய்டா இயக்க வன்முறைகளை முறியடித்துவரும் சவூதி பாதுகாப்புப் படைகளால் தேடப்பட்டுவந்த முன்னணி தீவிரவாதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சவூதி பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

மலைப் பிராந்தியமான தென்மாகாண அப்ஹா நகரில் கடந்த வியாழக்கிழமை மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். அத்தருணத்தில் தேநீர் கடையொன்றுக்குள் அவர் அமர்ந்திருந்தார். பாதுகாப்புப் படையினர் இவரை இனங்கண்டு கைது செய்துள்ளனர்.

பரிஸ் அல்-சஹ்ரானி எனும் பெயருடைய இவர் கைதாகும்போது, எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை. தேடப்படும் 26 தீவிரவாதிகளின் பெயர்களைக்கொண்ட பட்டியலில் இவரின் பெயர் உயர்மட்டத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அல்-கெய்டா இயக்கத்தின் இணையத் தளத்தில், சஹ்ரானி விடுத்த செய்திகள் வெளியாகியுள்ளன. அவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன என்று சவூதி பாதுகாப்பு வட்டாரம் கூறியது. (8)

உலக அரங்கில்

## பிஜித் தீவில் புரட்சியைத் தூண்டிய துணை அதிபருக்கு 4 வருடச் சிறை

பிஜி தீவில் கடந்த 2000 ஆம் ஆண்டில் அப்போதைய அதிபர் மகேந்திரசௌத்திரிக்கு எதிராக புரட்சியை தூண்டிவிட்ட குற்றத்திற்காக துணை அதிபர் ஜோப் செனிலோலிக்கு நான்கு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் பிஜி தீவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மகேந்திர சௌத்திரி அதிபராக இருந்து வந்தார். அப்போது, பழங்குடியினத் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட் தலைமையில் மகேந்திர சௌத்திரிக்கு எதிராக புட்சி நடைபெற்றது. இதில், துணை அதிபர் ஜோப்செனிலோலி மற்றும் நான்கு பேருக்கு தொடர்பு இருப்பதால், இவர்களைக் குற்றவாளி என்று கடந்த வியாழக்கிழமை பிஜி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவர்களுக்கான தண்டனையை நீதிபதி நிசாத் ஷமாம் அறிவித்தார். அதில், மகேந்திர சௌத்திரி அரசைக் கவிழ்ப்பதில் துணை அதிபர் ஜோப் செனிலோலிக்கு தொடர்பு இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே, அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனையும், துணை சபாநாயகர் ராகுய்டா வக்கலாபுரே உட்பட மேலும் நான்கு பேருக்கு ஒன்று முதல, 6 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.


ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவில் நான்கு பேர் துணை அதிபர் தொடர்பை உறுதிப்படுத்தியுள்ளனர். தண்டனை அறிவிக்கப்படுவதால் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்க சுவாநகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கில் யாராவது வன்முறையில் இறங்கினால் கடுமையாக ஒடுக்கப்படுவார்கள் என்று பொலீஸார் எச்சரித்த வண்ணம் இருந்தனர். தண்டனை பெற்றுள்ள துணை அதிபர் ஜோப் செனிலோலி, நகுலாதீவில் உள்ள சிறையில் அடைக்கப்படுவார் என்று தெரிகிறது

## கைதிகளைச் சித்திரவதை செய்யும் நாடகத்துக்கு அமோக வரவேற்பு

ஈராக் போரில் பிடிபட்ட கைதிகளை 'அபு கிராய்ப்' சிறையில் அமெரிக்க இராணுவத்தினர் சித்திரவதை செய்ததும், நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்தியதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பல்வேறு நாடுகளும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை கடுமையாக கண்டித்தன.

அமெரிக்க வீரர்களின் இந்தக் கொடூர செயலை மையமாக வைத்து ஜோர்தான் நாட்டில் ஏராளமான மேடை நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இந்த நாடகங்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. இந்த நாடகம் நடக்கும் தியேட்டர்களில் கூட்டம் நிரம்பி வழிகிறது.

ஜோர்தான் நாட்டின் பிரபல நடிகை சுகார் பசீத் இதில் நடித்துள்ளார். அம்மான் நகரில் ஒரு அரங்கில் நடந்த நாடகத்தில் ஈராக்கிய கைதி ஒருவன் அமெரிக்கரை எதிர்த்து பேசியதற்காக அமெரிக்க வீரர்கள் சித்திரவதை செய்வது போன்ற காட்சியில் நடிகை சுகார் பாசித் நடித்த காட்சி இது. (8)



## போதைப்பொருள் கடத்திய இந்தியருக்கு இந்தோனேஷியாவில் மரண தண்டனை

ஜகார்த்தா,ஓக.8

இந்தோனேஷியாவுக்கு ஹெரோயின் கடத்திச் சென்ற அயோத்திய பிரசாத் சவுபி என்ற இந்தியருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்தோனேஷியாவில் போதைக் கடத்தல் குற்றத்துக்கு மரணதண்டனை வழங்கப்பட்டு வருகிறது. போதை கடத்துபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கக்கூடாது என சர்வதேச மனித உரிமை இயக்கமும், ஐரோப்பிய யூனியனும் வற்புறுத்தி வருகின்றன. எங்கள் நாட்டு இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டுமானால், போதைக்கடத்தலுக்கு கடுமையான நடவடிக்கை எடுத்தால் மட்டுமே முடியும் என அந்நாட்டின் அதிபர் மேகவதி திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

1994ஆம் ஆண்டு 12கிலோ ஹெரோயினைக் கடத்தியதாகக் கைதுசெய்யப்பட்ட அயோத்திய பிரசாத் சவுபி (வயது 67) என்ற இந்தியருக்கு மரணதண்டனை வழங்கும்படி அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்புக்கூறியது.

சவுபியின் மரணதண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டது. மரணதண்டனையை ரத்துச்செய்யும்படி கோரி அந்நாட்டுத தலைவர்களிடம் கருணை மனுக்கள் அளிக்கப்பட்டன. சவுபியின் தண்டனையை மறுபரிசீலனை செய்யும்படி இந்திய அரசு கடந்த மாதம் கோரியிருந்தது. அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சவுபிக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. (8)



## 3 வது பிறந்த நாள் வாழ்த்து



இரவீந்திரகுமார் அனுஷியா
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**சுபஷிரவின்**

தனது 3வது பிறந்ததினத்தை இன்று (08.08.2004)
மதுரை மீனாட்சி அம்மன் அருளால் அவ்வாலயத்திலேயே
பெற்றோர், நண்பர்களுடன் கொண்டாடுகிறார். இவரை இலங்கையில்
உள்ள உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் யாழ்
மீனாட்சி அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும்
பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றார்கள்.

சுப்பஸோ [யாழ்ப்பாணம்/கொழும்பு]

38, சங்கிலியன் வீதி. யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்து



21.07.2004இல் மொரட்டுவைப் பல்கலைக் கழகத்தினால் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் (Electronics and Tele Communication Engineering) பட்டம்பெற்ற

**மனோகரன் கருணாகரனை**

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கஜானஸ்தான்
அல்வாய். (35015)(34-19-16-24) **சிவம் சித்தப்பா குடும்பம்.**

## தனியார் நிறுவன அதிகாரியை கடத்தும் முயற்சி தோல்வி

கொழும்பு,ஓக.8

பட்டப்பகலில் ஒரு நிறுவன நிர்வாக அதிகாரியை பாதாள உலகக் கோஷ்டியொன்று கடத்துவதற்கு எடுத்த முயற்சி தனியார் பாதுகாவலர் ஒருவரின் சமயோசித நடவடிக்கையால் தடுக்கப்பட்டது. சந்தேக நபர் ஒருவரும் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

இதுபற்றிய விவரம் வருமாறு:-

கொள்ளுப்பிட்டியிலுள்ள எக்ஸ்போ லங்கா நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியான ஷிராஸ் அனிபா என்பவர் டுப்ளிகேசன் வீதியிலிருந்து தனது வாகனத்தில் ஏறிப்புறப்படவிருந்த சமயத்தில் இரண்டு ஆயுதம் தரித்த ஆசாமிகள் அவரை அணுகித்துத் தங்களையும் ஏற்றிக்கொண்டு புறப்படும்படி கேட்டுக்கொண்டனர். அந்தச் சமயத்தில் அங்குவந்த தனியார்துறை காவல் உத்தியோகத்தர், காரின் கதவை அடித்து மூடிவிட்டு அந்த இருவரையும் பார்க்கமுனைந்தபோது அவர்கள் ஓட்டமெடுத்தனர்.

பாதாள உலகக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்று கருதப்படும் அந்த இருவரையும் பொதுமக்களும் பாதுகாவலருடன் சேர்ந்து துரத்தியதில் ஒருவர் பிடிபட்டார். மற்றவர் ஓடித் தப்பிவிட்டார். பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர். (ப-8)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.8

வல்வை, ரெடியகாடு விளையாட்டுக் கழகத்தின் பொன்விழாவையொட்டி நடத்தப்பட்டு வரும் விளையாட்டு நிகழ்வுகளின் இறுதி நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு கழகத் தலைவர் சூ.சே.குலநாயகம் தலைமையில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும். (10)

## 'சி.ரி.ஸ்கான்' தொடர்பாக பெங்களூரில் ஒரு வாரப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.8

'சி.ரி.ஸ்கான்' தொடர்பான விசேட பயிற்சி நெறியினை மேற்கொள்ளும் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து தொழில் நுட்பவியலாளர் இருவர் இந்தியா பயணமாகியுள்ளனர்.

எக்ஸ்ரே பிரிவைச் சேர்ந்த கதிரியக்கவியலாளர் (Radio logist) டாக்டர் செல்வி ஜெயந்தி சுப்பிரமணியம், கதிரியக்குநர் (Radio Grapher) எஸ்.தயாபரன் ஆகிய இரு வருமே இந்தியா சென்றுள்ளனர்.

ஒருவார கால விசேட பயிற்சிநெறிக்காக பெங்களூர் வைத்தியசாலைக்குச் செல்லும் இந்த இருவரும் கடந்த முதலாம் திகதி இங்கிருந்து புறப்பட்டுச்சென்றனர். (ஜ-15)

## தென்மராட்சியில்....

**கொழும்பு MOON BEAUTY CARE இன்**

**அழகுக்கலை பயிற்சி, சிகிச்சை சேவை சம்பந்தமான இலவசக் கருத்தரங்கு**

காலம்:- 12.08.2004 காலை 10.30 - 1.30 (புதிய நேரம்)
இடம்:- ஏசியன் கல்வி நிறுவனம்
புத்தூர் சந்தி, மீசாலை

கருத்தரங்கில் உள்ளடங்குபவை:
- Facials and face care
- Hair Care (தலை முடி சம்பந்தமான அனைத்தும்)
- Bridle dressing and make Up
- Eye care and Body care

அத்துடன், முகத்தில் காணப்படும் பருக்கள், கரும்புள்ளிகள், பாலுண்ணிகள், மாறா வடுக்கள், துவாரங்கள், கருமை, கண் கருவளையம் என்பவற்றை நீக்கும் சிகிச்சை சம்பந்தமான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

- ஆர்வமுள்ளோர் 10.08.2004இற்கு முன் ஏசியன் கல்வி நிலையத்தில் பதிவை மேற்கொள்ளவும்.
- Facials மட்டும் செய்ய விரும்புவோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- பெண்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

மேலதிக விவரங்களுக்கு:
திருமதி ந.அகிலா
(அழகுக்கலை, நடன ஆசிரியை)
(35016) (24-19-16) 0777 570138

## தையலாளர்கள் தேவை

நன்கு வெட்டித் தைக்கத் தெரிந்த அனுபவம் உள்ள பெண் தையலாளர்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
**சிற்றி ஹாமன்ஸ்**
535A, பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி.
(35023)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வீடு, வீடாக கதை, கட்டுரை, ஆன்மீகநூல்களை விநியோகிக்கும் பணியை செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கும் ஸ்தாபனத்தில் இணைந்து பயன்பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விரும்புவோர் பின்வரும் முகவரியில் விண்ணப்பங்களைத் தாமதிக்காது பெற்று இன்றே அங்கத்தவராகுங்கள். (மனோகராத் தியேட்டரில் இருந்து ஒரு மைல் சுற்றுவட்டாரத்தில் உள்ளவராக இருத்தல் வேண்டும்).

**L.L. ஸ்தாபனம்** (39-16-19-24)
(34997) 24, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### நடராசா சந்திரசேகரம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சந்திரசேகரம் நேற்று (07.08.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - இராசம்மாவின் மூத்த மகனும் சற்குணநாயகியின் அன்புக் கணவரும் சர்மிலா (ராஜி), சௌடினி (நிஜி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுஜீவனின் (ஜோமனி) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*அரசடி,*
*பண்டத்தரிப்பு.*
தகவல்:
மனைவி - ச.சற்குணநாயகி (சின்னக்கிளி),
சகோதரன் - ந.சந்திரசிறி (பவுண்).
(35020) (39-16-19-24)

## இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை -2004 இற்கான

## வழிகாட்டல் வகுப்பு

காலம்: August 9 ஆம், 10 ஆம், 11 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 வரை
இடம்: யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

சட்ட மாணவர் இந்து மகாசபை,
இலங்கைச் சட்டக் கல்லூரி.
(35027)

## நீங்காத நினைவுகள்

தோற்றம் 1964 - 06 - 07



மறைவு 2004 - 05 - 09

**அமரர் ரஞ்சினிதேவி பாலகுமரன்**

பொட்டிட்ட நெற்றியும்
புன்சிரிப்பும் புனித நீறும்
அன்பான பேச்சும்
தங்க மனசும் தளராத உறுதியும்
மங்காத அறிவும் எம்
இதயத்தைக் கவர்ந்தன
அண்ணியாக ஆருயிர் தோழியாக
பண்பிலே தெய்வமாக
எம் மனதில் இடம் பிடித்தாய்
அன்று உனது பயணம்
இறுதிப் பயணமென நாமறியோம்
காலன் அறியாத காலன் உன் உயிரை
ஞாலம் கதறியழ
நடு வழியில் கவர்ந்தானே
அம்பாளின் சந்நிதியில்
அம்மா உன் ஆத்மாவே
என்றும் அழியாத
இன்பமுடன் வீற்றிருக்கும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (35019)
**பெரியப்பா குடும்பம்.**

## மரண அறிவித்தல்

### தம்பு லோகநாதன்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட இல.1, பிரதான வீதி, காங்கேசன்துறை கண்ணன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் ஆகிய தம்பு லோகநாதன் அவர்கள் நேற்று (07.08.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - இரத்தினம் தம்பதிகளின் அருமைப் புதல்வனும் தியாகராசா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இந்திராணியின் அருமைக் கணவரும் துவாரகாதேவி, திவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற செல்வி கனகாம்பிகை (K.K.S.) மற்றும் செல்வி தம்பு, கோதைநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை - சங்கானை), V.T.சண்முகநாதன் (கனடா - முன்னாள் மக்கள் வங்கி பரிசோதகர்), கமலாம்பிகை, சுந்தரநாதன் பத்மினி (முன்பள்ளி ஆசிரியை - சங்கானை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரோஜினியின் (கனடா) அருமை மைத்துனரும் பிரியதர்சினி (கனடா), சண்முகப்பிரியா (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் அம்பலவாணர் பத்மாவதி (வண்ணார் பண்ணை) தம்பதிகளின் மருமகனும் கனகசபாபதி (மத்திய வங்கி - கொழும்பு, ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி), காலஞ்சென்ற இரத்தின சபாபதி (கனடா) ஆகியோரின் அருமைப் பெறாமகனும் வேணுகோபாலின (சுவீடன்) அன்பு மைத்துனரும் ஜெயகாந்தனின் அன்பு மாமனாரும் ரிசாந்தனின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கராச்சி இந்து மயானத்திற்கு பி.பகல் 2.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*தேவாலய வீதி,*
*சங்கானை.*
(35022) (14-19-24)
தகவல்:
வ.த.கோதைநாயகி
(சகோதரி).

# பொன்னாலை செல்லும் பக்தர்கள் எண்ணிக்கை பெரும் வீழ்ச்சி

கடற்படையினரின் கெடுபிடியினால் பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

பொன்னாலையிலுள்ள பிரசித்திபெற்ற வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கு யாழ். குடாநாட்டின் சகல இடங்களில் இருந்தும் ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் சென்று வழிபட்டு வந்தனர்.

கடந்த சில வாரங்களாக, பொன்னாலையில் காவல் அரண்களை ஏற்படுத்தியுள்ள காரைநகர் கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகளினாலும், கெடுபிடிகளினாலும் பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. கடற்படையினர் உடல் பரிசோதனையை மேற்கொள்வதுடன், கமராக்களைக் கொண்டு செல்வதற்கும் தடைவிதித்துள்ளனர்.

காரைநகர் கடற்படையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னர் எவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனரோ அவ்வாறு தற்போதும் நடப்பதாகப் பொன்னாலை பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மூளாய் சந்தியில் இருந்து பொன்னாலை வரதராசப்பெருமாள் ஆலயம்வரை பல காவல் அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயச் சுற்றாடலில் பொதுமக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை.(ஐ-175)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியை திருமதி திலகராஜ் நாகேஸ்வரி அவர்களின் பாசமிகு தாயார் **திருமதி முத்துக்குமாரு சின்னத்தங்கச்சி** அவர்கள் இயற்கை எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத் தினருடன் துயரில் பங்கேற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்
(நலன்புரிக்கழகம்).
யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர்.
(35032)(38-12-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **கமலம் இராசையா** அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*த. செல்வலிங்கம்,*
*தம்பியோடை,*
*வதிரி, கரவெட்டி.*

-குடும்பத்தினர்.
(சி.36480)(38-12-18)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பா செல்லத்துரை (கைதடி வடக்கு)



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா, செல்லத்துரை அவர்கள் நேற்று (07.08.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தியாகராசாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் தவபாலசிங்கம் (இந்தோனிசியா), குணபாலசிங்கம், ஜெயபாலசிங்கம் (சுவிஸ்), தனபாலசிங்கம், சிவபாலசிங்கம் (U.K.) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற நித்தியலக்சுமி தேவி, சுபத்திரா, ஜெயராணி, யோகமலர், சுபத்திரா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை பகல் ஒருமணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் ஊற்றல் மைதானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி வடக்கு,*
*கைதடி.*
(35031)(38-12-18)

தகவல்: மகன்மார்.
செ.குணபாலசிங்கம் 0776165405
செ.தனபாலசிங்கம் 0777427181

### ஆறுமுகம் கந்தையா

சாவகச்சேரி, சங்கத்தானையை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் கந்தையா நேற்று (07.08.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கற்பகத்தின் சகோதரனும் இந்திரகுமார் (சுவிஸ்), இந்திராதேவி, கமலாதேவி (கனடா), கமலநாதன் (ஜேர்மனி), ரதிதேவி (குளோபல் தொலைத்தொடர்பகம், கொடிகாமம்), யசோதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகாம்பிகை, செல்வராசா, திருமதி பராசக்தி ஆனந்தசிவம் (ஆசிரியை - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்) ஆகியோரின் தாய்மாமனாரும செல்வராணி, உலகநாதன் (கிராமஅலுவலர் - பூநகரி), யோகலக்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் பவித்திரா, பிருந்தா, கிருத்திகா, அஜீபன், தமிழ்க்குமரன், தமிழ்மாறன், தமிழ்வாணன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2004) மாலை 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்றொழிலாளர் வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*
(35033)(38-12-18)

தகவல்:
சு.உலகநாதன் (மருமகன்).
0777283831

### வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை



நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் சிவபாலன், அம்பிகநிதி (ஜேர்மனி), குகதாசன், பரமேஸ்வரன், கருணாகரன், சத்தியபாமா (பிரான்ஸ்), காந்திமதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராஜேஸ்வரி, தயாநிதி, வாசுகி, இரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பாக்கியம், சின்னம்மா, கண்மணி, அமரர் கந்தையா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*164, கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(35041)(40-12-18-38)

தகவல்:
குடும்பத்தினர்.


A/L பரீட்சை முடிவுகள் பார்வையிடலாம்

ஃபோக்கஸ் இன்ரநெட் கபே

120, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(யாழ்/இந்து மகளிர் கல்லூரி முன்பாக) 0777-488177
(35040)(38-12-18)

NEW SCIENCE HALL

இரசாயனவியல் வகுப்புகள்

ஆசிரியர் க.சிவத்திரன் B.Sc. (Hons)

(மீள்பரீட்சார்த்திகளுக்கானது)

1) அலகுரீதியான கடந்தகால வினாவிடை வகுப்பு
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை (DAY CLASS)
பிரிவு I 8.30 - 9.45 } பொது இரசாயனம்
பிரிவு II 9.45 - 11.00 } நடைபெறுகிறது.

2) மாதிரி வினாவிடை வகுப்பு
பிரிவு I செவ்., வியா. 7.30 - 8.30
பிரிவு II செவ்., வியா. 11.00 - 12.00

3) அசேதன இரசாயனம் (Theory) திங்கள் 4.30 - 6.30

4) சேதன இரசாயனம் (Theory) வியாழன் 4.30 - 6.30

குறிப்பு:- I : யாவும் புதிய நேரப்படி
II : ஆரம்பம் 11.08.2004 புதன்
III : பௌதிக இரசாயனம் (Theory) வெகுவிரைவில்
IV : Beacon Study Centre வதிரியில் அலகுரீதியான கடந்த கால வினாவிடை வகுப்பு சனி 8.30 - 9.30, ஞாயிறு 7.30 - 8.30
V: EESAN கோண்டாவிலிலும் அலகு ரீதியான கடந்தகால வினாவிடை செவ்., புதன் 6.00 - 7.00
(35034)(38-12-18)

டோகா, கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

30 நாள்களுக்குள் பயணம்

தொழில் : மேசன்

20,000/= மேல் சம்பளம், வேலைநேரம் 8 மணித்தியாலம் மட்டுமே. மேலதிக நேரக் கொடுப்பனவும் உண்டு. பயணத்திற்கான கட்டணத்தில் அரைவாசிக் கட்டணம் கடன் அடிப்படையில் செய்து தரப்படும்.

தொடர்பு : மைக்கல் 0777 279813
(சி.36479)(38-12-18)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 601 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 06-08-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 5820351-5835274 | |

லக்கினம் மீனம்

வெற்றி இலக்கங்கள்

**03 19 23 42**

ஜக்பொட் பரிசு ரூபா.61,95,525/- வெல்லப்படவில்லை.
இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 65,65,600/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,31,711 | 10/- | 33,17,110/- |
| 2.இலக்கங்கள் | 30,335 | 20/- | 6,06,700/- |
| 1.இல + லக்கினம் | 29,911 | 30/- | 8,97,330/- |
| 2.இல + லக்கினம் | 2,786 | 100/- | 2,78,600/- |
| 3.இலக்கங்கள் | 799 | 500/- | 3,99,500/- |
| 3.இல + லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 61,95,525/- | - |
| மொத்தம் | 3,95,626 | - | 62,99,240/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,99,240/-

தொடர் இல. 4858809 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5833671-0-53
5820351-5-53
5827517-3-75
5827962-5-17
5829716-8-83


நெல்லியடி
*A/L Day Class*
கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை
ஆரம்பம்: நாளை 09.08.2004 மு.ப. 9.00 மணி
(36470)(38)

மாபெரும்
புலமைப் பரிசில் திட்டம்
2004/2005
விண்ணப்ப முடிவு திகதி: 12.08.2004

கணனி உலகில் பிரவேசிக்க விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

"நாளை என்ன என்பதை இன்றே தீர்மானியுங்கள்"

முற்றிலும் இலவச ஆங்கில வகுப்பு

மேலதிக விவரங்களுக்கு:
தலைமையலுவலகம்
IBMS
# 410,K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். (சி-36478)

கிளை நிறுவனங்கள்
N.M.M.V. வீதி,
நெல்லியடி.
சங்கத்தானை,
சாவகச்சேரி.


## தவறிவிட்டது

201 - ஆட்டோக்கு உரிய ஆவணங்கள் நேற்று சனிக்கிழமை கனகம்புளியடிச் சந்திக்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்,
மீசாலை, புத்தூர் சந்தி.
T.P. : 077 6569699

## தேவை

கடைக்கு விற்பனையாளர்கள் தேவை. நேரில்வரவும்.

தொடர்பு:
றொலைக்ஸ் பேக்கரி,
இல.118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


லக்சுமி இணுவில்



விஜய், த்திரிஷா நடிப்பில்
கில்லி
அடுத்த புதிய வெளியீடாக
ஆட்டோகிராஃப்
முன்கூட்டிய ஆசனப் பதிவுகளை செய்துகொள்ளவும்.
தினசரி புதிய நேரம் 11.00, 3.00, 7.00
(35039) (38)

ராஜா யாழ்ப்பாணம்



சிலதினங்கள் மட்டும்
சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மும்தாஜ் நடித்த
குத்து
புதியநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
(சி-36364)(32)

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜனிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
காட்சிகள் 11.00,3.00,7.00(பு.நே.)
9 ஆம் திகதி முதல் சரத்குமார் நடித்த மாணவீந்தன்



(C/36445)(12)

சங்கானை



அர்ஜுன், ரோஜா நடித்த
ஆயுத பூஜை
வெள்ளி, சனி, ஞாயிறு
தினசரி 11.00, 2.45, 6.00 பு.நே.
Past Perfect [இரவு 8.45 பு.நே.]


## மரண அறிவித்தல்

### திருமதி பேரம்பலம் ஜெயலட்சுமி



இல.414, கோயில் வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி பேரம்பலம் ஜெயலட்சுமி அவர்கள் சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பேரம்பலம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி அருணாசலம் தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குணபாக்கியம், தம்பாப்பிள்ளை, சோமசுந்தரம், விஜயசுந்தரம் மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவராஜா, விக்கினராஜா, சந்திரவதனி, பாலராஜா, ஆனந்தராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மாவதி, சரதாதேவி, காலஞ்சென்றவர்களான விவேகானந்தன், கலாநிதி, சரஸ்வதி ஆகியோரின் மாமியும் அருண், யாழினி, ஜகதீசன், இராமன், யதுர்ஷன், சுதர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.414, கோயில் வீதி,*
*நல்லூர்.* (35042)(40-12-18-38)

தகவல்:
பிள்ளைகள்.

# கல்லால் தலையில் தாக்கப்பட்டவர் மரணம்!

கல்லினால் தலையில் பலமாகத் தாக்கப் பட்டார் என்று கூறப்படும் குடும்பஸ்தர் ஒருவர் யாழ.வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட போது இடைவழியில் உயிரிழந்தார்.

நேற்று மாலை புங்குடுதீவில் உள்ள பிரதான விளையாட்டு மைதானம் ஒன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புங்குடுதீவு 10ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த கஜிதாம்பிள்ளை அன்ரனி இரு தயராஜா (வயது42) என்பவர் உயிரிழந்தவரா வார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.

நேற்று நடந்த உதைபந்தாட்டப் போட்டி ஒன்றின் முடிவில் தோல்வியுற்ற அணியைச் சேர்ந்த ஒருவரால் பிரஸ்தாப குடும்பஸ்தர் தலையில் பலமாகத் தாக்கப்பட்டார் எனக் கூறப்பட்டது.

தலையில் பின்பகுதியில் பலமாகத் தாக் கப்பட்டதில் படுகாயமடைந்த அவரை யாழ். வைத்தியசாலைக்கு அவசரமாக எடுத்துவரும் வேளையில் வழியில் உயிரிழந்தார் எனக் கூறப் படுகிறது.

சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## பாலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் நாவற்குழி, கைதடி, பண்ணை, வல்லை, அராலி, தொண்டைமானாறு, புத்தூர், வண்ணாத்தி உட்பட பதினொரு இடங் களில் அமைந்துள்ள பாலங்கள் புனரமைக்கப் படவுள்ளன.

இந்தப் பாலங்களைப் புனரமைக்க வசதி யாக அந்தப் பாலங்களின் மேலும் அவற்றுக்கு அருகிலும் அமைந்துள்ள காவலரண்கள் மற் றும் அவ்விடங்களில் விதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாக கூட் டத்தில் ஆராயப்பட்டது.

காவலரண்களை சுமார் 30 மீற்றர் தூரத் துக்குப் பின் நகர்த்தவும் கண்ணிகளை அகற்ற வும் படைத்தரப்பில் இணக்கம் தெரிவிக்கப் பட்டது.

பாலம் அமைக்கும் பணிகளை 24 மணிநேர மும் மேற்கொள்ளவும், பாலம் அமைந்துள்ள பகுதியில் மாற்று வீதிகளை அமைத்துப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கும் படையி னர் முழு ஒத்துழைப்பு வழங்குவர் என்று அப் போது உறுதியளிக்கப்பட்டது.

சேதமடைந்த பாலங்களைப் புனரமைப்ப தற்கு தயார் நிலையில் தயாரிக்கப்பட்ட பாலங் கள் கடந்த ஆட்சிக் காலத்தின்போது பிரிட்ட னில் இருந்து எடுத்துவரப்பட்டிருந்தன. இந்தப் பாலங்கள் தற்சமயம் ஜாஎலவில் உள்ள களஞ் சியம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாலங்களே இங்கு எடுத்துவரப்பட்டு உரிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. (ஐ-3-5)


யாழ். மண்ணில் ஒரு கணனிப் புரட்சி

Sri Lanka Computer Driving Licence

இலங்கை மூன்றாம் நிலை கல்வியமைச்சினால் வழங்கப்படும் இச்சான்றிதழுக்கான பரீட்சை யாழ். மண்ணில் நடைபெறவுள்ளது.

மேலதிக விவரம் பெற்றுக்கொள்ள முக வரியைத் தபால் மூலமாகவோ தொலைபேசி வாயிலாகவோ தெரியப்படுத்தவும்.

ECBC - No. 30, Station Road, Vavuniya.
T.P.: 0777-585920 (34921)

IELTS
EXPRESS COURSE
DURATION: 2 Months
STUDENT VISA
மூலம் U.K., CANADA
செல்ல விரும்புவோர்க்கு
Colombo இல் at
Wellawatte & Kotehena
For. Band Score 7
By: K.P. ARUN M.Sc.
T.P.: 0777 - 259823

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS. (33927)


# சித்தாண்டியில் பெண் ஒருவர் சூட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு,ஒக.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியள வில் பெண் ஒருவர் சூட்டுக்குப் பலியானார்.

அதே இடத்தைச் சேர்ந்த வெள்ளையன் சித்ரா (வயது52) என்பவரே உயிரிழந்தவராவார்.

இரவு நேரம் அவரது வீட்டுக்கு வந்த மூவர் கதவைத் திறக்கும்படி கோரியதாகவும். மறுக்கவே வீட்டை உடைத்து உட்புகுந்தவர் கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர். (-3)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அனு மதிக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், பாதுகாப்பு அனுமதி உடனடியாகக் கிடைக்காத தால் ராஜபக்ஷவை யாழ் சிறைச்சாலையிலேயே தங்கவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை ஆட்சேபித்தே அவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இதுவிடயம் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## புலம்பெயர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடு தலைப் புலிகளின் சர்வதேச செயலகப் பொறுப் பாளர் வி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இரா.நாகலிங்கம் அவர்கள் தாய் மண்ணில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக 1979ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டுக்குச் சென்றார். புலம் பெயர்ந்தாலும் தாய் மண்ணின் நினைவோடும் தாய் மொழியின் பற்றோடும் வாழ்ந்து வந்தார். 1986ஆம் ஆண்டு காலப் பகுதியில் பத்துப்பிள் ளைகளை ஒன்றாக்கி ஜேர்மனியில் தமிழ்மொழி யைப் போதித்தார். இதனோடு இவரது சேவை மேலும் விரிவுபட்டது.

1987ஆம் ஆண்டு தமிழர் நலன்புரிச்சங்கம் தோற்றம்பெற்றது. இதில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார் இவ்வாறாகப் பல அமைப்புக்கள், சங்கங்கள் ஊடாக தமிழுக்காகவும் தேசியப் போராட்டத்திற்காகவும் இவரது பணி தொடர்ந் தது.

1990ஆம் ஆண்டு உலகத் தமிழர் இயக்கம் தோற்றம்பெற்றது. இது ஜேர்மன் அரசிலும் பதிவு செய்யப்பட்டது. இதில் இரா. நாகலிங் கம் தமிழ்க்கல்விப் பணியின் பொறுப்பாளராக இருந்து தமிழ்மொழியை வளர்த்தார். இதே ஆண்டிலேயே ஜேர்மன் யூக்ஸன் நகரில் தமிழ் ஆலயம் உருவாக்கப்பட்டது. இதில் தமிழ் கற் கும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. தமிழ் ஆலயங்களும் பிறப் பெடுத்தன. இரா.நாகலிங்கம் தமிழுக்காக ஆற்றி வரும் பணியில் இவருக்கு பக்கபலமாக நின்று பணியாற்றிவரும் இவரது துணைவியாரின் பங் களிப்பும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இன்று ஜேர்மன் நாட்டில் 123 தமிழாலயங் களும் 6,000 மாணவர்களும் உள்ளனர். இவர்க ளுக்கான ஆசிரியர்களாக 650 பேர் பணியாற்றி வருவதோடு, இவற்றினை நிர்வகிக்கும் பணி யில் 350 பேர் உள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)


BEACON கல்வி நிலையம்
யாழ்நகர்.

A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள்

கலைப்பிரிவு
LOG. : S.S. மனோகரன்
TAM. : நாக.தமிழிந்திரன்
GEO. : S.R.பாலா
H.C. : S. ஸ்ரீஷ்
DRA. : T.J.சுதன்

வர்த்தகப் பிரிவு
ACC. : B.பாலவாசன்
ECO. : P.மோகன்
B.St. : T.யசோ
CRI. : மல்லிகா
Pol.Sci. : பிரபல ஆசிரியர்

ஆரம்பம்: 09-08-2004
திங்கள் 7.00 a.m. (ப.நே.) (34918)


# தோப்பூரில் முஸ்லிம் நபர் சுட்டுக்கொலை!

மூதூர் , தோப்பூர் கிராமத்தில் நேற்றுமுன் தினம் இரவு 9 மணியளவில் இனந்தெரியா தோரின் சூட்டுக்கு இலக்காகி முஸ்லிம் ஒரு வர் உயிரிழந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த அப்துல் கனி ஜாஹோஸ் (வயது 35) என்பவரே உயிரிழந்த வராவார். சம்பவதினம் அவரது வீட்டுக்கு வந்த இனந்தெரியாதோர் அவரின் பெயரைச் சொல்லி அழைத்துள்ளனர். அவர் வெளியே வந்தபோது அவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கான காரணம் தெரிய வில்லை. மூதூர் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-3-188)

# மட்டக்களப்பில் குண்டுப் புரளி !

மட்டக்களப்பில் நேற்று மாலை ஏற்பட்ட குண்டுப் புரளி காரணமாக நகரத்தில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகிலுள்ள உணவு விடுதியின் முன்பாக அநா தரவான நிலையில் பை ஒன்று காணப்பட்டது. பொதுமக்கள் பொலீஸாருக்குக் கொடுத்த தக வலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்து சென்ற பொலஸாரும், குண்டு செயலழக்கச செய்யும் பிரிவினரும், இராணுவத்தினரும் சுமார் இரண்டு மணிநேரம் வரை அவ்வீதியை பொதுமக்களின் போக்குவரத்திற்குத் தடை விதித்திருந்தனர். பின்னர் குண்டு செயலிழக்கச செய்யும் பிரிவி னர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் பையை எடுத்துப் பார்த்த போது அது வெற்றுப் பையா கக் காணப்பட்டது. இதன் காரணமாக மட்டக் களப்பு நகரம் பெரும் பரபரப்பாக காணப்பட்டது. (ஐ-3)

# குடாநாட்டில் 56 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(2.5445), கோபாலமூர்த்தி ரஜீவ் - உயிரியல் (2.4842), அருளம்பலம் சுஜந்தன் - வர்த்தகம் (1.9853), பாலஸ்கந்தன் ஜெபேந்திரா - வர்ததகம் (2.0416), லோகேஸ்வரன் கவிக்குமார் - வர்த்தகம் (1.9135), குமாரவடிவேல் குருபரன் (2AB) கலை (2.3951) (மாவட்டம் - முதலாவது, தேசியம் - 3 ஆவது).

**பருத்தித்துறை மெதடிஸ் மகளிர்**

விக்னேஸ்வரன் விநோதிகா - உயிரியல் (2.6058) (மாவட்டம் - 2ஆவது, தேசியம் - 45 ஆவது).

**உடுவில் மகளிர் கல்லூரி**

அமிர்தலிங்கம் தர்ஷியா - வர்த்தகம் (1.7055).

**புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா**

ஸ்ரீபராபரன் சிவதாஸ் - வர்த்தகம் (2.1582).

**வேம்படி மகளிர்**

அனுஷா செல்வராஜா - கணிதம் (2.6924), சுகிர்தினி விநாயகவசீகரன் - கணிதம் (2.7698), மாதங்கி இராமச்சந்திரன் - உயிரியல் (2.3293), மதுராதா சிவசுப்பிரமணியம் - உயிரியல் (2.3231), சரண்யா நரேந்திரன் - உயிரியல் (2.3790), சிவப்பிரியா குணரத்தினம் - உயிரி யல் (2.1982), சுஜித்தா சிவராஜா - வர்த்தகம் (1.9439), விஜித்தா சக்திவேல் - வர்த்தகம் (1.8210), ரூபினி இரத்தினசிங்கம் - கலை (1.8903), சுகன்யா விநாசித்தம்பி - கலை (1.8585).

**சுண்டுக்குழி மகளிர்**

சச்சிதானந்தன் மயூரதி - உயிரியல் (2.6057), கதபொன்கலன் மேரி லூஸியா - கலை (1.8596).

**யாழ்ப்பாணக் கல்லூரி**

இராஜேந்திரம் செந்தூரன் - உயிரியல் (2.3531).

**வயாவிளான் ம.வி.**

கணேசலிங்கம் கார்த்திகேயன் - உயிரியல் (2.1569), பாலகௌரி சங்கரப்பிள்ளை - கலை (1.9966), தனபாலசிங்கம் கிரிதரன் - வர்த்தகம் (1.9706), குணரத்தினம் துர்க்காதரன் - வர்த்த கம் (1.8047).

**நெல்லியடி ம.வி.**

இராஜேஸ்வரன் அகிலன் - வர்த்தகம் (2.0738), சிவபாலன் தபாளினி - கலை (2.034).

**மகா[illegible]னா**

தயாளினி சிவசுப்பிரமணியம் - வர்த்தகம் (1.6359).

**சென்ஜோன்ஸ்**

சிவகுமாரன் சயந்த் - உயிரியல் (2.6516) (மாவட்டம் - முதலாவது, தேசியம் - 37ஆவது), சிவலிங்கராஜா ரகுராமன் - உயிரியல் (2.3157), ஸ்ரீஸ்கந்தராஜா துஷியந்தன் - வர்த்தகம் (1.9560), விமலதாஸ் யுரேஷ் - வர்த்தகம் (1.8415).

**யாழ். இந்து மகளிர்**

வனஜா சோமசேகரம் - வர்த்தகம் (2.1139), பிருந்தா தங்கவேல் - கலை (1.9260), பாலினி பாலசுப்பிரமணியம் - வர்த்தகம் (1.7452), ஜெரீனா பாலசுப்பிரமணியம் - கலை (1.7653).

**கொக்குவில் இந்து**

தர்ஜினி திருநாவுக்கரசு - உயிரியல் (2.3912), கார்த்திகா தர்மலிங்கம் - வர்த்தகம் (1.8013), தர்மேஸ்வரன் ராஜீவன் - வர்த்தகம் (1.9107).

**சென். பற்றிக்ஸ் கல்லூரி**

அந்தனிப்பிள்ளை சரத்குமார் - வர்த்தகம் (2.1778), அந்தனி சுஜீவன் - வர்த்தகம் (1.6224),

**ஹாட்லிக் கல்லூரி**

சண்முகநாதன் தனஞ்செயன் - கணிதம் (2.8408) (மாவட்டம் - 2ஆவது, தேசியம் - 20ஆவது)

**யாழ் மத்திய கல்லூரி**

வேலாயுதம் சிவகரன் - வர்த்தகம் (1.9878)

**சாவகச்சேரி இந்து**

கனகரத்தினம் கார்த்திபன் - வர்த்தகம் (1.7379), கனகசபை கயந்தன் - வர்த்தகம் (2.0494), முத்துலிங்கம் விஜிதா - வர்த்தகம் (1.8852), சிதம்பரநாதர் சிவாசினி - வர்த்தகம் (1.6524), வீரசிங்கம் சிவரூபி - கலை (1.7520), நாதன் சிந்துஜா - கலை (1.8380)

**வட இந்து மகளிர்**

அனுஷியா யோகராஜா - வர்த்தகம் (1.6359) (ஐ-உ-3)

## முற்றவெளியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றவெளிப் பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அங்கிருந்து காக்கைதீவுக்கு அப்புறப்படுத்தவும் அங்கு நிறைந்துள்ள புல் பூண்டுகளை அகற்றவும் யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் குப்பை களைக் கொட்டாமல் அவற்றை நேரடியாக காக்கைதீவுக்கு அப்புறப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகரப்பகுதி மக்கள் பொழுது போக்குவ தற்கும் பொது நிகழ்ச்சிகளை நடத்தவும் வசதி யாக முற்றவெளிப் பிரதேசம் சுத்திகரிக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
கல்வியாண்டு 2005/2006

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகங் களின் பட்டப்பாட நெறிக்கான.

கலை முதற்தேர்வு G.A.Q.

வர்த்தக முதற்தேர்வு
First in Commerce

க.பொ.த. உயர் [illegible]ரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட[illegible] ஆசிரியர்கள் விண்ணப் பிக்கலாம்.

விண்ணப்பங்களையும் விவரத்திரட்டினை யும் ரூபா 10/= செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் 29.08.2004 இல் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு : இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-36466)

திருமண சேவை

எங்களிடம் உள்நாட்டிலும் வெளிநாடுகளி லும் வசிக்கின்ற இந்துசமய/றோமன் கத்தோ லிக்கர் - எல்லா ஜாதிகளிலும் உள்ள ஆண், பெண் இருபாலாரினதும் திருமண ஜாதகக் குறிப்புகள் உண்டு. உங்கள் அன்புக்குரியவர் களின் திருமணங்கள் விரைவில் நிறைவேற - மஞ்சு திருமண சேவை.

இல. 09, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
ஈ.மெயில்: Manju190@yahoo.com
தொ.பே.: 011 2361813 (சி-36469)

நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி.
யாழ்.மாவட்டத்திலே முதல்தர
ஆசிரியர்கள் வடமராட்சியில்
DAY CLASS, PAPER CLASS
பௌதிகம்: திரு.குகன்
செவ்., வியா., வெள்ளி. 11–12
இரசாயனம்: திரு.அன்புழகன் (அன்பு)
செவ்., வியா., வெள்ளி. 10–11
இணைந்த கணிதம்: திரு.ரவீந்திரன்
சனி-ஞாயிறு 6-8
வெள்ளி 3-6 (34940)








இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
08-08-2004

# அரசியல் கொந்தளிப்புக்குள் சமாதானத்துக்கு நல்லடக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும், அதன் ஜனாதிபதியும் அரசியல் கொந்தளிப்புக்குள் அகப்பட்டுள்ளனர். இக் கொந்தளிப்புக்கான மையக் காரணம் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பானதாகவே இருக்கிறது. விடுதலைப் புலிகளுடைய இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதும் - அதைப் பற்றி மட்டுமே முதலில் பேசுவதும் அது தொடர்பாக பேச்சுக்களில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஏற்ப இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையொன்றை அமைப்பதும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு எட்டக்கூடிய விடயங்களா என்றொரு பலமான சந்தேகம் தமிழ் மக்களிடம் நிலவுகிறது. ஜனாதிபதியின் ஆரம்ப முயற்சிகளே ஜே.வி.பியின் கொந்தளிப்புக்குள் அமிழ்கிறது.



ஜே.வி.பி. நன்கு திட்டமிட்ட வகையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான யோசனைகளை எதிர்த்து தெற்கிலுள்ள கிராமங்கள், நகரங்கள் தோறும் பரப்புரைகளை நடத்தத் தொடங்கியுள்ளது. ஜனாதிபதி விடுதலைப்புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகத் தான் பேசப்போவதாகப் பல தடவைகள் அறிவித்து விட்டார். ஆனால், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை தொடங்குவதாயின் இனப் பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வுக்குரிய பேச்சுக்களையும் ஏககாலத்தில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி கொண்டுள்ளார். அத்துடன் ஐக்கிய இலங்கைக்குள் இடைக்காலத் தன்னாட்சி வழங்குவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு ஜனாதிபதி தயார் என்றும் ஒரு அறிவிப்பு அண்மையில் வெளியானது. இலங்கைக்கு நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த இறுதித் தருணத்தில் இந்த அறிவிப்பு ஜனாதிபதியை ஆதாரம் காட்டி வெளியாகியிருந்தது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஊடாக விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளுக்கான பதில் யோசனையொன்றை விடுதலைப் புலிகளிடம் சேர்ப்பித்து அது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அபிப்பிராயம் என்ன என்றும் அறியப்பட்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல் வெளியானது. ஜனாதிபதியின் புதிய யோசனைகளைப் புலிகள் நிராகரித்திருக்கக் கூடும்.

## சுதந்திர முன்னணித் தலைவர் பதவி இராஜினாமா

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA)தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இராஜினாமாச் செய்துள்ளார். சுதந்திரமுன்னணிக் கூட்டங்களில் ஜே.வி.பி அங்கத்தவர்கள் முன்வைக்கும் கேள்விக்கணைகளை ஜனாதிபதி தொடர்ந்தும் தாங்கிக்கொள்ள வேண்டியதில்லை. அத்துடன் ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற நிலையில் தனது உத்தியோகபூர்வச் செயற்பாடுகள் ஜே.வி.பியின் நாடாளுமன்ற ஆசனங்களாலும் அதன் வழி ஜே.வி.பி அமைச்சர்களாலும் கட்டுப்படுத்தப்படுவதை ஜனாதிபதி விரும்பவில்லை

## சுதந்திர முன்னணிக்குள் ஜே.வி.பியின் கைஓங்கும்

ஜனாதிபதி சுதந்திர முன்னணித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்ததோடு மேலும் முரண்பாடுகள் அதிகரிக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி நாட்டின் ஜனாதிபதி ஒரு புறமும், ஜே.வி.பியின் தீவிர செல்வாக்குக்குட்பட்ட நாடாளுமன்றம் மறுபுறமும் முரண்கள் அதிகரிக்கிறது. மீண்டும் நிறைவேற்று நிர்வாக அதிகாரமும் சட்டவாக்கத்தைச் செய்யும் நாடாளுமன்றமும் முறையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி ஆகிய இரு வெவ்வேறு அரசியல் கட்சிகளின் செல்வாக்குக்கு உட்படப்போகின்றன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அனுராபண்டாரநாயக்கா போன்ற முக்கியஸ்தர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தோராயினும் ஜே.வி.பியின் செல்வாக்கைத் தத்தமது அரசியல் இலாபங்களுக்காக ஏற்றுக்கொள்ளவும் அல்லது இயலுமானவரை எதிர்க்காமல் நகர்வதற்குமே விரும்புகிறவர்கள். மஹிந்த ராஜபக்ஷ, அனுராபண்டாரநாயக்கா முதலிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் கூறும் கருத்துக்களைப் பெரும்பாலும் ஏனைய சுதந்திரக்கட்சியின் இளம் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிர அங்கத்தவர்கள் நாட்டின் ஆட்சித் துறையில் தமது கட்சியின் செல்வாக்கை திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா ஊடாக - அவரது நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியினூடாக நிலைநாட்டப் போகிறார்கள்.



## ஆட்சித் துறையைச் சிதைக்கும் கட்சி அரசியல்

இதன் மூலம் தெளிவாகவே நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியும் அவரது ஆதரவாளர்களாகவுள்ள தீவிர சுதந்திரக்கட்சி உறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு புறமும் அனுரா, மஹிந்த ஆகியோரும் ஏனைய அவர்களது சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுபுறமும் என நாட்டின் ஆட்சித்துறை தெளிவாக இரண்டுபட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி.ஆகியனவற்றின் கூட்டு அணியின் தலைவர் பதவியை ஜனாதிபதி உதறித் தள்ளியதுடன் இந்த இரண்டுபட்ட நிலைமை மேலும் தெளிவாகத் தெரிகிறது.

## சுதந்திரக்கட்சியின் தேய்மானவீதம் அதிகரிக்கும்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்படுபவர் கூட ஜே.வி.பியின் முற்று முழுதான செல்வாக்குக்குட்பட்டவராகவே இருக்கவேண்டிவரும். இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடரப்போகின்ற இனிவரும் அடுத்த காலகட்டம் ஜே.வி.பிக்கு முன்னரைக் காட்டிலும் சாதகமானதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அரசியல் தேய்மானம் மேலும் விரைவுபட அதில் தனது வளர்ச்சிக்கான முதலீட்டை ஜே.வி.பி தீவிரப்படுத்த வழிவகுக்கும். அனுராபண்டாரநாயக்காவும், மஹிந்த ராஜபக்ஷவும் தத்தமது அரசியல் நோக்கங்களுக்காக ஜே.வி.பியை எதிர்க்கத் திராணியற்று 'சும்மா' இருப்பார்கள் என்பது அன்றைய நிகழ்ச்சிகள் மூலம் தெரிகின்றது.

## அமளிதுமளிபடப்போகும் அமைச்சரவைக் கூட்டங்கள்

மக்களின் வாழ்வு ஆதாரங்களுடன் உடனடியாகவும் நேரடியாகவும் தொடர்புடைய அமைச்சுக்களைத் தம் வசம் வைத்திருக்கும் ஜே.வி.பி. அமைச்சர்கள், தாங்கள் விவசாயத் தொழிலாளர்கள், கடற்றொழிலாளர்கள் ஆகிய அடிநிலைப் பொருளாதார நிலையில் உள்ள மக்களுக்காகத் திட்டங்களை முன்வைப்பதாகவும், செயற்படுவதாகவும் நிரூபிக்கத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் ஜே.வி.பி அமைச்சர்கள் பங்கேற்கும் அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி தலைமை தாங்கி வருகிறார். அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி ,தலைமை தாங்குவது தற்போதைய அரசமைப்பு அவருக்கு வழங்கும் அதிகாரம் ஆகும். எனினும், அமைச்சரவைக் கூட்டுப்பொறுப்பு என்ற விடயத்தில் ஜே.வி.பி. தான் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள மக்களின் நலன்கள் சார்ந்து நிற்பதாகவும், செயற்படுவதாகவும் வலியுறுத்தி வாதாட முற்படும்போது - அதனால் எழக்கூடிய அரசியல் நலன்கள் ஜே.வி.பியின் வளர்ச்சிக்கே உதவும். அமைச்சரவைத் தீர்மானங்கள் இழுபறிக்குள்ளாகக்கூடிய சூழ்நிலையும் இனிமேல் எழலாம். ஏனெனில், ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவராக இருந்தபோது அவரை ஜே.வி.பி.யின் முக்கிய தலைவர்களான ரில்வின்சில்வா, விமல்வீரவன்ஸ, போன்றோர் அடிக்கடி சந்தித்து வாதப் பிரதி

- டன்ஸ்ரன் லூயிஸ் -

வாதங்களில் ஈடுபட்டுத் தமக்குச் சாதகமாக ஜனாதிபதியைத் திசைப்படுத்த முடிந்தது. ஆனால், அமைச்சரவை அங்கத்தவர்கள் அல்லாத சில்வாவும், விமல் வீரவன்ஸவும் இனிமேல் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு விசேடமாக உரிய முறையில் தமது சந்திப்புக்கான விண்ணப்பத்தை அறிவித்துக் காத்திருக்கவேண்டியிருக்கும். அதிக வேலைப்பளு காரணமாகத் தனது பிரமுகர் சந்திப்புக்களில் பல மணித்தியாலங்கள் தாமதநிலைமையைச் சாதாரணமாகவே கொண்டுள்ள ஜனாதிபதி சிக்கலான பிரமுகர்களைச் சந்திப்பதில் இயல்பாகவே தாமதப்படுவார் என்பதும் உண்மையாகும். இதனால் ஜே.வி.பி.தலைவர்கள் ஜனாதிபதியை அடிக்கடிச் சந்திக்க முடியாமற்போகும். அவர்களுக்கு ஏமாற்றங்களும் விரக்தியும் விஞ்சும். இந்நிலையில் கடந்த பல மாதங்களாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கூட்டங்களில் தாம் பிரஸ்தாபித்த விடயங்களில் ஒரு பகுதியைத்தானும் ஜே.வி.பி. தலைவர்கள் ஜே.வி.பி. அமைச்சர்கள் மூலமாக பொருத்தமான வகையில் அமைச்சரவைக் கூட்டங்களில் அரங்கேற்றுவர். இதனால் அமைச்சரவை முடிவுகளில் இழுபறிகள் தோன்றலாம். அமளிதுமளிகள் எழும்.ஏற்கனவே சாதாரண பெரும்பான்மைகூட இல்லாத நாடாளுமன்றம் தனது சட்டவாக்க அதிகாரம் தொடர்பாகச் செயற்பட முடியாத நிலையில் அமைச்சரவைத் தீர்மானங்களும் இழுபறி நிலைமைக்கு உட்படும் நிலைதோன்றினால் ஆட்சித்துறையின் மூன்று முக்கிய பிரிவுகளில் இருபிரிவுக்கான சட்டவாக்கமும், நிறைவேற்று நிர்வாகமும் ஆகிய இரண்டும் பாதிக்கப்படும் நிலைமை எழலாம். இது ஜனாதிபதிக்குத் தொடர்ந்தும் தலையிடியாகவே இருக்கும்.

## துயரமான விநோதங்களை சர்வதேசம் புரியுமா?

இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி பேச்சுக்களை முன்னெடுப்பது தோன்றியுள்ள புதிய சிக்கலான அரசியல் கொந்தளிப்புக்குள் அரிதான சாத்தியப்பாடுகள் கொண்டவிடயமாகவே இருக்கும். ரணில் அரசு ஆட்சியில் இருந்தபோது விடுதலைப் புலிகளுடன் அவர் மேற்கொண்டிருந்த சமாதானப்பேச்சுகளுக்கு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியும் அவரது நிறைவேற்று அதிகாரமும் இடைஞ்சலாக இருந்தன. சமாதான முயற்சிகளின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் இலாபங்களை அடைவதைத் தடுப்பதே அக்காலகட்டத்தில் நிகழ்ந்தது. தற்பொழுது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி சர்வதேச ரீதியான பொருளாதார உதவிகளைக் கருத்திற்கொண்டு - சர்வதேச நிர்ப்பந்த சூழல் காரணமாக - விடுதலைப் புலிகளுடன் பேசப் போவதாக அறிவித்த வேளைகளிலெல்லாம் நாடாளுமன்ற சட்டவாக்க சபையைப் பொறித்து வீழ்த்தி விடப்போவதாக ஜே.வி.பி. மிரட்டுகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ் என்பனவற்றின் தயவை நாடும் போக்கு ஜனாதிபதிக்கு உதவக்கூடும். இலங்கையின் ஆட்சித்துறையில் நீதித்துறை நேரடியாகவும் மறைமுகமாகவும் சிறுபான்மையினங்களின் உரிமைகள் தொடர்பில் சாதித்தவை என்ன என்பது அனைவரும் விளங்கிவைத்திருக்கும் விடயம். ஆனால், இப்பொழுது மற்றைய இரு துறைகளான நிறைவேற்று நிர்வாக அதிகாரம்கொண்ட ஜனாதிபதியும், சட்டவாக்கசபையான நாடாளுமன்றமும் எதிரும் புதிருமாக நின்று இலங்கையின் சமாதானத்தை நல்லடக்கம் செய்யத் தொடங்கியுள்ளன. இந்தத் துயரமான விநோத சூழலைச் சர்வதேசம் புரிந்துகொண்டுவிட்டதா? ✪

22 AUG 2004

எனது பழைய நண்பர் ஒருவரைப் பல வருடங்களின் பின்னர் சந்திக்கும் வாய்ப்பு அண்மையில் கிட்டியது. அன்றைய நாள்களில இருவரும் சேர்ந்து எத்தனை தடவைகள் வீட்டுக்குத் தெரியாமல் படம் பார்க்க என்று சென்றிருப்போம். கோயில் திருவிழாக்கள், பாடசாலைக் கொண்டாட்ட நாள்கள் எமக்குச் சினிமாத் தியேட்டரில்த்தான். அன்றைய பல பால்ய விவகாரங்களைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருந்தோம். நண்பர் 75ஆம் ஆண்டிலேயே வெளிநாடு சென்று பின் நாட்டின்நிலை காரணமாகப் பல ஊர்களிலும் வாசம் செய்து விட்டு வந்தவராதலால் அவரே பலவிடயங்களையும் கூறிக்கொண்டி ருந்தார். மீண்டும் பேச்சு பழைய காலத்திற்குப் போனது. ஆனால் சினிமா பக்கம் அவர் திரும்பவேயில்லை. எனக்கு இப்பவும் சினிமா ஆசை சிறிது உண்டு. எனவே நானே அத்திசையில் முதலில் பேசினேன். ஆனால் அவர் அதிக நாட்டம் காட்டவில்லை. முன்பு அவரே சினிமா என்றதும் முன்நிற்பார்.

சிலரே பின்னணிக்குரல் கொடுத்துப் பேசுவதால், வேறு வேறு நடிகர் நடிகைகள் நடித்தாலும் கேட்ட குரல்களையே மீண்டும் மீண்டும் ஒரே இயல்பான நடையுடன் கேட்டுக்கேட்டு அலுத்துப் போய் விடுகிறது. இளைஞர்களைச் சீரழிப்பதே இன்றைய சினிமாவாக அவர் கருதுகிறார்.

### கதாநாயகி என்றால் கவர்ச்சிதான்

காட்டப்படும் வன்முறைகளான காட்சிகளையும் பெண்களின் ஆபாசமான நடிப்பினையும் பார்க்கும்போது சட்டம் நீதி உள்ளதா, கலாசாரம் உள்ளதா எனச்சிந்திக்க வேண்டியுள்ளது. சண்டைக் காட்சிகளில் இரத்தவெறி புலப்படுகிறதே தவிர வீரம் புறக்கணிக்கப்படுகிறது. காதலைக்தவிர வேறு எதுவும் உலகில் இல்லை என்பது போலவே எல்லாச் சினிமாப்படமும் சித்தரிக்கப் படுகிறது. சிலபடங்களில் கதாநாயகி என்பவர் கவர்ச்சிக்காக மட்டுமே புகுத்தப்படுகிறார். உடுப்புகள் கேட்கவே வேண்டாம்.

படுத்துதல் என்பது மிகவும் மன எழுச்சியான விடயம்தான். 'காதலிக்கிறேன்' என்று சொல்லக் கூச்சப்படுதல் நடைமுறையில் உண்டுதான். ஆனால், இன்று முழுக்க முழுக்கக் காதலை மையமாகக் கொண்டே அநேகமான படங்கள் வெளிவருகின்றன. பெற்றோருடைய எதிர்ப்பினை நேராகவே சந்திப்பது போல அமையும் படங்களில் அச்சொல்லைப் பாவிப்பதால் எதுவும் வந்துவிடப் போவதில்லை. காதலை வெளிப்படுத்துவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆனால் இன்றைய இந்திய தமிழ்ச்(?) சினிமாவில் 'ஐ லவ் யூ' என்றுதான் சொல்ல வேண்டும். ஆங்கிலமென்றால் என்ன என்றே தெரியாத பாத்திரங்களானாலுஞ்சரி அப்படித்தான் சொல்லி உறுதிப்படுத்த வேண்டும். நன்றாக வேற்று மொழி தெரிந்தவர்களானாலும் உணர்ச்சி வசமான வேளைகளில் தமது தாய்மொழியிலேயே உரையாடுவார்கள். எதாவதொரு விடயத்தில் நியாயம் இல்லாதவிடத்து ஆனால், ஆங்கில அறிவு

# மக்களை முட்டாள்களாக்கும்






பல வற் புறுத்தல்களின் பின்பே நான் சம்மதித் துப் போவேன். படம் பார்க்க ஆசை தான். ஆனால், கள்ளத்தனமாகப் போவது மனப்பயம். இறுதியாக நான் கேட்டேன் இப்பவெல்லாம் சினிமாவில் ஆர்வமில்லையோ என்று. அதற்கு அவர் கூறிய கருத்துக்கள் ஒரு விமர்சனம் போல இருந்தது. அதன் அடிப்படைதான் இக்கட்டுரை.

### சினிமாவில் இயற்கைத்தன்மை

அன்றைய சினிமாவில் இயற்கைத் தன்மை இருந்தது. நடிப்பவர்கள் தாமே பேசித் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். சண்டைக்காட்சிகளில் கூட அவர்கள் ஓரளவு இயற்கையாகவும் பழக்கப்பட்டும் இருந்தார்கள். வாயசைப்பில் சரியாக இருக்கவேண்டும் என்பதற்காகப் பாடல்களை அவர்கள் மனப்பாடம் செய்யவேண்டியிருந்தது. தாமே பேசி நடிப்பதால் முகத்தில் வேண்டிய பாவம் தானாகவே வந்து விடும். இசையமைப்பும் தெளிவாக இருக்கும். குரலின் தன்மைக்கேற்ப ஒலியளவு இருக்கும். எத்தனையோ முக்கியமில்லாத கட்டங்களைக்கூட 'குளோசப்'பில் காட்டுவார்கள். அன்றைய நடிகர், நடிகைகள் நடிப்பில் திறமைகாண்பிக்க வேண்டுமென்ற ஒரு நோக்கிலேயே செயற்பட்டார்கள். போட்டி இருந்ததுதான். ஆனால்,

ஆண் நடிகர்கள் 'அண்டவெயருடன் (அரைக்காற்சட்டை அளவில் இருந்தாலுங்கூட) காட்டும்போது அது பெரிய ஆபாசமாக அங்கே சித்தரிக்கப்படும்போது பெண்நடிகைகள் அரைகுறை ஆடையுடன் காட்டப்படுவதை அனுமதிக்கிறது.

பேசப்படும் வசனங்கள் பொருத்தமற்றவையாகவும் இருக்கின்றன. உதாரணமாக குங்குமப் பொட்டின் பெருமையைச் சொல்லும் கதாநாயகியின் நெற்றியில் பொட்டே இருக்காது. சேலை கட்டுவதைப் பற்றி சொல்வார்கள் ஆனால், ஒரு கட்டத்திலாவது சேலைகட்டிய காட்சி வந்திருக்காது. ஒரு படத்தில் போட்டியில் சவால் விடும் கதாநாயகன் வெற்றியடையும் பட்சத்தில் கதாநாயகியைப் பிறந்தமேனியுடன் காட்சிதரவேண்டும் என நிபந்தனை விதிக்கிறான், கதாநாயகியும் அதை ஏற்றுக்கொள்கிறாள். இங்கு ஆண்மை என்பதற்கான அர்த்தம் தவறாக்கப்படும் அதேசமயம், ஒழுக்கமுடைய பெண்கள் கேட்டுச் சகிக்க முடியாத வசனம் அமைக்கப்படுகிறது. சேலை உரிவது என்பது சர்வசாதாரணமாகி விட்டது. எத்தனையோ படங்களில் இக்காட்சிகள் அன்று பேச்சில் கூட இருப்பதில்லை. ஆணும் பெண்ணும் தொட்டுத் தோளில் கைபோட்டபடி பேசி நடிப்பது நடைமுறையாகிவிட்டது. நடைமுறையில் நினைத்துப் பார்க்க முடியாத காட்சிகள் தாராளமாகக் காட்டப்படுகிறது. இரட்டை அர்த்தம் வரப் பேசுவது என்பது தற்போது விரசத்தினை அடிப்படையாக வைத்தே எழுதப்படுகிறது.

இதுபற்றிப் பலரும் எழுதியும் பேசியும் நிலைமை மோசமாகிறதே.

### 'மெகா சீரிஸ்' நாடகங்கள்

சரி சினிமா போகிறது என்றால் அடுத்துச் சீரழிப்பது இப்பொழுது நடைபெறும் 'மெகா சீரிஸ்' நாடகங்கள். இவற்றில் அறிவை வளர்ப்பதற்கு என்ன இருக்கிறதோ தெரியவில்லை. சினிமாவில் ஓரங்கட்டப்பட்ட, அல்லது தமது எண்ணங்களை நிறைவேற்ற முடியாதவர்கள் இங்கு நுழைந்து அதேசரக்குகளை பெயரைமாற்றி மக்கள் தலையில் கட்டிவிடுகிறார்கள். பார்ப்பதற்கு

படைத்திருப்பின் எதிராளியை மடக்குவதற்கு அல்லது மழுப்பிச் சமாளிப்பதற்கே அம்மொழியை உபயோகிப்பது நாம் கண்ட ஒன்று.

முக்கிய விடயத்தில் புரியாதமொழியைப் பாவிப்பது மற்றவரை ஏமாற்றவே, என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். சினிமாவைப் பின்பற்றி இப்போது சின்னத்திரையும் அவ்வாறே வந்து விட்டது.

சினிமாதான் இப்படி என்றால் சின்னத்திரை மக்களை முட்டாளாக்குகிறது. எல்லாச் சின்னத்திரை நாடகங்களும் ஏதோ ஒரு வகையில் ஒரே கதைகளைத்தான் சொல்கின்றன. ஒரு வித்தியாசம் இடம் காலம் மாறிவருவது மட்டுமே. உதாரணமாக 'சிறிசுகள் முதல் பெரிசுகள் வரை' அனைவரின் நாவிலும் நடனமாடிய நடிகை ஒருவரை முதன்மைப்படுத்தி ஒரு நாடகம் சிலகாலத்திற்கு முன் இங்கு சக்கை போடுபோட்டது. அந்நாடகத்தில் வந்த பாத்திரங்களில் 90 வீதமானவை நல்ல குணமுள்ள பாத்திரங்களல்ல. ஒவ்வொருவருக்குப் பின்னாலும் ஏதோஒரு தரமற்ற வாழ்க்கை இருந்துள்ளது. மேலும் வலுவற்ற காரணங்களுக்காகக் கதை நீடிக்கப்பட்டுள்ளது. ஊரிலேயே செல்வாக்கு மிக்க ஒருவரை எதிர்க்கக்கூடிய துணிவும் திறமையும் உள்ளவராகக் காட்டப்படும் கதாநாயகியின் சொந்த வாழ்க்கையில் அவரது நிலையை காத்திரமற்றதாகக் காட்டப்படுவது, பொய்யான காரணங்களுக்காகப் பயந்திருப்பது போல் காட்டப்படுவது ஆகியவை ஏற்கக்கூடியதாக அமையாது. அவர் பிள்ளைப்பேற்றைப் பெறாதவர் என்பது ஒரு எளிய வைத்திய பரிசோதனை மூலம் நிலைநாட்டி இருக்க முடியும். இந்நிலையிலேயே கதை முடிந்திருக்கும். ஆனால் பார்ப்பதற்குச் 'சோணகிரிகள்' இருக்கும் போது இன்னும் வருடக்கணக்கிலும் இழுத்திருக்கலாம். இந்நாடகங்களை எழுதுபவர்களும் ஏனோ தானோ என்று எழுதிவிட எம்மவரும் பார்த்துக்கொண்டே காலத்தை விரயமாக்குகிறார்கள்.

### சினிமாவை மட்டும் அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகள்

நமது நாட்டைப் பொறுத்தமட்டில் கல்வி ஓரளவிற்கு அனைவருக்கும் கிடைக்கிறது. அண்மைக் காலங்களில் சிறிது பின்னடைவு இருப்பினும் நடுத்தர வயதினர் அதற்கு மேற்பட்டோர் அநேகமாக நல்ல அனுபவமும் அறிவும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். பெண்களும் அறிவுடையவர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் நாட்டின் நிலை இங்கில்லை. எனவே, இவைபற்றிச் சிந்திக்க வேண்டும். இங்குள்ள தமிழ் ஊடகங்கள், முக்கியமாகத் தமிழ் வானொலி, தொலைக்காட் சிகள் தமது நடைமுறைகளை மாற்றி நம்நாட்டுத் தயாரிப்புக்களுக்கு இடமளிக்கவேண்டும். தற்பொழுது அவைகள் வழங்கும் நிகழ்ச்சிகள் யாவும் ஏதோ ஒரு வகையில் சினிமா என்ற ஒன்றை அடித்தளமாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. எவ்வளவோ விடயங்கள் உண்டு. எமக்கு எவ்வகையிலும் பொருந் தாத எமது நாடு, பண்பாடு ஆகியவற்றிற்கு ஒவ்வாத விடயங்களை இறக்குமதி செய்து எமது தலையில் கட்டுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம். இதனால் நாட்டின் பொருளாதாரம் பயன்பாட்டிற்கு உகந்ததாக்கப்படும். அங்கு அவர்கள் தமது நாட்டிற்கு ஏற்புடையதான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகிறார்கள். சினிமாவையே எடுத்துக்கொண்டாலும் தற்பொழுது தமிழ் உபயோகம் குறைக்கப்பட்டு வேற்று மொழிகள் அதிலும் குறிப்பாக ஹிந்தி மொழி புகுத்தப்படுகிறது. இது அந்த நாட்டிற்குச் சரியானதாக இருக்கலாம் ஆனால், அவற்றால் எமக்கு எதுவித பலனும் இல்லை. மேலும் இதில் மிகவும் வேடிக்கை எதுவெனில் இங்கு காட்டப்படும் சில படங்களுக்குச் சிங்கள மொழி உப தலைப்புக்கள் கொடுக்கப் படுகின்றன. இதனால் மொழிபெயர்ப்பை நம்பிப்பார்ப்ப வர்களுக்கு கிடைக்கும் முழுமையான விளக்கம் தமிழ் ஒளிபரப்

(III பக்கம் பார்க்க)

# சின்னத்திரையும் சினிமாவும்

பொறாமை, பழி வாங்கும் உணர்ச்சி குறைவாக இருந்தது. நடிகர் நடிகைகளுக்கு ஒரு மதிப்பு ஏற்படக் காரணமாக இருந்தார்கள். 'கிசு கிசு' என்பது ஒரு பெரிய விடயமாக இருந்தது. ஒரு சில பேர்களைத்தவிர அநேகமானவர்கள் அதை விரும்புவதுமில்லை. காட்சிகள் இயற்கையாக இருக்கும். படத்திற்குப் படம், ஒரே நடிகர்களானாலும் புதுப்புது உத்திகளைக் கையாளுவார்கள். நவரசங்களுக்கும் எற்ற நடிகர்களையே இயன்ற வரை தெரிவு செய்வார்கள். உதாரணமாக நகைச்சுவை நடிகர்களான தங்கவேலு, நாகேஷ் போன்றவர்கள் வில்லத்தனமானது உட்பட, எப்படிப்பட்ட, பாத்திரங்களையும் ஏற்று நடிக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

நான் குறுக்கிட்டு, இது எல்லாம் சரிதான்: ஆனால், காலத்திற்கேற்ப வளர்ச்சி இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றேன். அவர் சொன்னார் அதுசரிதான். ஆனால், அது தொழில் நுட்பத்திலேதான் தவிர நடிகர்களிடம் இல்லை என்று.

தொடர்ந்து அவர், இன்றைய நடிகர்களின் ஒரே குறிக்கோள் 'எப்படியாவது' நிலைத்து விட வேண்டும் என்பதுதான். சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் குறுக்குவழியில் சென்று அதை அடையமுற்படுகிறார்கள். ஆண் நடிகர்களைப் பொறுத்தமட்டில் இத்தன்மைகள் சிறிது குறைவுதான் என்றாலும் முதல் படத்தில் இடம் கிடைத்தவுடனேயே முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளத் தொடங்கிவிடுவார்கள். தாம் ஏதோ பெரிய 'ஹீரோ' என்ற நினைப்பு வந்துவிடுகிறது. பெண் நடிகைகள் எவ்வளவு தூரம் மேனியைக் காட்டமுடியுமோ என்ற போட்டியிலும், தம்மைவிட்ட ரதிகள் இல்லை என்பது போலவும் நடக்கத்தலைப்பட்டு விடுகிறார்கள். திரைக்கு ஏற்ற முகவெட்டு இருக்கவேண்டிய அவசியம் பார்க்கப் படுவதில்லை. அவர்களின் முகபாவம் கவனிக்கப்படுவதில்லை. திரையில் அவர்கள் எப்பாத்திரத்தில் தோன்றியபோதும் அவர்களின் முகத்தில் ஒருவிதமான 'கர்வ'பாவமே பின்னணியில் தெரிகிறது. இயற்கை வெளிப்பாடு கிஞ்சித்தும் இல்லை.

பேச்சைப் பொறுத்தமட்டில் அது கேட்கவே வேண்டாம். மொழி தெரியாதவர்களைப் போட்டு அவர்கள் ஏனோதானோ என்று வாயசைக்கும்போது பார்க்கச் சகிக்க முடிவதில்லை. பேசி நடிப்பவர்கள் கூட நடித்தபின் 'டப்பிங்' முறையில் பேச்சுப் பதியப்படுவதால் பேச்சில் கட்டத்துக்குரிய நெழிவுசுழிவு, ஏற்ற இறக்கம், உணர்ச்சிவெளிப்பாடு ஆகியவை சரியாக அமைவதில்லை. மேலும் தொழில் வளர்ச்சி என்று கண்ட கண்ட ஒவ்வாத இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதால் பேசுபவரின் ஒலிக்கு மேலாகக் கர்ணகடூரமாக ஒலிக்கின்றது. இது ரசிக்க முடியாமால் இருப்பதோடு உடல் நலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறந்து விடுகிறார்கள். அத்துடன் குறிப்பிட்ட

ஏமாளிகள் இருக்கும் வரை இதுவும் இருக்கத்தான் போகிறது. மேலும் இந்நாடகங்களால் தமக்குத் தேவையான பணிகளைக் கைவிட்டு வீணே நேரம்போக்கி உடல்நலமும் மனநலமும் கெட்டு அலைவதுதான் மிச்சம். போடப்படும் நாடகங்களில் மிகவும் படித்தவர்களாகக் காட்டப்படும் பாத்திரங்கள் சிலவேளைகளில் பாமரர்களிலும் குறைந்த விவரமுள்ளவர்களாகி விடுவர். சில கட்டங்களில் உரையாடல் மௌனமாக்கப்பட்டுவிடும். அது ஏற்ற வசனங்கள் கிடைக்காமையே முக்கிய காரணமென்றாலும், 'சஸ்பென்ஸ்' என்று பெயர் சூட்டிவிடுவர். பின் தருணத்திற்கேற்ப கதையை மாற்றிவிடலாம். ஆனால், அநேக இடங்களில் அவைபற்றிப் பின்னர் எதுவுமே வருவதில்லை.

முழுக்க முழுக்க வியாபாரமாகிவிட்ட, இதனால் நைந்து போயிருக்கும் எமது நாட்டவர்க்கு என்ன நன்மை என யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இன்றைய இளைஞர்கள் இவை மத்தியிலே வளர்வதாலேயே அவர்களும் வளர்ச்சி குன்றிப்போய் இருக்கின்றனர். பல்கலைக்கழகங்களில் 'ராகிங்' மோசமடைந்ததற்கு இதுவும் ஒரு காரணி என்றால் அதில் மறுப்பதற்கு இடமில்லை.

கேவலம் பக்திப்பாடல்களுக்குக்கூட சினிமாக்களில் வரும் விரசம் கலந்த அல்லது அம்மாதிரியான பாவம் கலந்த சொற்கள் கொண்ட இறக்குமதிக் குப்பைகள் வேண்டும். ஒலிநாடாவில் பதியப்பட்ட அப்பாடல்களை வாங்கிக் காது கிழிய ஒலிக்க வைத்து அனைவரையும் அவஸ்தைக்கு உட்படுத்துவதால் என்ன பலன்? உண்மையில் வணக்கத்திற்காகப் பாடப்பட்டவையல்ல அவைகள். வியாபார நோக்கில் அப்பாடல்கள் வருகின்றன. எம்மவரும் எதனையும் யோசிக்காமல் போட்டுவிடுகிறார்கள். எமது பிள்ளைகள் உறவினர் தெரிந்தவர் என்று எத்தனையோ பேர் நல்ல இனிமையான குரல் வளத்துடனும் பக்தி உணர்வைத் தட்டிஎழுப்பக் கூடியதான இயல்பினை வெளிக்கொணர்ந்தும் பாடக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஊக்கப்படுத்தி எம்மை வளர்த்துக் கொள்வதோடு தேவையற்ற செலவீனங்களையும் தவிர்க்கலாம்.

சினிமாவில் பேசப்படும் வசனங்கள் மிகவும் கொடூரமானவையாக, அர்த்தமற்றவையாக, ஆபாசமானவையாக, அமையக் கூடியவையாகவே பெரும்பாலும் எழுதப்படுகின்றன. கற்பனையில் நினைத்தும் பார்க்க முடியாதபடி காட்சிகள் அமைவது இயற்கையாக இரசிக்கமுடிகிறதா? 'மெரட்டுறாயா?' 'செருப்பு பிஞ்சிடும்' 'இழுத்து வைச்சு அறுத்துடுவேன்' 'கழுத்திலை தலை இருக்காது' போன்ற வசனங்கள் சர்வசாதாரணம். காதலை வெளிப






# ஒரு பெரும் விவகாரமாக மாறிவரும் நாய்க்கடி

நாட்டில் சமாதான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் ஆங்காங்கே பல பகுதிகளிலும் இடம்பெறுகின்ற கொலை, வீதி விபத்து, கொள்ளைச் சம்பவங்களுடன் இணைத்துப் பேசத்தக்க வகையில் இதுவும் ஒன்றோ என்று அஞ்சத்தக்க வகையில் நாய்கடித் தொல்லை யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வருகிறது.

யாழ் குடாநாட்டில் தற்போது நாய்க்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது, குறிப்பாக யாழ் நகரப் பகுதிகளில் தினமும் 25 பேருக்கு மேல் நாய்க்கடிக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இது அண்மையில் வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்த செய்தி.

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாலும், வீதிவிபத்து, கொலை முயற்சி போன்றவற்றால் காயமடைந்தும் வார்ட்டுக்களை நிரப்புபவர்களின் தொகையுடன் போட்டிபோடும் வகையில் நாய்க்கடிக்கு இலக்கானவர்களின் தொகை அதிகரித்தபடி இருக்கின்றது. என்பதை இத்தகைய செய்திகளில் இருந்து அறிய முடிகின்றது.

இத்தகைய நாய்க்கடிக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பானது வைத்தியசாலை வட்டாரத்தில் இட நெருக்கடியை ஏற்படுத்துவதுடன், நாய்க்கடிக்குரிய தடுப்பு மருந்து வகைகளிலும் பற்றாக்குறையை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

'நாய்க்கடிக்குரிய தடுப்பு மருந்து போதிய அளவு உண்டு' என வைத்திய வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படும் அதேவேளை, அதற்கு அடுத்த ஓரிரு தினங்களில் மேற்படி மருந்து தீர்ந்துவிட்டது என்ற வகையில் செய்திகள் வெளியாகின்றன. இதற்கெல்லாம் நாய்க்கடிக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பே காரணம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**- சாம்பவி -**

இதேவேளை இதற்குக் காரணமாகின்ற கட்டாக்காலி நாய்கள் பெருகுவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படாமையையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்தும், மற்றும் பொதுமக்களிடம் இருந்தும் இது தொடர்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

வீட்டு நாய் கடித்தால் உரிய வைத்தியம் செய்து அச்சம் தவிர்த்து மன நிம்மதியுடன் இருக்க முடியும். ஆனால், தெரு நாய் கடித்தால் அது நீர் வெறுப்பு நோயற்ற நாயா? அல்லது நீர் வெறுப்பு நோயுள்ள நாயா? எனப் பயந்து பதற்றமடைந்து உள ரீதியாகவும் பின் பல இடையூறுகளால் உரிய சிகிச்சை பெற முடியாது உடல் ரீதியாகவும் பலவீனமடைந்து மரணத்தை எட்டவேண்டிய நிலைக்கு ஆளாக வேண்டியுள்ளது.

இது ஒரு புறமிருக்க, யாழ்.குடாநாட்டில் நாய்க்கடிக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை குறிப்பாகக் குருநகர் தொடர்மாடி இராணுவ முகாமிற்கு அண்மையிலும் உடுவில் மான்ஸ் வீதி, சீநோர், கெற்போலி மிருசுவில் போன்ற பகுதிகளிலும் மற்றும் பல பகுதிகளிலுமே அதிகரித்துக் காணப்படுவதாக அறிவதன் மூலம் இப்பகுதிகளிலேயே கட்டாக்காலி நாய்களும் அதிகரித்துள்ளன என்று கருதவேண்டி உள்ளது. இதற்கு மேலும் சான்று பகரும் வகையில், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பலாலி படைத்தலைமையகத் தளபதிக்கு இது விடயமாக அனுப்பி வைத்துள்ள கடிதம் அமைந்துள்ளது.



படை முகாம்களிலும், சோதனைச் சாவடிகளிலும் கழிவாக வீசப்படும் உணவுக்காக அப்பகுதியில் தங்கியுள்ள ஏராளமான கட்டாக்காலி நாய்கள் பொதுமக்களைக் கடித்துக் காயப்படுத்துவதுடன் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் செல்வோரை விரட்டியும் செல்கின்றன. இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும் ~

## கட்டாக்காலி நாய்கள் சில இடங்களில் கட்டுப்பாடின்றிப் பெருகுவது எதனால்?

கட்டாக்காலி நாய்கள் இராணுவ முகாம்களுக்குள்ளும், சோதனை நிலையங்களுக்குள்ளும் தஞ்சமடைவதால் அவற்றைப் பிடித்து அழிப்பதில் உள்ளூராட்சிச் சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் ~

மக்கள் நலன் கருதி முகாம்களில் கட்டாக்காலி நாய்களாக அலையும் நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அவதானிக்கும் போது கட்டாக்காலி நாய்கள் குறிப்பாக ஒரு சில பகுதிகளிலேயே சுற்றித் திரிவதனையும், அவற்றை அழிப்பதில் உள்ள நெருக்கடிகளையும், அதனால் பொது மக்கள், வைத்தியசாலை வட்டாரங்கள் எதிர்நோக்கி வருகின்ற சவால்களையும், அவற்றுக்கான பின்னணியையும் பரவலாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு, வெறும் வார்த்தை ஜாலங்களுடன் மட்டும் நின்று விடாது பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் உயிரிழப்புக்களையும், அதன் மூலம் வைத்தியசாலைகளில் ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்; எடுப்பார்களா? என்பதே வைத்தியசாலை வட்டாரங்களிலும், பொது மக்கள் மத்தியிலும் தற்போது எழுந்துள்ள கேள்வியாகும். ✪

## மக்களை முட்டாள்களாக்கும்...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

பில்கூடத் தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்படுவதை யார் கவனிக்கிறார்கள். அந்த நாட்டின் சட்டம், நீதி, வாழ்க்கை முறைகள் வேறு, எமது நாட்டு முறைகள் வேறு. எனினும் எமது நாட்டின் தரமான படைப்பாளிகள் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்க முன்வரும் காலம்வரை சில பொதுவான விடயங்களை எடுத்து ஒலி, ஒளி பரப்புச் செய்யலாம். உதாரணமாக வைத்தியம், சமயம், இலக்கியம், விஞ்ஞானம், மொழிவழக்கு போன்ற பொதுவான விடயங்களில் கவனம் செலுத்தலாமே!.

இதனால் எமது சமுதாயத்தினை ஆரோக்கியமான நிலை தவறாதவாறு பாதுகாத்துக் கொள்ளலாம். சினிமாதான் உலகம் என்ற மாயையிலிருந்து விடுபட்டு, அவற்றைப் பார்த்துப் பின்பற்றும் கொள்கைகளைக் கைவிட்டு அது ஒரு பொழுதுபோக்கு அம்சமாகக் கருதி எம்மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும்.

ஆம், எமது முன்னேற்றத்தை எட்ட வேண்டுமானால் பொழுதுபோக்கவும் அளவாகவே நேரத்தைச் செலவழிக்க வேண்டும். காலம் போனால் திரும்பாது, பருவத்தே பயிர் செய்.

**- ரசிகன்.**

## பாண்டியன் [நாவலர்] நெடுஞ்செழியன்

**ஒரு** காலத்திலே கண்ணகி பாத்திரமேற்று நடித்துப் புகழ் பெற்றவர் பழம்பெரும் நடிகை பி.கண்ணாம்பா என்றதும் கண்ணகியையே நினைத்துக் கொள்வார்கள் இப்படி மேலும் பல நடிக நடிகைகள் அவர்கள் ஏற்று நடித்த பாத்திரங்களாகவே மாறியிருக்கிறார்கள்.

எஸ்.எஸ்.இராசேந்திரன் இலட்சிய நடிகர் என அழைக்கப்பட்டவர். அவரது மனைவி விஜயகுமாரியும் சேர்த்து இலட்சிய நடிக தம்பதியினர் என இவர்கள் அழைக்கப்பட்டனர்.


கலைஞர் மு.கருணாநிதி திரைக்கதை வசனம் எழுதிய 'பூம்புகார்' படத்திலே இவர்களே கோவலன்-கண்ணகி. விஜயகுமாரி என்றதும் கண்ணகியை நினைவு கொள்ளும் அளவுக்கு அவர் அப்படத்தின் மூலம் புகழ் பெற்றவர். அப்படம் வெளிவந்த காலத்திலே கசிந்த சில சங்கதிகளும் நினைவுக்கு வருகின்றன.

காப்பியத்திலே சிலம்பு திருடிய கள்வன் பொற்கொல்லனே ! இதனைப் படத்திலே காட்டித் தமது (தேர்தல்) 'வாக்கு' வங்கி பாதிக்கப்படுவதை விரும்பாத கலைஞர் அதனை அரண்மனைக் காவலர்களே செய்ததாகக் கதையிலே தமது 'கை' வண்ணத்தைக் காட்டியிருக்கிறார்.....

படத்தின் விறுவிறுப்புக்கு கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடம் நீதி கேட்டு வழக்காடும் கட்டத்தைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட காட்சியில் விஜயகுமாரி கலைஞரின் கனல் தெறிக்கும் வசனத்தைப் பேசியே கண்ணகியை (தம்மை) மறக்கமுடியாத பாத்திரமாக்கி விட்டார். அக்காலத்திலே கலைஞருக்கும் நாவலர் நெடுஞ்செழியனுக்கும் இடையே கழகத்திற்குள் உட்பூசல் நிலவிய தாகத் தகவல். அதனைக் கலைஞர் மனதிலே வைத்துக்கொண்டே பாண்டியனைச் சாடும் போக்கில் நாவலரையும் 'கவனித்து'க் கொண்டதாக அப்போது 'கதை' அடிபட்டது ....

என்ன இருந்தாலும் 'பூம்புகார்' ஒரு வெற்றிப் படம் தான். கலைஞருக்கு மட்டுமல்ல விஜயகுமாரிக்கும் தான் அதிலே கவுந்தியடிகளாக நடித்த கே.பி.சுந்தராம்பாளுக்கும் பாத்திரப் பொருத்தம் நன்றாக அமைந்துவிட்டது அவர் ஏற்கனவே 'ஔவையார்' படத்தில் நடித்தும் மக்கள் மனதில் ஔவையாராக நிலைத்துவிட்டவர் .

1968 வாக்கிலே 'பூம்புகார்' யாழ்ப்பாணத்திலேயும் வெற்றிகரமாக ஓடியது. அச் சமயமே சென்னையில் நடைபெற்ற இரண்டாம்




உலகத் தமிழ் மாநாடு ஊர்வலம்-தொடக்க விழா விவரணப் படமும் வெளியாகியிருந்தது. கலைஞர் மு.கவின் உரை விளக்கத்துடனான இக் குறும் படமும் 'பூம்புகார்' ஓடிய திரையரங்கிலே தான் இடைவேளையின் போது காண்பிக்கப்பட்டது. கலைஞரின் கவிதை நடைத் தமிழை அவர் வாயாலேயே கேட்பது மட்டுமன்றி பூம்புகாரையும் மீண்டும் மீண்டும் மக்கள் பார்த்தனர் அதிலேயும் கலைஞர் தொடக்கத்திலே தோன்றி முன்னுரை வழங்கியது குறிப்பிடத்தக்கது இப்படியாகத் தானே பூம்புகாரும் கண்ணகியும் (விஜயகுமாரி) மக்கள் மனதிலே நிறைந்து விட்டது.

படத்தின் மூலம் விஜயகுமாரிக்குக் கிடைத்த பெருமையளவுக்கு எஸ்.எஸ்.ஆருக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான் (கோவலன் இரண்டு பெண்டாட்டிக்காரன் என்பது ஒரு காரணமாக இருக்கலாம்) அந்தக் குறையினை ஈடு செய்யும் வகையிலே அவர் பின்னர் ஒரு சாதனை செய்தார். சிலப்பதிகார கதையை கண்ணகி கதை என்ற பெயரில் வில்லுப் பாட்டாக அமைத்தார் அதிலே அவர் பாட்டுடைத் தலைவனாக என்றில்லாமல் தாமே வில்லடித்துக் கதை சொல்பவராகத் தோன்றினார். அந்த வில்லிசையானது தமிழ் நாட்டிலே மட்டுமன்றி தமிழர் வாழும் இடங்களெல்லாம் கலைப் பயணம் செய்தது. அதன்மூலம் எஸ்.எஸ்.ஆரும் சிறந்ததொரு வில்லிசைக் கலைஞராக வலம் வந்தார் யாழ் முற்றவெளி மைதானத்திலே மாபெரும் மக்கள் மத்தியிலே அந் நிகழ்வினைக் கண்டு மகிழும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது அதிலே கூட கண்ணகி என்றால் அது விஜயகுமாரி தான் என்ற கணிப்பு அழுத்தம் பெற்றது.

எஸ்.எஸ்.ஆர் கணீர் என்ற தமது குரலில் கண்ணகி கதையினைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ...கண்ணகி பாண்டியனிடம் நீதி கேட்டு வழக்காடும் கட்டம்.... அச்சமயம் பிரமுகர்கள் வரிசையில் அமர்ந்திருந்த விஜயகுமாரிக்கு எஸ்.எஸ்.ஆர் 'கண்' அடிக்கிறார் அவரும் மேடைக்கு வந்து அவருக்கு அருகே அமர்கிறார் அடுத்து அவருக்கேயுரிய உணர்ச்சி பாவத்துடன் கலைஞரின் கனல் தெறிக்கும் அந்தப் 'பூம்புகார்' வசனங்களைப் பொழிந்து தள்ளுகிறார்.... இரசிகர்களின் அமோகமான பாராட்டுக்களையும் பெறுகிறார்....

இன்னொரு தகவல் ஒரு நவ்ராத்திரி விழாத் தொடக்க நாள் அப்பொழுது கொழும்பிலிருந்து வந்துகொண்டிருந்த தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று அதையொட்டி முன்பக்க முகப்புச் சித்திரமாக அதை வெளியிட்டிருந்தது அது 'சரஸ்வதி' சபதம் திரைப்படத்தில் இடம்பெற்ற ஒரு கண்கொள்ளாக் காட்சி அதனைப் பார்த்தவர்கள்.

கல்விக்கு அரசியான சரஸ்வதி என்றால் அது பத்மினி -

செல்வத்துக்கு அரசியான இலக்குமி என்றால் அது கே.ஆர். விஜயா -

வீரத்துக்கு அரசியான துர்க்கை என்றால் அது சாவித்திரி -

என்றெல்லாம் நினைக்கவும். சிரிக்கவும். சிந்திக்கவும் செய்தனர்.

**சண் அங்கிள்**

## விடிவெள்ளியாய் விழித்தெழு...!

எதற்காக...!
நீ
குறுங்கலாக....
குறுகிய வட்டத்திற்குள்ளேயே...
குற்றால அருவி போல்
குதித்துக் கொண்டிருக்கிறாய்
உன்னைப் பற்றி நீ
யோசிப்பதேயில்லையா...?
இல்லை...
உன்னை எவரும்
யாசிப்ப தேயில்லையா...

☆ ☆ ☆

நாலுபேர் நாலு விதமாய்க்
கதைப்பினம்
அன்னை சொன்னது
நினைவில் இல்லையா...?
மாவீரர் மரணங்கள்
மனதில் இல்லையா...?
வன்முறைப் பாதையும்
படிதாண்டா மரபுகளும்
உனக்கு கைவிலங்கா...?

☆ ☆ ☆

நாற்ற மெடுத்த
சமுதாயத்தில் நீ
மீண்டும் மீண்டும்...
நாறிக் கொண்டே...!

ஏன்...?
நறுமணம் என்பது
உனக்கு மறுதலையா...!
ஒரு கணம்
சிந்தித்துப் பார்...
கல்லறையில் தூங்கும்
காவியநாயகர்கள்
கனவினை...

☆ ☆ ☆

இளைஞா...
யாகங்கள் செய்து
யாத்திரைக்கு
போகச் சொல்லவில்லை
உன்னை
உருவேற்றி
உலைக்களமனுப்பவில்லை
உறுதியோடு...
தேசவிடுதலைக்காய்...
விடிவெள்ளியாய்...!
விழித்தெழு...!

எஸ்.பி.சக்தி.
உடுவில்.

## ஒட்டாத உறவு

நீ
உறவாக நினைத்தபோது
நான்
உறவாகவிருந்தேன்
வில்லனாய் நினைக்கின்றபோது
வில்லனாகவே இருக்கின்றேன்

உனது
வாழ்தல் முறைகள்
இன்று வரைக்கும்
உனக்கு
வெற்றியளிக்கவேயில்லை
யாரிடமோ மண்டியிட்டு...
பிச்சைகேட்டு...
பூசிமெழுகி...
அலங்கரித்துக் கொள்ளுகின்ற
உனது வாழ்க்கை முறைமை
உனக்கு மட்டுமே
பிடித்துப் போனவைகள்
ஒப்புக்குச் சப்பாணியாக
நாலுபேரை
உன்கூடவே
வைத்திருக்கிறாய்

உனது
வெட்டித்தனமான பேச்சுக்களும்
புழுகு மூட்டைகளும்தான்
உனது சொத்துக்கள்
இவைகளைத் தவிர
வேறென்ன இருக்கிறது
உன்னிடம்?
நீ தீட்டிய
திட்டங்களெல்லாம்
தவிடுபொடியாகி
உனக்கே
குழிபறித்துக்கொண்டிருப்பதை
இன்று நீயே
உணர்ந்து கொண்டிருக்கிறாய்

நாலுபேருக்குத் தெரிய
நீ கதைத்துக்கொள்வதெல்லாம்
வேஷங்கள் தானென்பதை
உனக்குத் தெரியாமலே
எனக்குப் புரிந்துபோன
விடயங்கள்.

உன்பக்கம் இருப்பவர்கள்
கூலிக்கு மாரடிப்பவர்கள்
என் பக்கம் இருப்பவர்களோ
உரிமைக்காய் உயிர்துறப்பவர்கள்

இன்றும் நீ
கிணற்றுத் தவளையாகி
அதற்குள்ளேயே
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
வெளியே இருக்கின்ற
மர நிழல்களின் அருமை
உனக்கெங்கே புரியப் போகிறது?

வெறும்
பணத்திற்கும்...
பதவிக்கும்
பவிசுக்கும்தான் நீ
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
இவைகளையெல்லாம் தாண்டிய
ஒற்றுமையான வாழ்க்கை முறைகள்
அன்புறவுகள்
பாசப்பிணைப்புகள் எல்லாம்
உனக்கு
புரியவே புரியாத சங்கதிகள்
உன்னுடைய வேஷங்கள்...
பிற்போக்கான நடத்தைகள்...
நரிக்குணங்கள்...
மிலேச்சத்தனமான எண்ணங்கள்...
அனைத்தையும் நான்
தெரிந்துகொண்ட பின்னரும்
உன்னுடன்
உறவை வைத்துக்கொள்வதற்கு
நான் பைத்தியக்காரனல்ல
இனி...
உன் உறவு
ஒட்டாத உறவுதான்.

கவிதைக் களங்கள்

- அ.சூரியன்

## அக்கினிக்குஞ்சுகள்

எங்கள் வானம்
இன்னமும்
விடியவே இல்லை.
நினைவுக்கங்குகளில்
ஊசாடும்
உயிரின்
அந்தரங்க நினைவுகளில்
கண்ணீர்க் குண்டுகள்
கனதியாகிறது.

வேல் வடித்த
வீரபரம்பரை
போர்முரசுக்கு
புறமுதுகா காட்டும்?

செருக்களத்தில்
பகையெதிர்த்து
சறுக்கியதைக் கண்டதில்லை
எங்கள்
பரம்பரை
வீரப்பால் குடிக்கும்
ஈழமண்ணில்
புறநானூறு
புதுப்பிக்கப்படுகிறது

வெள்ளிகள் விசிறிய
விரிந்த வானமாய்
தமிழன் வீரம்
விரிந்திருக்கிறது
மீண்டும் ஒரு
பறப்புக்காய்
வசந்தகாலம்
வழுக்கிவிடவில்லை.

எங்கள்
அக்கினிக்குஞ்சுகள்
அணைந்துவிடவில்லை
அவை
பற்றவைத்த நெருப்பு
இன்று
எத்தனை தீவெட்டிகளில்

இதயம் வெந்த
ஈழப் பூமியிது
ஓ!
ஈழவரலாற்றில்
இது
எந்தக் காலம்
எச்சமீட்புக்காலமா?

உலகம்!
கணனி யுகத்தில்
கால்பதித்து
கரைகள் தொடும் வேளை!
நாங்கள் மட்டும்
எலும்புகளையும்! மண்ணையும்
ஆராய்ச்சிகளுக்காய்
அனுப்பிக் கொண்டிருக்கிறோம்
இங்கு!
புதர்களுக்குள்
எத்தனை பூர்வீகம்
புதைந்திருக்கிறது.

ஓ!
ஈழத்தமிழா!
இங்கு
எரியாத தீக்குச்சி
என்னபயன்?
அக்கினி வேள்வியில்
ஆகுதியான
சத்திய தெய்வங்கள் ~ எம்
அக்கினிக்குஞ்சுகள்!

கிராமத்துக்குயில்
ஓவியா கு.றஜீபன்

## யாரோடு நோவோம்...?

காலையின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக சிறுவீதியொன்றினூடாகப் பயணப்பட நேர்ந்தது. இடைவழியில் பயணம் செய்ய முடியாது எனத் திருப்பி அனுப்பப்பட்டேன் என்னைப் போல பலருந்தான். அங்கு இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு இடம்பெறவில்லை. விபத்துக் கூட நேரிடவில்லை. அப்படியானால்...?

வீதியோரமாக இருந்த வீட்டில் தண்ணீர் தாங்கி அமைத்துக் கொண்டிருந்தார்கள். சிமெந்துக் கலவை தயாரிக்கும் 'மேடை'யாக வீதி பயன்படுத்தப்பட்டமையே இந்த வழிமறிப்புக்குக் காரணம்.

தனது வீட்டிற்கு முன்பாகவுள்ள வீதி தன்னுடையது என்றே பலரும் உரிமை பாராட்டுகின்றனர். பலரும் தமது வீட்டின் முன்பாக மண் அணைகளை நிறுவி வேகத் தடைகளை உருவாக்கி விடுகின்றனர். கிராம வீதிகளைக் கடப்பதென்றால் பல வேகத் தடைகளில் 'ஏறி விழுந்தே' செல்ல வேண்டும். யுத்தகாலத்தில் 'இராணுவத்தினர்' அமைத்துக் காட்டிவிட்டுப் பின்னர் மெல்லத் மெல்லத் தளர்த்திய வேகத் தடைகள் இப்போது கிராமப்புற வீதிகள், ஒழுங்கைகளில் தான் வெளிநாட்டுப் பணத்தில் தாராளமாக ஓடும், 'உரிமமற்ற' மோட்டார் சைக்கிள்களின் அசுர வேகமே இத்தகைய தடைகளை ஏற்படுத்த வேண்டிய தேவையை மக்களிடத்தே ஏற்படுத்தியுள்ளன.

எனினும், வீதிகளின் இத்தகைய சட்டமுறையற்ற வேகத் தடைகளை ஏற்படுத்துவதும், வெள்ளம் வடிந்து ஓடுவதற்காக வீதிகளை வெட்டுவதும் சரியானவையல்ல.

இவற்றைச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்கள் கண்டும் காணதது போல் இருப்பதும் கவலைக்குரியது. இராணுவ முகாம்களுக்கு முன்பாகவோ, பொலீஸாருக்கு அருகிலோ நின்று 'துவிச்சக்கர வண்டி உரிமம்' வழங்கும் கட்டாயத்தைச் செய்யும் உள்ளூராட்சி ஊழியர்கள், வீதிகள் இவ்வாறு கேடுறுத்தப்படுவது குறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள், குடியேற்றத் திட்டங்கள் உள்ள கிராம வீதிகள் சிலவற்றினூடாகச் செல்லும் பயணிகள் இன்னுமொரு விதமான சிரமத்தினை எதிர்கொள்வர். வீதியின் இரு மருங்கிலும், அல்லது வீதியின் கணிசமான பகுதியை நிறைத்து ஆண்களும் பெண்களும் கூட்டங் கூட்டமாகக் கதைத்துக் கொண்டிருப்பர். வீதியால் பயணிப்போருக்கோ, வாகனங்களுக்கோ வழிவிடும் எண்ணம் அவர்களுக்கில்லை. வாகன 'ஹோர்ண்' சத்தத்துக்குக் கூட அவர்கள் உசும்புவதில்லை.

இப்போது - வீதிக் கரையில் மணல் விற்பனையும் தாராளமாக நடைபெறுகின்றது.

ஆக, பயணிகள் பாடு திண்டாட்டந்தான்.

- ஏகலைவன்.

# காலாண்டு சீட்டிழுப்பு மூலம் வெகுமதிகளை அள்ளிக்குவிக்கும் ஹற்றன் நஷனல் வங்கி

இலங்கையில் எந்தப் பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் ஒருவருக்கு ஏற்படுகின்ற பணக் கஷ்டங்களின்போது கடனுதவி வழங்கவும் அது தொடர்பாகப் பல சேவைகளைச் செய்யவும் ஹற்றன் நஷனல் வங்கி எப்போதும் முன் நிற்கின்றது என்று வங்கியின் நுகர்வோர் வங்கிச் சேவையின் சிரேஷ்ட முகாமையாளரான என்.பிரேமராஜா தெரிவிக்கிறார்.

வங்கியின் நுகர்வோர் வங்கிச் சேவையின் சிரேஷ்ட முகாமையாளர் என்.பிரேமராஜா மேலும் கூறியதாவது:—

''ஹற்றன் நஷனல் வங்கி ஏழு வகையான கடனுதவிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. இந்தக் கடனுதவிகளின் மூலம் வாடிக்கையாளர்கள் தமது பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

## ஷாந்தி வீட்டுக்கடன் திட்டம்

ஹற்றன் நஷனல் வங்கியின் முக்கியமான கடன் திட்டங்களில் ஒன்று ஷாந்தி வீட்டுக்கடன் திட்டம். அரச அனுசரணையுடனான இந்தக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபா வரையிலான கடனைப் பெறலாம். இந்தக் கடனானது 15 வருடங்களில் திருப்பிச் செலுத்தக் கூடியதாகும். மாதாந்தம் 3,000 ரூபா தொடக்கம் 20,000 ரூபா வரையிலான வருமானம் உடையோர் இந்தக் கடனைப் பெறலாம். இக்கடனுக்கான வருடாந்த வட்டி 9.5 சதவீதமாகும். ஆவணங்கள் சரியாக அமையுமிடத்து 14 நாட்களுக்குள் கடனைப் பெறலாம். நாடளாவிய ரீதியில் 132 வாடிக்கையாளர் நிலையங்களில் கடன் பெறலாம். வெளிநாடுகளில் வசிப்பவர்களும் இந்தக் கடனைப் பெறலாம். அத்துடன், தனியாகவும் கூட்டாகவும் கடனுக்கு விண்ணப்பிக்கலாம். வெளிநாட்டு நாணயங்களிலும் கடனைப் பெறலாம்.''

— இப்படி அவர் கூறினார்.

ஹற்றன் நஷனல் வங்கியின் ஷாந்தி நீண்டகால வீட்டுக் கடன் தொடர்பாக அவர் தெரிவிக்கையில்—

''குறைந்த நடுத்தர வருமானம் பெறுபவர்கள் இலகுவில் செலுத்தக்கூடிய கடன் திட்டம் இதுவாகும். இந்தக் கடன் திட்டத்தினால் ஆயுட்காலம் முழுவதும் அமைதியும் சாந்தியும் கிடைக்கும்.

## உதாதருவ திட்டம்

உதாதருவ கடன் திட்டத்தில் பிரவுண் அன்ட் கம்பனியின் பொருட்களை வாங்குவதற்கு வழி வகுத்துக் கொடுக்கப்படுகின்றது. 18 மாதத்தில் கடனை மீள செலுத்த வேண்டும். வட்டி 18% ஆகக் காணப்படும். திட்டத்தின் மாதச் சம்பளத்தின் அடிப்படையில் மீள் செலுத்தப்படும் பெறுமானம் மாறும்.

## நுகர்வோர் திட்டம்

10,000 ரூபாவுக்கு குறைந்த மாதச் சம்பளம் பெறும் நபர்களுக்காக நுகர்வோர் கடன் திட்டம் உள்ளது. இந்தக் கடன் திட்டத்தின் மூலம் எந்தத் தேவைகளுக்கும் கடனுதவி பெற்றுக்கொள்வதோடு அதனை 18% வட்டியுடன் 24 மாதத்தில் திருப்பிச் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

## சிறுவர் சேமிப்பு

சிங்கித்தி சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் சிறுவர்களுக்காக சிங்கித்தி கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பெற்றோரின் பெயரில் சிறுவர்களின் படிப்பு சம்பந்தமான (கணினி வாங்க, பாடசாலைக் கட்டணம், புத்தகம் வாங்க....) தேவைகளுக்குக் கடன் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தில் கடன் பெறப்படும் தொகைக்கு அமைய அனைத்தும் மாறுபடும்.

## அடகுசேவை

அவசரத் தேவைகளுக்குப் பணம் பெறும் முகமாக அடகு வைப்பவர்களுக்கு அடகு சேவையும் வழங்கப்படுகிறது. கடன் கால எல்லை ஒரு வருடமாக இருந்தாலும் முடிந்தளவு பணம் செலுத்தி அதனைப் புதுப்பித்துக் கொள்ள முடியும். இதற்கு 1.3 வரையிலான மாத வட்டி அறவிடப் படுகிறது.'' — இப்படி அவர் கூறினார்.

வடக்கு — கிழக்கில் வாழும் மக்களின் அபிவிருத்திக்கு ஹற்றன் நஷனல் வங்கி ஏதாவது விசேட திட்டங்களை வைத்துள்ளதா எனக் கேட்டதற்கு அவர், ''வடக்கு — கிழக்கு என்று விசேட திட்டங்கள் இல்லாவிட்டாலும் இந்தக் கடன் திட்டங்களை வடக்கு — கிழக்கிலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

''அத்துடன், கடந்த வருடம் வரைக்கும் அங்கு இருந்த எமது வங்கிக் கிளை இப்போதுதான் கொஞ்சம் உற்சாகமாக செயலாற்றக்கூடியதாக இருக்கின்றது'' — என்றார்.

# இயற்கைத் தைலங்களினால் தயாரிக்கப்பட்ட கலர் கிறீம்

ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஹெயார் கலர் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் சர்வதேச நிபுணத்துவம் பெற்ற **Garnier** நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்படும் புதிய ஹெயார் கலர் **Garnier - Colour Naturals** ஆகும். இயற்கைத் தைலங்கலான இந்நிரந்தர ஹெயார் கலர் கிறீமானது நரையை முற்றாக மறைத்து கேசத்திற்கு இயற்கையான பாதுகாப்பை அளிக்கின்றது.

புதிய **Garnier - Colour Naturals** கேசத்தில் இலகுவாகப் பரந்து அடி மயிரிலிருந்து நுனிவரை கேசத்திற்கு இயற்கையான தோற்றத்தையளிக்கும் நிறத்தைக் கொண்டதுமாகும். இயற்கைத் தைலங்களான **Garnier - Colour Naturals** கேசத்திற்குப் வலுவையும், நீண்டகால மென்மையையும், பாதுகாப்பையும் தருகிறது. இது இயற்கையான கறுப்பு, இருண்டபழுப்பு, இளஞ்சிவப்பு, பழுப்பு, இளம் பழுப்பு, லேசான தங்கப் பழுப்பு ஆகிய 6 வெவ்வேறு நிறங்களில் கிடைக்கின்றது.




ஹெயார் கலர் உற்பத்தியில் தேர்ச்சிபெற்று விளங்கும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற **Garnier** நிறுவனம் இயற்கையிலிருந்து பெறப்படும் கலவைகளைக் கொண்டு நீண்டகாலம் நீடித்திருக்கும் - இலகுவாக உபயோகிக்கக் கூடிய - ஹெயார் கலர்களை உற்பத்தி செய்கின்றது.

இந்நிறுவனம் ஐரோப்பாவில் இயற்கை அழகு சாதனப்பொருட்களின் உபயோகத்தில் முதலிடம் வகிக்கின்றது. மேலும், இந்நிறுவனம் இவ்வாண்டு தனது 99ஆவது வருடப் பூர்த்தியை சிறப்பாகக் கொண்டாடுவதுடன் சர்வதேச ரீதியில் கேசப்பாதுகாப்பு, சருமப் பாதுகாப்பு மற்றும் ஹெயார் கலர் உற்பத்தியில் சிறந்து திகழும் ஓர் நிறுவனமாகும்.

சர்வதேச கோட்பாடுகளிற்கிணங்க பலதரப்பட்ட நிறங்களில் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படும் **Garnier - Colour Naturals**ஐ ஆண், பெண் இருபாலாரும் பாவிக்கலாம்.

**Garnier** நிறுவனம் ஆசியாவில் காணப்படும் கேச மற்றும் சரும வேறுபாடுகள், காலநிலை மாற்றங்கள் மற்றும் கொள்வனவாளரின் தெரிவு என்பன பற்றிய நீண்ட ஆராய்ச்சிகளின் பின்பே இலங்கையில் அதன் கேச, சரும மற்றும் ஹெயார் கலர் உற்பத்திகளை அறிமுகப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இயங்கி வரும் **Garnier** நிறுவனமானது தற்போது அமெரிக்கா, கனடா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசியா ஆகிய பகுதி நாடுகளில் அதன் நிர்வாகத்தை மேற்கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பணப் பரிமாற்றலில் புதிய சரித்திரம் படைக்கும் MMBL நிறுவனம்

இன்றுஎங்குபார்த்தாலும்,யாரைக் கேட்டாலும் அனைவரதும் வாயிலும்வெளிநாடுகளிலிருந்து பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு உச்சரிக்கப்படும் ஒரே பெயர் வெஸ்டன் யூனியன்.

இந்த வெஸ்டன் யூனியன் நிறுவனம் இவ்வளவு தூரம் இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. குறுகிய காலத்தில் இந் நிறுவனத்தின் இந்த அசுர வளர்ச்சி குறித்து நாம் எம்.எம்.பி.எல். நிறுவனத்தின் பணிப்பாளரான கொரேராவிடம் வினவியபோது—

''வெஸ்டன் யூனியனானது உலகலாவிய ரீதியில் 198 நாடுகளில்தனது நிறுவனங்களை நிறுவி அவற்றினூடாகப் பணப் பரிமாற்றலை செய்து வருகிறது. இதற்கமைய இலங்கையில் மேர்கன்ட்டைல் வங்கி, வெஸ்டன் யூனியன் நிறுவனத்தின் உத்தரவாதமுடைய முகவராகும்.

''மேர்கண்ட்டைல் வங்கியின் கிளை நிறுவனமான MMBL Money Transfer Ltd. இலங்கை முழுவதும் 225முகவர் நிலையங்களினூடாகத் தற்பொழுது தனது பணப் பரிமாற்றல் சேவையினை நிகழ்த்தி வருகின்றது.'' — என்றார்கள்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:—

எமது இந்த வலைப்பின்னல் மிகவும்சக்திவாய்ந்தது. வாடிக்கையாளர்களை அவர்களது இடத்திற்கே சென்று சந்திக்கும் ஓர் திட்டமாகத்தான் எம்மால் 225முகவர் நிறுவனங்கள் நிறுவப்பட்டு பராமரிக்கப் பட்டு வருகின்றன.

இன்று இவ்வாறு இருக்கும் வலைப்பின்னலமைப்பை எமது விரிவாக்கல் திட்டத்திற்கமைய இவ்வருட இறுதிக்குள் 350 நிறுவனங்களாகக் கூட்டுவது அடுத்த வருட முடிவில் அவற்றினை 500 ஆக அதிகரிப்பதும் எமது திட்டமாகும்.

தற்பொழுது வடபிராந்தியத்தை மாத்திரம் எடுத்து நோக்குவோமானால் அதன் அனைத்து நகரங்களிலும் ஒவ்வொரு முகவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

MMBL MONEY TRANSFER (PVT) LTD.
Hotline: 2 372 333

எமது நிறுவகத்தின் நம்பகத்தன்மை மற்றும் அதன் உறுதித்தன்மையினை நோக்குவோமானால் உலகளாவிய ரீதியில் நிறுவப்பட்டிருக்கும் அனைத்து வெஸ்ரன் யூனியன் நிறுவனங்களுக்கும் தாய் நிறுவனமாக — அமெரிக்காவில் முதல் 500 நிறுவனங்களுக்குள் வரிசைப் படுத்தப்பட்டிருக்கும் பாரிய நிறுவனமான — First Data Corporation தொழிற்பட்டு வருகின்றது. இதன் உத்தியோக பூர்வ முகவராக இலங்கையில் எமது தலைமை நிறுவனமான மேர்கன்டைல் வங்கி திகழுகின்றது.

அத்தோடு எமது அனைத்து செயற்பாடுகளும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மத்திய வங்கியின் அங்கீகாரத்தினை இந்தவிடத்தில் நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில்தற்பொழுது சட்டவிரோதமான முறையில் பணப் பரிமாற்றம் பலவழிகளில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. ஆனால் எமது நிறுவனம் இலங்கை அரசினது அனைத்து சட்டதிட்டங்களுக்கும் அமைய தனது நடவடிக்கைகளை நடாத்தி வருகின்றது.

அடுத்ததாக, எமது வாடிக்கையாளர் சேவையினை நோக்கவேண்டும். எமது அனைத்து நடவடிக்கைகளுமே எமது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவது என்பதையே மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக இலங்கை முழுவதும் அமைந்திருக்கும் எமது அனைத்து முகவர் நிலையங்களிலும் பணப் பரிமாற்றலுக்கு வரும்வாடிக்கையாளர்கள் அதிகளவாக பத்து நிமிடத்தினைத் தான் அந்நிலை செலவிட வேண்டிவரும். அந்தக் குறுகிய கால அவகாசத்தில் அவர்களுக்குரிய சேவை அவர்களுக்குக்கிடைப்பதற்கு எமது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் வழி சமைப்பார்கள்.

வாடிக்கையாளர் நலன்கருதி எமது முகவர் நிலையங்களில் மும்மொழிகளிலும் சரளமாக உரையாடக்கூடிய உத்தியோகத்தர்களே கடமையாற்றி வருகின்றனர். எமது சேவை நேரம் காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நீடித்திருப்பதும் மற்றும் 365 நாட்களும் எமது முகவர் நிலையங்கள் திறந்திருப்பதும் எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் எவ்வளவு முக்கியத்துவத்தை வழங்குகின்றோம் என்பதை எடுத்துக்காட்டும். இத்தோடு நின்றுவிடாமல் 24 மணி நேர வாடிக்கையாளர் சேவைக்கு விசேடமாக ஒரு தொலைபேசி இலக்கமும் ஒதுக்கப்பட்டுள்ளது.011—2 372 333 எனும் தொலைபேசி ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளலாம். அனைத்துக்கும்ஓர்படி மேல்சென்று எமது வாடிக்கையாளர் சேவை இணையத்தளம்ஒன்று அடுத்தமாதம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. ( www.mmblmoneytransfer.com)

எமது வலைப்பின்னலில் இணைந்திருக்கும் முகவர்களை நாம் எவ்வாறு தெரிவு செய்தோம் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். இம்முகவர்களின் நிதிநிலைமைகள் நன்றாகப்பரீசிலிக்கப்பட்டு முகவர்நிலையத்தின் அமைவிடத்தை மற்றும் சுற்றுச்சூழல் என்பவை எம்மால் நேரடியாகக் அவதானிக்கப்பட்டு அனைத்து விவரங்களும் இந்தியாவின் பெங்களூரில் அமைந்திருக்கும் எமது பிராந்திய அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவர்களது உத்தரவாதத்தினை பெற்ற பின்னரே முகவர்நிலையம் இலங்கையில் ஸ்தாபிக்கப்படுகின்றது.

எமது பணப்பரிமாற்றல் நடவடிக்கை எவ்வாறு இடம்பெறுகின்றது என்பதை நோக்குவதும் நல்லது. இலங்கைக்கு லண்டனிலிருந்து ஒருவர் பணத்தினை அனுப்புகிறார் என்றால் அவர் செய்ய வேண்டியது லண்டனில் அமைந்திருக்கும் வெஸ்ரன் யூனியன் நிலையத்திற்கு சென்று பணத்தினைப் பெறுவரின் பெயர், விலாசம், பணத்தின் பெறுமதி போன்றவற்றைப்படிவத்தில் நிரப்பிக்கையளிப்பதே. அப்போது அவருக்கு எமது உத்தியோகத்தரினால் பத்து இலக்கங்களையுடைய ஒரு குறியீட்டு இரகசிய இலக்கம் வழங்கப்படும். (M.T.C.N) அதன் பிறகு அவர் இலங்கையில் பணத்தினைப் பெற இருப்பவருடன் தொடர்பு கொண்டு அந்த இரகசிய இலக்கத்தைத் தெரிவிக்க வேண்டும். அதன் பின் பணத்தினைப் பெறுபவர் தனக்கு அருகாமையிலுள்ள வெஸ்ரன் யூனியன் முகவர் நிலையத்திற்கு சென்று தனது விவரத்தினையும் அந்த இரகசிய இலக்கத்தினையும் கையளித்ததும் இவ்விரு விவரங்களும் கணினி மூலம் சரிபார்க்கப்பட்டு (Match) அந்தநிமிடமே அவருக்குரிய பணம் வழங்கப்படும். முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது பணத்தினைப் பெறுபவர் எந்தவிதமான கட்டணத்தினையும் செலுத்த வேண்டிய தேவை இல்லை. சாதாரணமாக உலகததின் எந்த மூலையிலிருந்தும் ஒரு பணப்பரிமாற்றலானது ஐந்து நிமிடங்களுக்குள் இடம்பெறும் என்பது வாடிக்கையாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

மேலும் மேலும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது பணப் பரிமாற்றலை இலகுபடுத்துவதே எமது நிறுவனத்தின் ஒரே குறிக்கோளாகும்.

# குழந்தையோடு சேர்ந்து வளரும் 'அருணலு' சேமிப்புக் கணக்கு மீதி!

உங்கள் குழந்தையின் வருங்காலத்துக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் ''கொமர்ஷல்'' வங்கியானது 'அருணலு' சிறுவர் சேமிப்புக்கணக்குத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இக் கணக்கில் சேமிக்கப்படும் மீதி உங்கள் அன்புச்செல்வங்களின் வளமான வருங்காலக் கனவுகளை நனவாக்க உதவும்.

— இவ்வாறு 'அருணலு' திட்டம் குறித்து விளக்கம் அளிக்கும்பொழுது கொமர்ஷல் வங்கியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ரணில் பெர்னாண்டோ இதுபற்றி மேலும் கூறும் தகவல்கள் வருமாறு:—

குழந்தைப் பருவம் தொடக்கம் பராயமடையும் வரை உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்தையும் சிறப்பாக மேற்கொள்ள 'அருணலு' சேமிப்புக் கணக்கு உதவுகின்றது. உங்கள் குழந்தைச் செல்வம் வளர, வளர 'அருணலு' கணக்கு மீதியும் அதிகரித்துச் செல்லும்.

கொமர்ஷல் வங்கியிலுள்ள நாம் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிவோம். இதனால், 'அருணலு' சிறுவர் சேமிப்புக் கணக்கு உங்கள் அன்புச்செல்வங்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் நிதியை வழங்கி அவர்களின் அறிவாற்றல் விருத்திக்கும், சுபீட்சமான எதிர்காலத்துக்கும் வழிவகுக்கின்றது.

ஒவ்வொரு வருடமும், கொமர்ஷல் வங்கியானது ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில், பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொள்ளும்சிறார்களுக்குப்பணப் பரிசில்களை வழங்கி வருகின்றது. சென்ற வருடம் கூட அகில இலங்கை ரீதியில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சிறப்பாகச் சித்திபெற்ற 50 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பணப்பரிசுகளை வழங்கி கௌரவப்படுத்தியது.

மேலும், இத்திட்டத்தினூடாக பின்வரும் நன்மைகளை நாம் வழங்குகின்றோம்.

* வட்டியானது நாளாந்தம் நிலுவையின் அடிப்படையில் கணக்கிட்டு மாதாந்தம் முடிவில் கணக்கில் சேர்க்கப்படும்.

* பிள்ளையின் அவசர வைத்திய, கல்வித் தேவைகளுக்குப் பணத்தை மீளப்பெற முடியும்.

இவ்வருடம் ஆவணி மாதத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நெருங்கி வருவதால் தாமதமின்றி இன்றே 'அருணலு' சிறுவர் கணக்கு ஒன்றை விரைவாக ஆரம்பியுங்கள்!

பரீட்சை நடைபெறும் திகதிக்கு முன்பாக, ரூபா 5,000க்கு குறையாத மீதி இருந்து பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெறும் சிறார்களுக்குப் பணப் பரிசுகள் காத்திருக்கின்றன.

அருணலு.......
உங்கள் அன்புக்குரிய
எந்தக் குழந்தைக்கும் மிகவும்
உகந்த அன்பளிப்பாகும்!

